www.gnanam.info
www.gnanam.lk

மார்ச் 2024

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

286

விலை :
ரூபா 100/=



பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் நாணயங்கள்...



ஞா.பா.

தற்கால வழக்கத்திலே நாணயம், பணம், ரூபாய் போன்ற சொற்கள் ஒருபொருள் குறித்துநிற்கின்றன. பேச்சுவழக்கிலே துட்டு, சல்லி போன்ற சொற்களும் நாணயம் என்கிற பொருளையே தற்காலத்தில் தருகின்றன. ஆனால் 150–200 வருடங்களுக்கு முன்னதாக இச்சொற்கள் அனைத்தும் இலங்கையிலே தனிப்பட்ட பெறுமதியையும் பொருள்களையும் கொண்டிருந்தன என அறியமுடிகின்றது. பண்டைய காலத்திலே பொன் முதலியவற்றை மூங்கில் குழாய்களில் வைத்துப் பாதுகாத்தனர். இதிலிருந்து நாணம் (மூங்கில்) மற்றும் நாளம் (குழல்) ஆகியன நாணயமாயிற்று. பைசா, நாணயம், பணம் எவ்வாறு தோன்றின என்பது பற்றி 'சித்தாந்தம்' என்கிற தமிழக சஞ்சிகையிலே 1916 – ஒக்டோபர் மாத இதழில் மாகறல் கார்த்திகேய முதலியார் எழுதிய 'நாணயம்' என்கிற கட்டுரையின் ஒரு பகுதியை இங்கு தருகின்றோம்.

> பைசா என்பதற்கு அரசன் தனது மார்பின் விற்குறியைப் பொறித்துச் செய்யப்பட்ட நாணய மென்பது பொருள்.
>
> சாப=வில். அது பைசா என நிலைமாறித் திரிந்தது.
>
> இப்பைசாவி லிருந்து தான் நாணயங்கள் பெருகின, நாணயமென்பதற்கு மூங்கிற் குழாயில் பொதிந்து வைப்பதென்பது பொருள்.
>
> அக்காலத்தில் பொன் முதலியவற்றை மூங்கிற் குழாயில் வைத்துக் காத்து வந்தனர்.
>
> நாணம் நாணயமாயிற்று, நாளம், நாணமாயிற்று. நாணம்=மூங்கிற் குழாய்,
>
> நாணக்குழாய்=தாலியுருவில் பக்கத்தே கோப்பது.
>
> நாணயம்=சொல்தவறுமையுமாம். அது பொன்முதலிய வற்றைக் கொடுக்கல் வாங்கல்களா லுண்டாவது.
>
> பண=ஹண—(கன்னடம்)
>
> பகரத்தை ஹகாரமாக உச்சரிப்பது கன்னடர் வழக்கு. பணமென்பது முதல் செப்பு நாணயத்தையும் பிறகு பொன் நாணயத்தையும் உணர்த்தி நிற்கும்.

1800களில் பணம், ரூபாய், சல்லி, துட்டு ஆகியன எத்தகைய பெறுமதியை இலங்கையிலே கொண்டிருந்தன என்பதை 1849ஆம் ஆண்டு வெளியான 'பாலகணிதம்' என்னும் நூலின் துணைகொண்டு அறியலாம். வட்டுக்கோட்டை அமெரிக்கன் மிஷனரியினால் பாலர்களுக்குக் கற்பிப்பதற்காக வெளியிடப்பட்ட இந்நூலானது, தமிழ் அச்சு வரலாற்றிலும் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தைப்பெற்றுள்ளது. சிறுவர்களுக்காக அச்சேறிய முதலாவது கணித நூல் என்னும் அடையாளத்தை தமிழ் அச்சியல் வரலாற்றிலே இந்நூல் தனதாக்கிக்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**இலங்கைநாணயம்.**

| | |
|---|---|
| ௩. சிங்கச்சல்லி<br>௪. சின்னச்சல்லி | ௧. துட்டு |
| ௪. துட்டு | ௧. பணம் |
| ௧௨. பணம் | ௧. இறையால் |
| ௧௬. பணம் | ௧. ரூபாய் |

1849ஆம் ஆண்டு இலங்கை வட்டுக்கோட்டையில் அச்சேறிய பாலகணித நூலின் 40ஆம் பக்கம். கீழே தற்கால புழக்கத்திலுள்ள எண்களால் தரப்பட்டுள்ளது

| | | |
|---|---|---|
| 3 | சிங்கச் சல்லி | = 1 துட்டு |
| 4 | சின்னச் சல்லி | = 1 துட்டு |
| 4 | துட்டு | = 1 பணம் |
| 12 | பணம் | = 1 இறையால் |
| 16 | பணம் | = 1 ரூபாய் |

(குறிப்பு : இக்கட்டுரையில் காட்டப்பட்ட [illegible] ஆசிரியரின் தனிப்பட்ட சேகரிப்பிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளி: 24
சுடர்: 07
286

# பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

ஆசிரியர் குழு

ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்
இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்
நிர்வாக ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்

ஓவியர்: கிறிஸ்டி நல்லரெத்தினம்

தொடர்புகளுக்கு

தொ.பேசி. ☞ 0094-11-2586013
0094-77-7306506
தொ.நகல் ☞ 0094-11-2362862
இணையம் ☞ www.gnanam.info
www.gnanam.lk
தளம்.ஞானம்.இலங்கை
மின்னஞ்சல் ☞ editor@gnanam.info
editor@gnanam.lk
அஞ்சல் ☞ 3B-46th Lane, Colombo-6,
Sri Lanka

வங்கி விபரம் ☞ T. Gnanasekara Iyer
Acc. No. - 009010344631
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(மணியோடர்மூலம் சந்தா அனுப்பு பவர்கள் வெள்ளவத்தை தபால் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்)

சந்தா விபரம் ☞ Sri Lanka
ஒரு வருடம் :ரூ 1,000/=
ஆறு வருடம் :ரூ 5,000/=
ஆயுள் சந்தா :ரூ 20,000/=

| | ஒரு வருடம் |
|---|---|
| Australia (AU$) | 50 |
| Europe (€) | 40 |
| India (Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada ($) | 50 |
| UK (£) | 40 |
| Singapore (Sin. $) | 50 |
| Other (US $) | 50 |

⊙ ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.
⊙ புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.
⊙ பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.
⊙ படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.

## இதழினுள்ளே.....

⊙ **கவிதைகள்**

கனகசபாபதி செல்வநேசன் 04
இ.ஜீவகாருண்யன் 10
கலாநிதி செ. ஞானராசா 25
பிமல் குஹா / சோ.ப. 34
(மொழிபெயர்ப்புக் கவிதை)

⊙ **சிறுகதைகள்**

பொ. கருணாகரமூர்த்தி 05
திருமதி ஹரண்யா பிரசாந்தன் 11
சீ ஹூய் / சு.முரளிதரன் 18
(மொழிபெயர்ப்புச் சிறுகதை)
செல்லையா சுப்ரமணியம் 26
கேணிப்பித்தன் 37

⊙ **கட்டுரைகள்**

செல்வி கு. ஹாரணி 03
வாகரைவாணன் 08
தமிழ்மணி அகளங்கன் 15
ஆசி கந்தராசா (அறிவியல் புனைவு) 23
ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் 33

⊙ **பத்தி**

பேராசிரியர் துரை மனோகரன் 35

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பக்கம்

## சர்வதேச மகளிர் தினமும் மலையகப் பெருந்தோட்டப் பெண் தொழிலாளர்களும்

நமது நாட்டில் வருடா வருடம் சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டங்கள் பெரும்பாலும் நகர்ப்புறங்களிலேயே நடைபெறுகின்றன. இக்கொண்டாட்டங்களில் ஈடுபடுவோரும் நகர்ப்புற மேல் தட்டுப் பெண்களாகவும் நடுத்தரவர்க்கப் பெண்களாகவுமே காணப்படுகின்றனர். இந்த, சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுவதற்கு மூலகாரணமானவர்கள் உழைக்கும் கீழ்த்தட்டுப் பெண்வர்க்கமே என்பதனை உணர்ந்து கொள்ளாத வகையிலேதான் இக் கொண்டாட்டங்கள் நடைபெறுவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

சர்வதேச மகளிர் தினம் எவ்வாறு தோற்றம் பெற்றது?

பிரான்சிய அரசியற் புரட்சியின் போது அந்நாட்டின் தலைநகரிலுள்ள உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த பெண்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள் – சமுதாயத்தில் ஆணுக்கு நிகராகப் பெண்ணுரிமை, வேலைக்கேற்ற ஊதியம், எட்டுமணிநேர வேலை, பெண்களுக்கு வாக்குரிமை, அடிமைத்தளையிலிருந்து விடுதலை போன்றவை தமக்கு வேண்டுமெனக் கையில் கிடைத்த ஆயுதங்களுடன் தெருக்களில் அணிதிரண்டார்கள்.

கொதித்தெழுந்த பெண்களைச் சமாதானப்படுத்த முயன்ற அந்நாட்டு அரசன் லூயிஸ் பிலிப், முடியாது போகவே முடிதுறந்தான். இக்கிளர்ச்சியில் அரசனின் மெய்ப் பாதுகாவலர்கள் இருவர் கொல்லப்பட்டனர். இச் செய்தி ஐரோப்பா எங்கும் பரவி அங்கெல்லாம் பெண்களின் கிளர்ச்சிகள் வெடித்தன. ஜெர்மனி, ஆஸ்திரியா, டென்மார்க், இத்தாலி நாடுகளைச் சேர்ந்த பெண் பிரதிநிதிகள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் பிரான்ஸில் இரண்டாவது குடியரசை நிறுவிய அரசன் லூயிஸ் பிளாங், அரசவை ஆலோசனைக் குழுவில் பெண்களை இடம்பெறச் செய்யவும், பெண்கள் வாக்குரிமை பெறவும் ஒப்புதல் தந்தான். அந்தநாள் 1848ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதியாகும்.

போராடினால்தான் உரிமைகள் கிடைக்கும் என்ற சிந்தனை உலகெங்கும் உள்ள பெண்களிடம் வலுப்பெறத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து சர்வதேச மகளிர் அமைப்புத் தோற்றுவிக்கப்பட்டது. இந்த அமைப்பின் சார்பில் 1911 ஆம் ஆண்டு மார்ச் 19 ஆம் திகதி ஹேகன் என்ற இடத்தில் பல்வேறு நாட்டு மகளிர் பிரதிநிதிகள் கூடி முதலாவது சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடினார்கள். அங்கு நடைபெற்ற கூட்டத்திலேதான் அரசன் லூயிஸ் பிளாங் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்க உடன்பட்ட நாளான மார்ச் 8 ஐ நினைவு கூரும் வகையில் அந்த நாளை ஆண்டு தோறும் சர்வதேச மகளிர் தினமாகக் கொண்டாடுவதற்கு முடிவு செய்யப்பட்டது.

எமது நாட்டில் நடைபெறும் சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டங்களில், மலையகத் தோட்டப்புறப் பெண் தொழிலாளர்கள் பங்குபற்றுவது மிகமிகக் குறைவாகவே இருக்கிறது. அவர்களில் பெரும்பாலானோர் இந்த மகளிர் தினம் பற்றி அறிந்தவர்களாகவோ அலட்டிக் கொள்பவர்களாகவோ தெரியவில்லை.

இவர்கள் இன்றும் உரிமை மறுக்கப்பட்டவர்களாகவே இருக்கின்றார்கள். சுய ஆளுமை அற்றவர்களாக தந்தை, கணவன், சகோதரன் ஆகியோரைச் சார்ந்தே வாழ்கிறார்கள். ஆணாதிக்க ஒடுக்கு முறைக்கு உட்பட்டவர்களாக இருக்கின்றனர். பதினைந்து வயதிலிருந்தே தொழிலாளர்களாகிவிடும் இவர்கள் கொழுந்துக் கூடைகளை முதுகில் சுமந்து மலை மலையாக காலை முதல் மாலைவரை கடினமாக உழைப்பவர்கள்.

இவர்களைப் பற்றி இன்றைய பெண்ணியவாதிகள் உரத்துச் சிந்திக்கவேண்டும்.

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்ணியம் பேசுவோம்

செல்வி கு. ஆரணி
பேராதனைப் பல்கலைக்கழகம்
கலைப் பீடம்-2ம் வருட மாணவி

**"மங்கையராகப் பிறப்பதற்கே – நல்ல
மாதவஞ் செய்திட வேண்டும் அம்மா!
பங்கையர்க்கைந் நலம் பார்த்தலவோ – இந்தப்
பாரில் அறங்கள் வளரும் அம்மா!"**

என்று பெண்ணின் பெருமையினைத் தேசியவிநாயகம்பிள்ளை அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார். இவ்வாறு பெண்ணின் பெருமை யினை எழுத்து வடிவில் மாத்திரம் ஏற்றுக் கொள்ளுகின்ற இந்த சமூகம் அவளது அருமையினை நிஜத்தில் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது. அதுதான் உண்மை சங்க காலம் தொட்டு இக்காலம் வரை பெண்ணிற்கு பாதுகாப்பு எங்கே? அவளுக்கென்று ஒரு வரையறைகளினைக் கொடுத்து இந்த சமூகம் முடக்கி வைத்திருக்கின்றது.

பெண்ணின் நெற்றியினை மூன்றாம் பிறைக்கும் அவளது கண்ணினை கயல் மீனுக்கும் அவளது முகத்தினை நிலாவிற்கும் ஒப்பிட்டு கவிதை படைக்கின்றது சமூகம். இது பெண்ணுக்கு தேவையா என்றால் நிச்சயமாக இல்லை இவை வெறும் சாக்குப் போக்குக்கான செயற்பாடுகள் மாத்திரம்தான் பெண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என்ற வரையறைகளினை இன்னமும் இந்த சமூகம் பேணுகின்றது என்பதுதான் வருத்தத்திற்குரிய விடயம்.

பெண் என்றால் வெள்ளையாக அழகாக இருக்க வேண்டும் என்று இந்த சமூகம் எதிர்பார்ப்பது ஏன்? அழகு என்பது அவர் அவர்கள் பார்க்கின்ற விதத்தில்தான் இருக்கின்றது. ஆனாலும் இந்த சமூகம் வெள்ளையாக, மெலிவாக இருப்பதுதான் அழகு என்று எல்லோருடைய மனதிலும் பசுமரத்தாணி போல பதிய வைத்துவிட்டது.

பெண் என்றால் அழலாம், நீ ஆண் பிள்ளையடா அழக்கூடாதுடா என்று இந்த சமூகம் சொல்லி வளர்ப்பதில் என்ன நியாயம் இருக்கின்றது. பெண்களினைப் போலத்தான் ஆண்களும் அவர்களுக்கும் உணர்வுகள் இருக்கின்றன. இவ்வாறு பாகுபடுத்தி பார்ப்பதில் தான் வேறுபாடுகளும் முரண்பாடுகளும் தோன்றுகின்றன.

**"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்"**

என்ற பாரதியாரின் புதுமைப் பெண்கள் எத்தனையோ கோடி பேர் இன்று தோன்றி விட்டார்கள். ஆயினும் பெண்களுக்கு தினம் தினம் அச்சுறுத்தல்களும், அநியாயங்களும், பாலியல் துன்புறுத்தல்களும் நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

ஒரு பெண் வேலைக்கு செல்கின்றாள் என்றால் குடும்பத்திடம் சரி வேலைத் தளத்திலும் சரி அவளுக்கு எவ்வளவோ இன்னல்கள் ஏற்படுகின்றன. இவற்றினை எல்லாம் முறியடித்து அவள் வந்தாள் என்றால் இவள் பெண் தானே என்று இந்த சமூகம் பார்க்கின்றது. இவள் பெண் என்பதற்காக இவளுக்கு முன்னுரிமையும் அதே சமயத்தில் பெண் தானே என்று இவளை எந்த இடத்திலும் நிராகரிக்கவும் கூடாது அவளுக்கு திறமை இருந்தால் அவள் வரலாம். இதனை இந்த சமூகம் ஏற்றுக் கொள்ள வேண்டும். பெண் என்ற அடையாளத்தினால்தான் அவளுக்கு கிடைத்தது என்ற மனநிலையினை முதலில் மாற்ற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளி மாணவியிலிருந்து பாக்கு இடிக்கும் பாட்டி வரை துஷ்பிரியோகம் என்பது தினம் தினம் நடந்து வருகின்றது. பேருந்து களிலும் சரி புகையிரதங்களிலும் சரி பாலியல் தொல்லைக்கு உள்ளாகி வருகின்ற பெண்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. சட்டங்கள் எவ்வளவு வலுப்பெற்றாலும் இதற்கு முடிவு கட்டிவிட முடியாது. ஒவ்வொருவரும் தனது குடும்பத்தில் இருக்கின்ற பெண்களினைப் போலவே ஏனைய பெண்களையும் நினைத்து விட்டாலே போதுமானது.

முன்னர் போல இல்லை நாங்கள் பெண்களுக்கு சுதந்திரம் வழங்கு கின்றோம் என்று இந்த சமூகம் கூறுகின்றது ஆனால் ஒன்றை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும் ஒருவனுக்கு சுதந்திரம் என்பது இன்னொருத்தனால் வழங்கப்படுவ தில்லை. அவன் பிறக்கும் பொழுதே சுதந்திரத்துடன் தான் பிறக்கின்றான் ஆனால் இந்த சமூகத்தில் ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி எதைப் பெற வேண்டுமானாலும் போராடித் தான் பெற வேண்டி உள்ளது. அதிலும் பெண்களின் நிலையோ மிக மோசமாக உள்ளது.

மூடநம்பிக்கைகள், பிற்போக்குத் தனமான சிந்தனைகளில் இருந்து இந்த சமூகம் எவ்வளவு மாறினாலும் இன்னும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. என்றொரு நாள் பெண் யாருடைய தயவுதாட்சணையும் இல்லாது நள்ளிரவு வேளையில் பயணிக்கின்றாளோ அன்றுதான் இந்த சமூகம் பெண்ணினை ஒரு சக ஒரு மனிதராக நோக்குகின்றது என்று அர்த்தம். அதுவரைக்கும் பெண்ணியம் என்பது பேசப்பட்டு கொண்டுதான் இருக்கும்.

○○○

# நாடகமே உலகம்...

ஓடி... ஓடி... ஓடி... ஓடி...
வெளி நாட்டிலுள்ளவரை அறிகிறார்
நாடி... நாடி...நாடி... நாடி...
வஞ்சக வலை விரிக்கிறார்

விட்டுப்போன உறவுகளைத் தட்டித் தூசு துடைக்கிறார்
கட்டுடைத்த அருவியைப் போல்
பாசமழை கொட்டுறார்.

மெல்ல மெல்லக் கஷ்டமென்று
கண்ணீர் மல்க நடிக்கிறார்
சொல்லிச் சொல்லிக் களங்கமென்று
அயலவரைப் பழிக்கிறார்.

மடை திறந்த பொய்யிலே அங்கவர்
மனமிரங்கித் துடிக்கிறார்
வியர்வை சிந்தி உழைத்த காசை
விபரமின்றிக் கொடுக்கிறார்.

நிலைத்த வைப்பு வங்கியிட்டு
நிலையாச் சொத்து ஆடுதிங்கு
கல்விக்கென்று கறந்த பணம்
கந்துவட்டியில் உழைக்குது.

சுழற்சி முறை அடிப்டையில் கைப்பேசி சிணுங்குது
சூட்சுமக் கயிறெடுத்து விழி நீரும்
நீழுது
அடுத்தவர் போல் வாழ எண்ணி
அழுதழுது இரக்குது
அங்கும் இங்கும் அங்கலாய்த்து
கடைவாய் நீர் ஊறுது.

பொல்லாப்பு சொல்லியே நல்வாழ்வு வாழுது
நல்வாக்கு ஏதுமின்றி இறுமாப்பில் ஆடுது
நாளை இந்தக் கலமுடைந்து நாறுகின்ற போதிலே
சேர்த்த பொருள் யார் சுகிப்பார் யாமறியேன்
சிவாயமே.

**கனகசபாபதி செல்வநேசன்** – அல்வாய்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை




# சகபயணிகள்



பொ. கருணாகரமூர்த்தி
பேர்லின்

கிழக்கு - மேற்கு ஜெர்மனிகளின் பிளவின் போது அதன் தலைநகரமான பெர்லினும் கிழக்கு பெர்லினாகவும், மேற்கு பெர்லினாகவும் பிரிந்துபோனமை நமக்கெல்லாந்தெரியும்.. பின்னர் அவை மீளவும் இணைவதற்கு முன்னர் நாங்கள் மேற்கு பெர்லினில் வாழ்ந்திருந்தோம். ஒருநாள் மாலையில் அதன் மையமான ZOOLOGICALGARTEN எனும் பகுதிக்கு எமக்கான மளிகைப்பொருட்கள் சில வாங்குவதற்காகச் சுரங்கத் தொடரியில் சென்றிருந்தேன். சுரங்கத்தை விட்டு வெளியில் வந்ததும் என்னருகில் என் திசையில் இன்னொருவரும் என்கூட நடந்து வந்துகொண்டிருந்தார். . அவரை வினய் என்பார்கள். அவர் பெயரைத் தமிழில் வினை என்றும் எழுதலாமென அவரைக் காணும் போதெல்லாம் நினைப்புவரும். நாற்பதைத் தாண்டிய அகவைகள். அவர் பெர்லினில் ஒரு காப்புறுதிக் குழுமத்தின் ஆலோசகர்வகையிலான . சிறப்புப்பணியொன்றின் நிமித்தம் மலேஷியா விலிருந்து வந்தவர் சாகேதராமன் எனும் இலங்கை இலக்கிய நண்பர் ஒருவரின் வீட்டில் ஒரு அறையில் வாடகை கொடுத்து வாழ்ந்துகொண்டிருந்தார். சாகேதராமன் என் நண்பரும். அவர்வீட்டில் வினயைப் பலதடவைகள் பார்த்திருக்கிறேன், அவ்வளவு தான் எனக்குப்பரிச்சயமான நண்பர் என்றுஞ் சொல்லமுடியாது.

எம் பார்வைகள் வெட்டியபோது என்னிடம் “ஹலோ எங்கே போகிறீர்......” என்று விசாரித்தார். நான் என் அலுவலாகப் போகிறேன் என்பதைச் சொன்னேன். நான் பதிலுக்கு அவரிடம் “நீங்கள் எங்கே போய்க்கொண்டிருக்கிறீர்கள்” என்று உசாவவில்லை. அது அம்மா சின்ன வயதிலேயே எனக்குக் கற்றுக்கொடுத்த பழக்கம். “பெரியவர்களிடம் ஒருபோதும் என்ன அலுவலாக, எங்கே போகிறீர்கள் என்றெல்லாம் அநாவசியமாக விசாரிக்கப் படாதாம்”. மௌனமாக அவரோடு சென்று கொண்டிருந்தேன்.

அவராகவே “ உமக்குத்தெரியுமா...... இன்று ASTOR film Palast இல Hirak Rajar Deshe என்றொரு அருமையான வங்காளப்படம். போடுகிறார்களாம்...... ஆறுமணி ஷோ மட்டுந் தானாம்” என்றார்.

“படத்தின் இயக்குனர் யார் ” என்றதுக்கு “வேறு யார் சத்யஜித்ரேயதாம்.... அதுக்குத்தான் நானும் போய்க்கொண்டிருக்கிறேன், மனுஷன் என்னோட ஃபேவெறிட் டிறெக்டர் ” என்று என்னையும் உசுப்பேற்றினார்.

சத்யஜித்ரேயதாம் என்றதும் என் மனதும் குதியாட்டம் போடவும் ஜக்கெற்றின் பொக்கெற்றினுள் கையைவிட்டு என் வல்லு வத்தை (பர்ஸ்) வெளியில் எடுத்தேன். அதனுள் சில நாணயங்களைத்தவிர பணத் தாள்கள் எதுவும் இருக்கவில்லை. வேண்டு மானால் மளிகையை நாளைக்கும் வங்கிக் கொள்ளலாம், அரியவகையிலான சினிமா தப்பிவிடுமே. ஏமாற்றத்தைச் சகித்துக்கொண்டு சொன்னேன்: “ அண்ணே........ எனக்கும் சத்ஜித்ரேயின் படம்பார்க்க ஆசைதான்........ ஆனால் நான் டிக்கெட்டுக்கான பணத்தை எடுத்துவரவில்லையே ” என்றேன்.

“அச்சுச்சோ........” என்று எனக்காக வருந்து பவர்போலக் கொஞ்சத்தூரம் மௌனத்தில் நடந்து வந்தவர் “ இப்பிடிச்செய்வோமா மிஸ்டர்” என்றுவிட்டுத் தானே அதற்கான வழியையும் இயம்பலானார். “ஓகே...... நான் இன்றைக்கு உன்க்கு டிக்கெட் எடுத்துத்தருவனாம், இரண்டு நாளைக்குள்ள அந்தப்பணத்தை சாகேதராமன் வீட்டில கொண்ணாந்து எங்கிட்ட கொடுத் திடுறியா...... நீயும் சத்ஜித்ரே படத்தை விரும்பிறதால இதைச்செய்யிறேன்” என்றார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரோபகாரியாகி. விஞ்சிப்போனால் நுழைவுக் கட்டணம் 15 மார்க்குக்குள்ளேதான் இருக்கும். 'இரண்டு நாளைக்குள்ள பணத்தைக் கொண்ணாந்து திருப்புவியா' என்ற சந்தேகங் கலந்த நிபந்தனையோடு அந்தத் தமிழ்க் கஞ்சல் பனாதியின் உதவியைப்பெறுவதா வேண்டாமாவென மனது விசாரஞ்செய்யவும். சுரங்கத்தொடரியின் பருவகால அட்டையை வைக்கும் உறையை எடுத்து அதன் பகுப்பறையொன்றினுள் விரலை நுழைத்தேன், அதற்குள் அவசரதேவைகளில் உதவுமேயென்று நான் எப்போதோ சொருகிவைத்திருந்த 20 மார்க் தாள் ஒன்று பதுங்கிக் கிடந்து சிரித்தது. 'பெரும் ஆசுவாசம்' ஏற்பட இப்போது பணம் இருப்பதைச்சொன்னேன், பேராபத்தொன்றிலிருந்து தப்பியவரைப்போல முகம் விகசித்தார் மறவர்.

படஅரங்கத்தை அடைந்ததும் நான் கழிப்பறைக்குப்போவதைப்போல் போக்குக் காட்டிவிட்டு அவர் உள்நுழைந்தானதும், வேறோரு நிரையில்போய் அமர்ந்தேன், பிறகு அம்மனிதரின் முகத்தைப்பார்க்கப் பிடிக்கவில்லை.

இந்த அனுபவத்தின்பின் ஒரு வாரம் கழிந்திருக்கும். எனக்கு (பெர்லினிலிருந்து) என் சகோதரி வதியும் Dortmund நகருக்கு ஒரு நடைசெல்ல வேண்டியிருக்க Felix Reisen எனும் தொலை தூரப் பேருந்தில் ஏறி அமர்ந்தேன். நான் பேருந்துப்பயணங்களைத் தேர்வதெல்லாம் பொருண்மியம் கருதியேயன்றி அதன்மீதான காதலால் அல்ல. நீண்ட பகல்களையுடைய கோடை அது. 550 கி.மீ தொலைவு, வாகன நெரிசலைப் பொறுத்து ஆறிலிருந்து ஏழுமணிவரையிலான பயணம். வெளிநாடுகளில் பேச்சுத்துணைக்கு சகபயணிகள் கிடைப்பது அரிது. பேசக்கூடிய ஒருவர் வாய்த்தாலும் அவர் உதைபந்தாட்டத்தைப் பற்றியோ, சோளம், கோதுமை, சீனிக்கிழங்கு, முந்திரிச் சாகுபடிபற்றியோ பேச ஆரம்பித்தால் நான் முழிக்கவேண்டும். இதனால் என் பயணங்களில் புரிந்த புரியாத வகைகளில் இரண்டு புத்தகங் களாவது எடுத்து வைத்துக்கொள்வேன். இன்று என் பக்கத்தில் ஒடிசலான உடம்புடன் பார்வையிலேயே மாணவி என்று கணித்து விடக்கூடிய அரிவை ஒருத்தி அமர்ந்திருந்தாள். அவள் வைத்திருந்த எடுப்புப்பையில் நிறைய புத்தகங்களும், அப்பியாசப் புத்தகங்களு மிருந்தன. மடிப்பு மேசை முழுவதும் தன் சிறிய நெகிழிச்சாப்பாட்டுப் பொட்டலங்களை ஜலதரங்கம் செய்யவிருப்பவளைப் போலப் பரவிவைத்திருந்தாள். விநோதமாயிருந்த அவற்றைக் கடைக்கண்ணால் நோக்கினேன்.

ஏதோவொரு பயறுவகையின் முளைகள், நீளவாட்டில் சீவிய காரட், அவித்த பச்சைப் பட்டாணி, வாட்டிய சில சோயாக்கீலங்கள் (Torfu / Peat), ஜீரகக்கிழங்கின் நறுக்குகள், இரண்டு கிவிப்பழங்கள், ஒரு குடைமிளகாய், Ruccola சலாட் தழைகள் கொஞ்சம்.

எமது பிள்ளைகளும் பாலுணவு, புலாலு ணவைத் தவிர்த்து இப்போது இவ்வகையிலான 'Vegan' உணவுப்பழக்கத்துக்கு மாறிவிட்டார்கள். எம் பார்வைகள் சந்தித்தபோது கொஞ்சம் நட்பானவளாயிருப்பாள் போலிருக்க அவளிடம் நீங்கள் 'Vegan னா' வென்று கேட்டேன். அவள் முகம் மேலும் விகசிக்க 'ஆமா' என்றாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி 'Vegan ஆவதற்குச் சுகாதாரம் தவிர்த்து வேறும் ஏதும் மெய்யியல் காரணங்களும் உண்டோ' என்றேன்.

⬧⬧ ⬧⬧ ⬧⬧

'நிறைய உண்டே...... முதலாவது பூமியில் பிறக்கும் எல்லா உயிரினங்களும் வாழ்வதற்காகத்தான் பிறக்கின்றன, அப்படியிருக்க நாம் எமது உணவுக்காக அவற்றை அறுத்துப்போடுவதில் எனக்கு உடன்பாடில்லை'.

'இரண்டாவது உலக மக்கள் அனைவரும் சுவைக்காகப் புலால் உணவைத்தான் விரும்பு கிறார்கள். சுவைக்காக உண்பவர்கள் தமக்குத் தேவையானதைவிடவும் அதிகமான உணவை நுகர்கிறார்கள். அதனால் இறைச்சியின் தேவை ஜனத்தொகையுடன் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இறைச்சிக்காக ஐரோப்பாவில் வெட்டப்படும் ஒரு மாட்டின் சராசரி எடை 1000 கிலோ, அதில் உண்ணக் கூடிய பகுதி 625 கிலோ மட்டுமே. 1000 கிலோ மாட்டை வளர்த்தெடுக்க நாம் அதற்கு 7000 கிலோ கடலை, கொள்ளு, சோளம் போன்ற தாவர உணவையூட்டுகிறோம். 625 கிலோ இறைச்சியைவிட 7000 கிலோ தானியத்தைவைத்து நாம் பத்துமடங்கு அதிகமான வயிறுகளைப் போஷிக்கலாம்.'

'இனி எவருமே மீன்களைப் பிடிப்பதில்லை என்று நிறுத்திக்கொண்டுவிட்டால் எத்தனையோ ஆயிரம் கோடி டன்கள் மீன்உணவு உற்பத்தி கடலில் விரயமாகி விடுமே' என்றேன்.

'அம் மீன்கள் எவையுமே அதீதப் பெருக்கத் தால் தரைக்கு வந்து நம்மைக் கடிக்கப் போவதில்லை, காட்டில் விலங்குகளின் பெருக்கம் இயற்கையால் கட்டுப்படுத்தப்படுவதைப்போல கடலின் உட்சூழல் மீன்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் அவை அதற்கான சூழலுடன் தொடர்ந்து தொந்தரவுகளின்றி வாழத்தம்மை இசைவாக்கிக் கொள்ளும்' என்றாள் அவ் IT Engineering இல் முதுகலை பயிலும் மாணவி. அவளது துறையுடன் நேரடித்தொடர்பிராத சூழலியலில் அவளது ஆழ்ந்த அறிவைக்கண்டு அசந்தேன்.

இப்படியே பேச்சு சுவாரசியமாகப் போய்க் கொண்டிருக்க Magdeburg எனும் நகரத்தின் தரிப்பு வந்தது. அதில் சிற்றுண்டி, காப்பி, பானகங்கள் மற்றும் புகைபிடிப்போருக்காக 30 மணித்துளிகள் பேருந்தை நிறுத்துவார்கள். அரிவை பேருந்தால் இறங்கியதும் கழிப்பறையை நோக்கிச்சென்றாள்.

⬧⬧ ⬧⬧ ⬧⬧

நான் காப்பிக் கடையில்போய் ஜாக் கெற்றின் பொக்கெற்றில் கைவிடவுந்தான் அது காலியாயிருப்பது தெரிந்தது. திருட்டுச் சகோதரர்கள் இப்படி நேரங்காலந்தெரியாமல் விளையாடுகிறார்களே, என்ன செய்யலாம்? அத்துவானத்தில் நின்று குளறி எதுவுமாகப் போவதில்லை, சற்றே காலாற நடந்துவிட்டு மீண்டும் வந்து பேருந்தில் ஏறினேன். அரிவை தான் எடுத்துவந்திருந்த தோடை இரசத்தைக் குடித்துக்கொண்டிருந்தாள்.

நானும் இயல்பாக எனது வல்லுவம் திருட்டுப்போய்விட்டதைச் சொன்னேன்.

உச்சுக்கொட்டி 'அதற்குள் என்னவென்ன வெல்லாம் இருந்தன' என்று கேட்டாள். '200 இயூரோ வரையிலான பணம், அதைவிடவும் என் அடையாளஅட்டை, கடனட்டைகள், சாரதியுரிமம், மருத்துவக் காப்புறுதி அட்டையெனப் பல அட்டைகள் சேர்ந்து ஒன்றாகத் தொலைந்து விட்டன' என்றேன்.

"Schade" (பரிதாபம;/வருத்தம்) என்று உச்சுக் கொட்டிவிட்டு ஜன்னலுக்கு வெளியே பார்க்கத் தொடங்கினாள்.

அவ்வளவுதான் அதன் பிறகு அவள் தன் எண்ணங்கள் கருத்துக்கள் எதனையும் என்னிடம் பகிர்ந்துகொள்ளவில்லை. இடை யிடையே தன் புத்தகங்கள் சிலவற்றைப் புரட்டினாள். 'சரி படிக்கட்டும்' என்று நானும் மௌனமாக இருந்தேன். இவ்வளவு பேசியவள் Dortmund அடையும்வரையிலான மீதி நாலுமணிநேரமும் உதடுகளை 4 x 6 cm பிளாஸ்திரிபோட்டு ஒட்டியதைப்போல மூடி வைத்திருந்தாள்.

⬧⬧ ⬧⬧ ⬧⬧

நான் Dortmund இல் பேருந்தை விட்டிறங் குகையில் 'உன் மீதிப்பயணம் நல்லபடி அமையட்டும்' என வாழ்த்தினேன். ஒரு செயற்கையான புன்னகையை உதிர்த்தாள்.

நான் மேற்கொண்டு வீடுபோய்ச் சேருவதற்குத் தன்னிடம் 'ஒரு 15 இயூரோ கொடு' என்று கேட்டு விடுவேனோவெனப் பயந்திருப்பாள் போல, என்னசெய்யலாம்........ இப்படியான மனிதர்களின் குழுமாயத்தில் வாழத்தான் வாய்த்திருக்கிறது வாழ்க்கை!


○○○




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமனும் கம்பனும்

## ஓர் அறிவார்ந்த பார்வை





**- வாகரை வாணன்**

இராமாயணமும் மகாபாரதமும் இந்தியாவின் பழைமை மிக்க இதிகாசங்கள். இதிகாசம் என்னும் வடமொழிச் சொல் இதி+ ஹ + ஆஸ என்று பிரிக்கப்படுகையில் "முன்பிருந்தது" என்ற பொருளைத் தரும் என்பர். இச்சொல் ஆங்கில மொழியில் MYTH எனப்படும். இதற்கு ஆங்கிலமொழி அகராதி (OXFORD DICTIONARY) "கற்பனைக்கதை" என்ற பொருளையும் தரும். இது போன்றே அச் சொல்லுக்குச் சென்னைப் பல்கலைக்கழகம் வெற்றுப் புனைந்துரை, புராணக்கதை என்றெல்லாம் பொருள் சொல்லும். இதனால் இராமாயண இதிகாசம் பற்றிச் சிந்திப்பவர்கள் அதில் நம்பிக்கை இழத்தல் அதிசயம் அல்ல.

இது தொடர்பில் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் குறிப்பிடுகையில் புராண இதிகாசங்களின் நோக்கம் வரலாறு கூறுவதன்று இலட்சியங்களுக்கு உதாரணம் காட்டுவதாகும். இந்நூல்களின் வரலாற்றுச் செய்தி நூலாசிரியர்களின் நோக்கத்திற்கேற்பப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன எனலாம். இதிகாசங்கள் மனிதர்களைப் பற்றியும், புராணங்கள் தேவர்களைப் பற்றியும் கூறின. இராமன், இலக்குவன், கௌசல்யை, சீதை, அனுமான், பரதன், உதிட்டிரன், வீட்டுமன் முதலிய இதிகாசக் கதாபாத்திரங்கள் இலட்சியங்களுக்கு உதாரணமாகச் சிருட்டிக்கப் பட்டிருக்கின்றன. (தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் - பக். 97) என்பார்.

பேராசிரியரின் மேற்படி ஆய்வுரையில் தெரிவித்துள்ள "இதிகாசக்கதாபாத்திரங்கள்" என்னும் சொற்றொடர், அவை அனைத்தும் கற்பனை வடிவங்கள் அன்றி உயிர் உள்ள மனிதர்கள் (THE TRUE HUMAN BEING) அல்ல என்பதைத் தெளிவாக்குகிறது. புராண இதிகாசங்களில் பெரும் பற்றுக் கொண்டவரும், அறிஞருமான இராஜகோபாலச்சாரியார் (இராஜாஜி) கூட இராமனைக் கடவுளாகக் கொள்ள வில்லை என்பதை அவரது "இராமாயணம்" என்னும் நூல் (பக்கம் - 04). வெளிப்படுத்தும். இனி வடமொழிவாணர் நவாலியூர் சோ.நடராசன் இராமனை மனிதனாகக் காண்பதை அவரது "வடமொழி இலக்கிய வரலாறு செம்மொழிக் காலம்" என்னும் நூலில் (பக்.15) இவ்வாறு எடுத்துரைப்பார்.

இராமாயணத்தில் உள்ள ஏழு காண்டங்களுள் இரண்டு முதல் ஆறு வரைதான் முதலில் தோன்றின. ஏனைய இரு காண்டங்களும் பின்னர் சேர்க்கப்பட்டவை. பழைய பகுதிகளில் இராமன் ஒரு மனிதனாகவே கருதப்படுகின்றான். முதலாம் ஏழாம் காண்டங்களில் அவனை விஸ்ணு அவதாரமாகக் கவி வருணிக்கின்றார். இவ்வாறு மனிதனாகக் கணிக்கப்பட்ட இராமன் தேசிய வீரனாகவும் பின்னர் விஸ்ணுவின் அவதார மாகவும் வளர்ந்து வருவதற்குப் பல நூற்றாண்டு கள் சென்றிருக்கும்.

அறிஞர். சோ. நடராசனின் மேற்படி உரையில் இடம் பெற்றுள்ள "பல நூற்றாண்டுகள் கழிந்திருக்கும்" என்னும் கணக்கு கி.பி. 6ம், 7ம், 8ம் நூற்றாண்டுகளைக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பல்லவர் காலம்' என்னும் பக்தியின் காலத்தையே குறிக்கும். துறவோடு இணைந்த சமணரையும் (திருவள்ளுவரைச் சமணர் என்பர்) கடவுள் மறுப்பாளரான கௌதம புத்தரையும் தமது அளவு கடந்த பக்தியினால் அகற்றிவிட்டு (அறிவும் பக்தியும் வேறு வேறானவை) புராணங்களையும் இதிகாசங்களையும் போற்றும் "பணியை" 6ம், 7ம் நூற்றாண்டுகளிலேயே ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஆரம்பித்துவிட்டனர்.

இதே காலத்தின் தொடர்ச்சியான கி.பி. 12ம் நூற்றாண்டில் கம்பன் பாடிய காப்பியம் பற்றி தமிழ் அறிஞர் மு.வரதராசனார் ஆய்வு செய்கையில் வால்மீகி இயற்றிய ஆதி காவியத்தை ஒட்டி கம்பர் தம் காப்பியத்தை எழுதிய போதிலும் "கம்பராமாயணம்" மொழிபெயர்ப்பும் அல்ல, வெறும் தழுவலும் அல்ல. ஒரு புதுக் காப்பியம் போலவே விளங்குமாறு கம்பர் தம் கற்பனைத் திறனால் படைத்துத் தந்துள்ளார். வால்மீகியால் உயர்ந்த காப்பியத் தலைவர்களாகப் படைத்துக் காட்டப்பட்ட இராமரும் சீதையும் கம்பராமா யணத்தைக் கற்பவர் கேட்பவர் நெஞ்சில் தெய்வங்களாகக் காட்சி அளிக்கின்றனர். கம்பருக்குப் பிறகே, இந்தியா முழுவதும் இராம வழிபாடு பெருகியது என்பர். குமரகுருபரர் என்னும் தமிழ்நாட்டுத் துறவியார் கங்கைக் கரையில் கம்பராமாயணக் கதையைப் பரப்பியவர் என்றும் அது அங்கே பரவிய தற்குப் பிறகு, இந்தியில் (HINDI) துளசிதாசர் இராமாயணம் இயற்றினார் என்றும், இதனாலேயே துளசிபடைத்த இராமனும் சீதையும் பக்திக்குரிய தெய்வங்களாக விளங்குகின்றனர் என்றும் சிலர் கூறுவர்.

வால்மீகி இராமாயணத்தில் உள்ள பல வற்றைக் கம்பர் தம் காவியத்தில் அவ்வாறே தந்துள்ளார். சிலவற்றை விரிவாக்கி எழுதி யுள்ளார். வால்மீகி சொல்லாதவற்றைத் தாமே படைத்துத் தந்துள்ளார். பழையன புதியன எவையாயினும் கம்பர் கைபட்ட பிறகு அவை புது மெருகு பெற்று ஒளிர்கின்றன (தமிழ் இலக்கியவரலாறு பக்.172)

தமிழறிஞர் மு.வரதராசனார் இராமரைத் தெய்வமாக்கியவர் கம்பர் என்று குறிப்பிட்டது போல வால்மீகியின் காவியத்தில் இராமன் மானுடனாகவும் வீரனாகவும் படைக்கப் பட்டுள்ளான் என்று கூறும் மற்றுமொரு தமிழ் அறிஞர் அ.அ.மணவாளன் (இராம காதை யும் இராமாயணங்களும் - பக்கம் 18) கி.பி. 10ம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிச்சக்கரவர்த்தி கம்பனாலேயே இராமன் தெய்வமாக்கப்பட்டான் என்பார். மேலும் இது பற்றித் தெரிவிக்கையில் வால்மீகியின் இராமாயணத்தைத் தழுவியும், புதியதைப் படைத்தும் தம் காவியத்தைப் பாடிய கம்பர், அதில் இரணியன் கதையைப் புகுத்தியமைக்கு இராமரை அவர் தெய்வமாகக் கொண்டாடியமையே காட்டும் என்றும் கூறுவர்.

இக் காலம் பற்றி பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை எடுத்துரைக்கையில் இயற்கை நெறிக்காலத்தில் மன்னன் பெற்றிருந்த இடத்தை தோத்திரப்பாடல்கள் காலத்தில் கடவுள் பெறுகிறார் என்பார். (தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும். - பக். 97) இதுபற்றி மேலும் சொல்வதானால் அது வைணவர், நாயன்மார் காலமாகும். புராணங்களும் இதிகாசங்களும் பொலிவு பெற்ற காலமும் இதுதான். அதனால் தான் கண்ணன், நாச்சியார் வழிபாடுகள் இன்றும் தமிழ் நாட்டில் களைகட்டுகின்றன.

மேலே சுட்டிக்காட்டப்பட்ட தமிழ் அறிஞர்கள் இருவரையும் (மு. வரதராசனார, அ.அ. மணவாளன்) போன்ற மற்றுமொரு அறிஞருமான அ. வேலுப்பிள்ளை அவர்களும் இப்படி எழுதுவார்.

ஆழ்வார்கள் பலரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட "இராம அவதாரமே" சோழப் பெருமன்னர் காலத்தில் கம்பன் கையில் காவிய மாகின்றது. வைணவ பக்தி இலக்கியத்தின் செல்வாக்கு, வால்மிகி இராமாயணத்தில் "புருசோத்தமனாக" இருந்த இராமனைக் கம்பராமாயணத்தில் தெய்வமாக்கி விடுகின்றது. (தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், பக்கம் - 147)

கம்பனுக்கு முந்தியவரும் அரும்பெரும் கவிஞருமான இளங்கோ அடிகள், சிலப் பதிகாரம் என்னும் செந்தமிழ்க்காவியத்தின் நாயகியும் சாதாரண மானுடப் பெண்ணுமான கண்ணகியைத் தெய்வமாக்கியதைப் போன்றே இராமனும் கம்பரால் தெய்வமாக்கப் பட்டார் என்பதை ஆழ்ந்து சிந்திப்பவர்கள் அறிவர். "மனிதன் என்பவன் தெய்வமாகலாம்" என்று கவியரசர் கண்ணதாசன் சும்மா சொல்லவில்லை.

கி.பி. 6ம் நூற்றாண்டிலேயே ஆழ்வார் களின் (பக்தியில் ஆழ்ந்தவர்கள்) செல்வாக்கு தமிழ்நாட்டில் முளைவிடத் தொடங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டதெனலாம். அத்தகைய ஆழ்வார்களில் ஒருவர் குலசேகரப் பெருமாள் என்பவராவார். அவர் இராமர் மீது கொண்டிருந்த பக்திப் பிரவாகம் காரணமாக,

**மன்னு புகழ்க் கௌசலை தன் மணிவயிறு வாய்த்தவனே**
**தென்னிலங்கைக் கோன் முடிகள் சிந்துவித்தாய்**
**செம் பொன் சேர்**
**கன்னி நன் மாமதில் புடைசூழ் கணபுரத்து என்**
**கருமணியே**
**என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ.**

என்று பாடுவார்

ஆழ்வார்களால் வளர்த்தெடுக்கப்பட்ட வைணவம் (இது இந்து மதத்தின் ஒரு பகுதி) கி.பி. 12ம் நூற்றாண்டில் அதன் உச்சத்தைத் தொட்டது. அக்காலமே இராமன் கம்பனால் தெய்வமாக்கப்பட்ட காலம் என்பர் அறிஞர் பெருமக்கள். இது ஆச்சரியத்திற்குரியதல்ல. ஏனெனில் உணர்ச்சி ஒருவனை உயர்த்தும் அல்லது தாழ்த்தும். இதுதான் அதன் வேலை. இவ்விலக்கியப் பணிக்கு ஓசைநயம்மிக்க தமிழ்ச் சொற்கள் கம்பனுக்கு உறுதுணையாக அமைந்தன. அதனால்தான் பத்தாயிரத்து ஐந்நூறு பாடல்கள் அவனால் பாடப்பட்டன. இராமாணத்திற்கு அவன் இட்ட பெயர் "இராமன்வதாரம்" என்பதாகும். இதன் பின்பே அவன் கவித்துவத்தைப் போற்றும் வண்ணம் அது "கம்பராமாயணம்" என வழக்கிற்கு வரலாயிற்று.

சாதாரண மனிதன் இராமன் (புருசோத்தமன்) கம்பரால் தெய்வமாக்கப்பட்டாள் என்னும் அறிஞர்களின் ஆய்வுரை, கம்பனின் ஆற்றல் மிக்க கவித்துவமே அதற்கான மூல காரணம் என்பதைத் தெளிவாக்கும். மற்றப்படி இராமன் சாதாரண மானிடன் என்பதே அறிஞர் சோ. நடராசனின் ஆய்வுரையுமாகும். (வடமொழி இலக்கிய வரலாறு, செம்மொழிக்காலம், பக்கம்-15) கம்பன் வீட்டுக்கட்டுத்தறியும் கவிபாடும் விருத்தமெனும் ஒண்பாவிற்குயர் கம்பன் யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் கம்பன் பிறந்த தமிழ்நாடு என்னும் பாராட்டு மொழிகள் அம்மாபெரும் கவிஞன் மறைந்து எண்ணூறு ஆண்டுகள் ஆகியும் அவன் தொடர்ந்து தமிழ் இலக்கிய உலகில் தலைநிமிர்ந்து நிற்கிறான் என்னும் உண்மையை உலகிற்கு உணர்த்தும்.

○○○

## உள்ளுணர்வு விழித்துக் கொண்டால்...

**- இ.ஜீவகாருண்யன்**

அடியிலிருந்து நுனி வரை,
முடிவரை
எதைத் தொட்டாலும்
கலவரம், குழப்பம்.

எம் பயணம்
இலக்கற்றது.
பிறப்பில் தொடங்கி
இறப்பு எனும்
சூன்யத்தில்
முடிவது.

ஆணவ சுயநல
அடித்தளத்திலானது
புத்திக்கும்
விலங்கு மனத்துக்குமானது.
இதைத்தாண்டி
எதுவுமில்லை
என
சுழலும் சக்கரம்
செக்கு மாடு
போல.

உண்மை, தர்மம், நியாயம்
சமத்துவம், சகோதரத்துவம்
ஒற்றுமை
எல்லாம்
பேச்சளவில்...
பகை, வெறுப்பு, முரண்பாடுக்ள
மோதல்கள், ஆக்கிரமிப்பு
என
அழிவின் விளிம்பை நோக்கி
உலகமெங்கும்.
பரிணாமம்
மனம் கடந்த
பேருண்மை நோக்கி
நகராதவரை
இவை
தொடரும்...

அழிவுகள் கூட
ஆசானாகலாம்
நம் உள்ளுணர்வு
விழித்துக் கொண்டால்

நெருப்பில் எரிந்து
சாம்பலில் உயிர்த்தெழும்
ஃபீனிக்ஸ் (Phoenix) பறவையைப்
போல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# சில நெருடல்கள்



திருமதி.ஹரண்யா பிரசாந்தன்

அவள் கைகளிலிருந்த சொக்லேட் கேக்கை மெதுவாக கரண்டியால் அள்ளி வாய்க்குள் சிறைபிடித்தாள். அவள் உதடுகள் மெதுவாக அசைந்தன. அதன் சுவை அவள் விழிகளை ஒருநிமிடம் மூடி சுவைக்ககூறியது போலும். இமைக்கதவுகள் மூடிக்கொண்டன. நான் அவளை உற்றுநோக்கினேன். பச்சை நிற சுடிதார் அணிந்திருந்தாள். நெற்றியில் ஒரு சிறிய பொட்டு. புருவங்கள் கேள்விக்கணை தொடுக்க எந்நேரமும் ஆயத்த நிலையிலிருந்தன. உடல் பருமன் என்றோ இல்லை மெல்லிய தேகம் என்றோ சொல்லிவிட முடியாது. சராசரி உடல் எடை என்று சொல்லலாம். பளிச் என்று அவள் முகம் இருக்கவில்லை. எனவே அவளுக்கும் பியூட்டி பார்லருக்குமான இடைவெளி பெரிதாக இருக்கிறது என்று நினைத்துக்கொண்டேன். இருந்தாலும் அவளிடம் ஏதோ ஒன்று இருக்கிறது......

“நீங்க சாப்பிடல்லயா?” அவள் குரல் என் வர்ணனையை துண்டித்தது. அவள் குரல் சுசீலாவின் குரல் போல் இல்லை தான். இருந்தாலும்...... என்னை அவள் விழிகள் நோக்குவதை என்னால் உணர முடிகிறது. நான் சொக்லேட் கேக்கை கரண்டியால் துழாவிக் கொண்டே யோசித்தேன். இது என் முதல் அனுபவம் அல்ல. பிறகு ஏன் இப்படி ஒரு தடுமாற்றம்? கேட்க வேண்டிய கேள்விகளை இரவு முழுவதும் மனப்பாடம் செய்தது வீண் போகலாமா? கொஞ்ச நாட்களாக மனதை அரித்துக் கொண்டிருக்கும் கேள்விகளை புதைகுழியில் புதைப்பதில் அர்த்தமில்லை. பக்குவத்தின் விளிம்பில் நிற்கும் நான்......... ஒரு பொறுப்புள்ள அதிகாரி. பிரபலமான ஒரு வங்கியின் மனேஜர். எத்தனை மனிதர்களை சந்தித்திருப்பேன்? கடன் வாங்கி தலைமறைவான எத்தனை பேர் என் பேச்சைக் கேட்டு கடனை மீள செலுத்தியிருப்பார்கள்.......

“என்ன யோசிக்கிறீங்க?”

என் பெருமைகளை நிறுத்திவிட்டு அவளைப் பார்த்தேன். சொக்லேட் கேக் அதன் இறுதி மூச்சோடு போராடும் தருணம்.. அவள் முகத்தில் அவநம்பிக்கையின் ரேகைகள்.. இனியும் மௌனம் காத்தால் அவள் எழும்பி விடுவாள் போலும்...

“ஒண்டுமில்ல... பேர் என்ன சொன்னிங்க?’

“நந்திதா”

“ஆ....... நந்திதா......நல்ல பேர்.... நல்லா யோசிச்சு தான் இந்த முடிவு எடுத்தீங்களா?”

“யோசிக்காம உங்களொட கொபிசொப் வந்திருப்பனா?’

அவள் இறுதி கேக் துண்டை சுவைத்தபடி என்னைப் பார்த்தாள். நான் தண்ணீர் போத்தலை என் கைகளுக்குள் பற்ற முயற்சிக்க அது தவறி அவள் மீது விழ ... நனைந்த உடையை சரிசெய்தவாறு எழுந்து கொண்டாள் அவள்.

“சொரி சொரி.....” நானும் எழுந்து கொண்டேன்.

“பரவால்ல....நான் ஒருக்கா வொஸ்ரூம் பொயிட்டு வாறன். இதுக்கெல்லாம் அப்செட் ஆகாதீங்க ஓகே??’ அவள் நடந்து சென்று கொண்டிருந்தாள்.

போத்தலை நிமிர்த்தி வைத்தவாறு இருக்கையில் அமர்கிறேன். நான் அவளோடு பேசியதை நினைக்க எனக்கே வெட்கமாயிருந்தது. அவள் பெயர்கூட தெரியாமலா நான் இங்கு வந்திருக்கிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வயதில் கூட பதட்டம் பரவிக்கிடக்கிறதே... அவள் பெயர் தெரியாமலில்லை... என்ன பேசுவது என்று தெரியாது..... தவறுகளை திருத்த வேண்டும். அவள் எவ்வாறு எனக்கு பதிலளிக்கிறாள்?? நான் ஏன் இப்படி??

எதிரே அவள் அமர்ந்து கொண்டாள்.

“நான் இப்போ வெள்ளவத்தயில கலர்ஸ் எண்டுற பெயிண்ட் கடையில வேர்க் பண்ணுறன். காலயில இருந்து பின்னேரம் அஞ்சு மணி வரைக்கும் வேல. பக்கத்தில ஒரு ரூம் ரெண்ட்டுக்கு எடுத்து அங்க தங்கியிருக்கன். வேற என்னப் பத்தி சொல்றதுக்கு ஒண்டுமில்ல”

“என்னப்பத்தி எல்லாமே உங்களுக்கு தெரிஞ்சிருக்கும்.....ஆனா....உங்கட முடிவ யோசிக்கிற நல்லம் எண்டு நினைக்கிறன்”

“முடிவ எடுத்திட்டுத்தான் நான் இங்க வந்திருக்கன். என்ட் முடிவில மாற்றமில்ல.”

“அதுக்கில்ல...உனக்கு வயசிருக்கு.... என்னப்பத்தி எல்லாம் தெரிஞ்சும்..........”

“நீங்க என்னட்ட ஒண்டும் மறைக்கல்லயே...:. நானும் ஒண்டும் தெரியாம இங்க வரல்ல... நீங்க வேணும் எண்டா டைம் எடுங்க உங்கட முடிவ சொல்றதுக்கு..... நான் வெயிட் பண்றன்”

நான் அவள் விழிகளைப் பார்க்கவில்லை.. இதே உரையாடல் பத்து வருடங்களின் முன் நடந்திருந்தால்...சுவாரசியம் குன்றாமல் இருந்திருக்கும்...ஆனால் தற்போது..... இந்த தலைமுறையை நினைத்து பெருமைப்படுவதா இல்லை...... தலை குனிந்து கொள்வதா??

“வேற ஏதாவது ஓடர் பண்ணட்டா?” அவள் இல்லை என்று தலையை ஆட்டுகிறாள். நான் கைகளைப் பிசைந்து கொள்கிறேன். வழக்கமாக ஆண்கள் பேசிவிடுவார்கள்.... பெண்கள் மௌனம் காப்பார்கள்... ஆனால்...என் விசயத்தில்... பல வங்கிக் கணக்குகளை இலகுவாக திறந்த எனக்கு அவளிடம் மனக்கணக்கை திறந்து பேச துணிவு வரவில்லை.

“எனக்கு பாய்பிரெண்ட்ஸ் யாருமில்ல.... என்னட்ட பேஸ்புக்கும் இல்ல..... அதால நீங்க கூட யோசிக்கத்தேவல்ல...நம்மட லைவ்வ எப்பிடி வாழலாம் எண்டு யோசிச்சாப்போதும்”


“உனக்கு ஒரு நல்ல லைவ் கட்டாயம் கிடைக்கும்..”

“அப்ப......நீங்க நல்லவர் இல்லயா?.. இது நல்ல லைவ் இல்லயா?”

“நான் இப்ப இருக்கிற நிலமையில இது சரிவராது’

‘இந்த நிலமைய மாத்த தான் நான் ட்ரை பண்ணுறன்”

எந்தப் பந்திலும் சிக்சர் அடிக்கும் அவளிடம் நான் என்ன பேசுவது???? அவளது செல்போன் சிணுங்கத் தொடங்குகிறது. அவள் அதை காதில் பொருத்தியவாறு கண்ணாடிக்கதவுகளை தள்ளி வெளியேறுகிறாள். நான் அவள் போவதைப் பார்த்தவாறு விழிகளை நகர்த்துகிறேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அப்பா…………..'' என்ற சத்தம் என்னை ஆட்டி வைக்கிறது.

"என்ன இதெல்லாம்?? யாரவ??? உங்களுக்கு வெக்கமா இல்லயா இப்பிடி ஒருத்தியோட திரிய… எத்தின வயசு உங்களுக்கு…… கலியாணம் கட்டின ஒரு மகன் இருக்கிற யாராச்சும் இப்படி இருப்பாங்களா?? எண்ட மானத்த போக வைக்கப் போறீங்களா?"

நான் அலட்சியப் பார்வையை விடையாக அவனுக்கு உதிர்த்தி விட்டு அவளைப் பார்க்கிறேன். அவள் என்னோடு யாரோ வாக்குவாதம் செய்வதாய் உணர்கிறாள் போலும். அவளது நடையில் வேகம் கூடுகிறது. அவள் என்னை நெருங்கும் வரை அவன் வார்த்தைகள் என் காதில் விழவில்லை….

"எக்ஸ்கியூஸ்மீ…… நீங்க……"

"ஆ………… வாங்க வாங்க… நான் தான் இவரோட மகன்…நீங்க யாரு?"

'நான் ………. நான் …..'' அவள் வார்த்தைகளை மென்றுகொண்டாள்.

" சொல்லலாமா?? வெளிய எப்பிடி சொல்ற?…. இந்தாள.. கலியாணம் கட்டப்போற எண்டு சொல்லலாமா? பார்த்தா வயசில குறைஞ்ச ஒருத்தர மாதிரி இருக்கீங்க…. பிறகேன்…. உங்களுக்கு வேற யாரும் கிடைக்கல்லயா?? இப்பிடி வயசான ஒருத்தர கட்டி…. என்னாகப்போகுது?? அது சரி.. உங்கட்ட கதச்சி என்ன பிரியோசனம்? அப்பா… உங்களுக்கென்ன மண்ட குழம்பிப் பொயிட்டா?? இரண்டாம் கலியாணம் கட்டுற வயசா உங்களுக்கு?? வயசாகினா…. கொஞ்சம் எண்டாலும் புத்தி இருக்கோணும்"

"அப்பா இல்ல எண்டு சொல்லி அவர வீட்ட விட்டு வெளிய போகச் சொன்னவன் தானே நீ.. பெத்து வளத்து படிப்பிச்சு ஆளாக்கினா……ஒரு நல்ல வேலயில சேர்நத பிறகு எண்டைக்காச்சும் அவங்கள போய் பாத்திருப்பிங்களா??….. உங்கட அம்மா சாகக் கிடந்த நேரம் எத்தின தரம் போய் பாத்தனீங்க? அப்ப இப்பிடி அம்மாக்கு ஆயிட்டே எண்டு கவலப்பட்டிருப்பிங்களா?? அம்மாட சாவுக்கு லீவு கிடைக்காது எண்டு சொன்னீங்களாமே… எல்லாச் சொத்தும் உங்கட பேருக்கு வந்த பிறகு வீட்ட இருக்க வேணா எண்டு நீங்க சொன்ன நேரம் இந்தக் கொழும்பில உங்கட அப்பாக்கு யாரத் தெரியும் எண்டு யோசிச்சனீங்களா? அப்பா அப்ப கண்ணுக்கு தெரியல்லயா?"

நான் எழுந்து கொள்கிறேன். என் மனக் குமுறல்களை அவள் கொட்டுவாள் என்று சத்தியமாக நான் எதிர்பார்க்கவில்லை. யாரு மில்லா அநாதையாக நான் நின்ற நொடி கண்களுக்குள் வந்து போக என் கண்கள் சிவக்கின்றன. பாலைவனத்தில் விழுகின்ற ஒற்றைத்துளி போல் இந்த இன்னல்களுக்கு இன்முகமாய் வந்தவன் என் நண்பன் மோகன் மட்டுமே… கண்துளிகள் தரையை அடைகின்றன. அவள் என்னை நோக்கி வருகிறாள்.

"உங்கட பிரெண்ட் மோகன் சேர எனக்கு நல்லாத் தெரியும். அவர்தான் உங்களப் பத்தி சொன்னார். ஒரு மகன ஆசையா வளத்து ஆளாக்கி உங்கட வைவ் போன பிறகு நீங்க அவரொட போயிருந்து அவர் உங்கள வீட்டயிருந்து துரத்தின வரை எனக்குத் தெரியும். இன்னொரு கல்யாணம் பண்ணச் சொல்லி உங்கட பிரெண்ட் கனதரம் சொல்லியும் ஏற்றுக் கொள்ளல்ல நீங்க எண்டும் தெரியும்."

நான் அவளையே பார்க்கிறேன். என் மகன் இருவரையும் பார்க்கிறான். அவள் தொடர்கிறாள்.

"எனக்கு வயசு ஒரு பிரச்சனயில்ல. ஆதரவில்லா ரெண்டு பேரும் ஒருத்தருக் கொருத்தர் ஆதரவா இருப்பம்… வயசாகினா இப்பிடித்தான் இருக்கோணும் எண்டில்ல….. நீங்க டைம் கேட்டீங்க என??? ஐ ஆம் வெயிட்டிங்…." நான் முதுமையின் தனிமைப் பிடியை இறுகப்பற்றி நின்று கொண்டிருந்தேன். அவள் வெளியேறிக் கொண்டிருந்தாள்.

முதுமையின் கைகளுக்குள் நான் சிக்கியிருந்ததை என்னால் உணர முடிகிறது. ஒரு பெண் எவ்வளவு தைரியமாக பேசுகிறாள்.. அவளை தைரியமாக வளர்த்த பெற்றோரை நினைத்துப் பூரிக்கிறேன். ஆனால் என்னை அவர்கள் ஏற்றுக் கொள்ளவா போகிறார்கள்??????

நந்திதாவின் வருகைக்காக காத்திருந்த அவர் அவளைக் கண்டதும் எழுந்து கொண்டார். அவள் மெதுவாக தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டாள்.அவர் முகத்தில் அநேக கேள்விகள் புதைந்திருந்தன.

"நான் எவ்வளவோ சொல்லிட்டன் மோகன் சேர். இனி அவரிட முடிவு தான். அந்த கொபிசொப்புக்கு அவரிட மகனும் வந்திருந்தார். கேட்கக்கூடாத வார்த்தைகளையும் அவர் கேட்டு முடிஞ்சு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நந்திதா… அவன் தன்ட பிள்ளய எப்படி வளத்த எண்டு எனக்குத் தெரியும். நன்றி இல்லாத பிள்ளையிட கதைகள நீ பெரிசா எடுக்காத..இனிமேல் ஒண்டுக்கும் பிரியோசனம் இல்ல எண்டு றோட்டில போடுற ஒரு பொருளா அவனை அவண்ட மகன் போட்டுட்டு பொயிட்டான். அவனப் பத்தி நான் உன்னட்ட கதச்ச நேரம் நீ இதுக்கு சரி எண்டதே பெரிய விசயம்"

"நான் தான் உங்களுக்கு நன்றி சொல்லோணும் சேர்"

"………………..'

"மோகன் சேர்….. நான் ரூமுக்கு போறன். உங்கட பிரெண்ட் ஏதும் சொன்னா சொல்லுங்க"

நந்திதா கைப்பையை எடுத்தவாறு வெளியேறினாள். அவளுடைய மனம் பல்லாயிரம் பாரங்களை சுமந்து விம்மிக் கொண்டிருந்தது. தன் பிறப்பை நினைத்துப் பார்த்ததாள் அவள். பிறப்பு??? ஒரு நுகம் முளையமாகி மூலவுருவாகி பிறந்த கதை பற்றி யாரிடம் கேட்பது?? இல்லத்தில் பல்வேறு குழந்தைகளோடு ஒரு குழந்தையாக அவள் வளர்ந்த விதம் கண்முன் நிழலாய் விரிகிறது. மோகன் சேர் அந்த இல்லத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நாட்களிலிருந்து அவள் பிறந்த கதை பற்றி அறிய அடிக்கடி சென்றிருக்கிறாள். பெற்றோர் என்ற பதவியை துறந்து சென்ற அவர்களை காண வேண்டும் என்ற ஆவல் நந்திதாக்குள் முளைக்காமலில்லை. ஆனால்… பெற்றோர்????

அவளுக்கு உருவம் கொடுத்து உணர்வைக் கொடுத்தவர்கள் பற்றி அவள் கற்பனை நீண்டு விரியும். சிறுவயது முதல் கனாக்களில் மட்டும் வந்து போவார்கள் பெற்றோர்கள்…..

மோகன் சேர் சொல்லும் வரை அவள் அப்பா அன்பானவர்….. அம்மா அழகானவர் தான். ஆனால் அந்த நம்பிக்கை தீக்குள் பொசுங்கியது நந்திதா தன் பிறப்பைப பறறி அறிந்த போது…..

சாதாரணதரம் பயிலும் போதே கர்ப்பமாகிய மாணவி என்ற செய்தியில் பேசுபொருளாய் இருந்தது அவள் அம்மா தான் என்று நந்திதாக்கு அப்போது தெரியாது. அந்த தவறுக்கு வித்திட்டது தன் அம்மாவின் ஆசிரியர் என்பதும் அவளுக்கு அப்போது தெரியாது. பள்ளிப்பருவ கர்ப்பத்தின் காரணமாக அதைக் கலைக்க முடியாத அவளுடைய தாய் சிசுவை பிரசவித்ததும் சட்டரீதியாக அதை ஒப்படைத்துவிட்டு துடைக்கமுடியா களங்கத்திலிருந்து விடுதலை பெறுவதாக நினைத்து உயிரை மாய்த்துக் கொண்டாள். களங்கத்தை உண்டுபண்ணிய ஆசான்……. ஆசிரியத்தின் மகத்துவம் பற்றி பேசிக் கொண்டிருக்கிறானாம்… காணொலிகளில்………. மோகன் சேர் கேட்ட போது அவனின் புகைப்படத்தை பார்க்ககூட நந்திதா விரும்பவில்லை. முதலெழுத்துக்களுக்காக போராடும் வாழ்க்கை அவளுக்கு சொந்தமாயிற்று. தனிமையோடு கை கோர்த்து நடைபோட்ட நந்திதாவுக்கு வண்ணங்களை காட்டியது கலர்ஸ் பெயிண்ட் கடை மட்டுமே….

சுற்றிலும் வெறுமையும் விரக்தியும் சூழ்ந்திருக்க நந்திதா போய்க் கொண்டிருந்தாள்.

நான் இன்னும் கொபிசொப்பில் அமர்ந்திருக்கிறேன். அப்பாவின் வயது பற்றி கூட யோசிக்காமல் மகன் கக்கிய வார்த்தைகள் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தன. யாரோ ஒருத்திக்கு தோன்றும் இங்கிதம் கூட அவனுக்கில்லையே……

என் மனைவி இறந்த போது மகனுக்கு பத்து வயது. வங்கியின் மனேஜராக பணி புரிந்த போது கூட மகனின் தேவைகளை நான் கவனிக்கத் தவறியதில்லை. என் வாழ்வு என்பது மகனோடு இணைந்தது என்றுதான் நான் நினைத்திருந்தேன். அவனைப் பொறுத்தவரை அவன் வாழ்வு அவனை மட்டும் சார்ந்தது. பிள்ளையைப் பராமரிப்பது பெற்றாரின் கடமை என்றான போது பெற்றாரை மறுப்பது பிள்ளையின் உரிமை என்றானது. புதைத்த நினைவுகளை தோண்டியெடுத்து விழிகளை கசிய வைப்பதில் ஒரு பயனுமில்லை.

நந்திதாவை ஒரு மகளாக தத்தெடுத்துக் கொள் என்ற யோசனையை மோகன் சொன்ன போதெல்லாம் நெஞ்சில் ஒரு வருடல். மறுபடியும் ஒரு பிள்ளைப்பிணைப்பை உடைத்தெறிய இதயத்தில் சக்தியில்லை. அவள்……….. நந்திதா தெளிவாக இருக்கிறாள். சட்டபூர்வமான தந்தையாக…… இழப்புகளின் பின்னும் என்னால் இயங்கமுடியும் என்று தோன்றவில்லை. இந்த வயதில் அவளை நான் மகளாக ஏற்பதை சமூகம் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. ஆகவே இல்லை என்ற என் பதிலை உரத்துக்கூற வேண்டும் அவளிடம்………..

○○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கணம் அறியாப் பிள்ளைகளின் இலக்கண அறிவு



**தமிழ்மணி அகளங்கன்**

அது ஒரு மாலைப் பொழுது. கிராமத்து மதுப் பிரியர்களுக்கு அது ஒரு பொன் மாலைப் பொழுது. நாற்பது ஆண்டுகளுக்கு முன் ஒருநாள். வவுனியாக் கிராமம் ஒன்றின் சந்தியில் நான் படித்த தத்துவம் ஒன்றை நினைத்துப் பார்க்கிறேன்.

படிக்காத மேதைகள் பலர் கிராமங்களில் வாழ்ந்திருக்கிறார்கள். கிராமங்களில் ஏற்படும் பல சிக்கலான பிரச்சினைகளை அவர்கள் தீர்த்து வைத்துள்ளார்கள். அவர்கள் பள்ளிக்கூடம் சென்று அரச கல்வித்திட்ட முறைப்படியான கல்வியைக் கற்கவில்லையே தவிர அறிவற்றவர்களாகச் சொல்லப்பட முடியாதவர்கள்.

கொஞ்சம் மது அருந்திவிட்டால் அவர்களில் சிலர் அருமையான கதைகளைச் சொல்வார்கள். தத்துவங்களை உதிர்ப்பார்கள். படித்தவர்களைக் கண்டால் அவர்களின் அறிவை ஆழம் பார்த்து தம் அறிவை வியந்து மகிழ்வார்கள்.

"இவனெல்லாம் என்னத்தத்தான் படிச்சானோ?" என்று மனதுக்குள் மட்டுமல்ல மற்றவர்களிடமும் கேலியாகச் சொல்வார்கள். அதனால் படித்தவர்கள் தங்கள் அறியாமையை இவர்களிடம் காட்டக் கூடாது என்பதற்காக இவர்களிடம் கதைக்காமல் விலகிச் செல்வார்கள்.

**பன்றி —ஆமை**

ஒருநாள் எனது முறை என்று சொல்லலாம். ஒரு பெரியவர் மதுவில் கொஞ்சம் நனைந்த நிலையில் என்னுடன் உரையாட வந்தார். எனக்கு இத்தகைய படிக்காத மேதைகளுடன் உரையாடுவது மிகவும் பிடிக்கும்.

அவர் என்னிடம் "பண்டியத் திண்டவன் பரம ஞானி. ஆமையத் திண்டவன் அதவிட ஞானி" இதுக்குப் பொருள் தெரியுமோ என்று கேட்டார். நல்ல வேளையாக எனது நண்பர் ஒருவர் இடையில் வந்து என்னை அழைத்துச் சென்று விட்டார்.

இல்லாது போனால் எனது அறியாமையை அறிந்து அவர் மகிழ்ந்திருப்பார். மற்றவர்களுக்கும் சொல்லி தன்னோடு ஒப்பிட்டு நாங்கள் படித்த கல்வியைக் கேலி செய்திருப்பார்.

அடுத்த தடவை அவரைச் சந்திக்கும்போது அதன் பொருளைத் தெரிந்து கொண்டு எனது அறிவு மேதாவிலாசத்தைக் காட்டினேன். அவருக்குப் பிடித்துவிட்டது. அன்றிலிருந்து அவரோடு உரையாடுவது எனக்கு மேலதிக மகிழ்ச்சியைத் தந்தது.

பண்டி என்பது பன்றி என்ற சொல்லின் திரிபு. கிராமிய வழக்குச் சொல். திண்டவன் என்பது தின்றவன் என்ற சொல்லின் திரிபு. தின்றவன் என்றால் வென்றவன் என்று பொருள். மிகவும் வல்லமையுள்ளவனைப் பார்த்து அவன் "யமனத் திண்டவன்." என்று சொல்வார்கள்.

இந்த அடிப்படையில் "பண்டியத் திண்டவன் பரமஞானி" என்றால் பன்றியை வென்றவன் பரம ஞானி என்றுபொருள். பன்றி தனது முன் பற்களால் நிலத்தை ஆழமாகத் தோண்டித் தோண்டி மண்ணுக்குள் இருக்கும் நல்ல கிழங்குகளைத் தேடித் தேடி எடுத்துச் சாப்பிடும் வழக்கமுள்ள ஒரு மிருகம்.

ஒருவன் நல்ல அறிவு பெற வேண்டுமென்றால் நூல்களை ஆழமாக ஆராய்ந்து கற்கவேண்டும். கல்லுதல் என்றால் தோண்டுதல் என்று பொருள். இதிலிருந்துதான் கல்வி என்ற சொல்லே வந்தது என்கிறார்கள்.

நூல்களை நன்றாக ஆழமாக ஆராய்ந்து அவற்றின் உட் பொருள்களைக் கண்டு எடுத்துக் கொள்பவனே பரம ஞானி. மண்ணைத் தோண்டி ஆராய்ந்து கிழங்குகளை எடுத்து உண்ணுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்றியின் செயலை வென்றவனாக பல நூல் களையும் ஆழமாக ஆராய்ந்து கருத்துக்களை எடுத்துக் கொள்பவனே பரம ஞானி. இதுவே பண்டியைத் திண்டவன் பரம ஞானி என்பதன் பொருள்.

ஆமையைத் தின்றவன் என்றால் ஆமையை வென்றவன் என்று பொருள். ஆமை நான்கு கால்களையும் தலையையும் வெளியே காட்டியபடி மெதுவாக நடந்து செல்லும் ஒரு பிராணி. ஏதாவது ஆரவாரம் கேட்டால் உடனடியாகத் தனது தலையையும் கால்களையும் தனது ஓட்டுக்குள் உள்ளே இழுத்துவிடும் ஆரவாரம் அடங்கியபின் தனது பயணத்தைத் தொடங்கும்.

மனிதன் தனது இலட்சியத்தை அடைய வேண்டு மென்றால் அதற்குத் தடையாக இருக்கும் புற ஆரவாரங்களிலிருந்து தனது ஐந்து புலன்களையும் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். அறிவின் வழியில் ஐம்புலன்களும் செயற்பட்டால் அவன் ஞானி ஆகிவிடுவான். என்கிறது திருமந்திரம்.

ஆமையை வென்றவன் பரம ஞானியை விட மேலான ஞானி என்ற பொருளிலேயே "ஆமையத் திண்டவன் அதவிட ஞானி" என்று சொல்வார்கள்.

திரு மந்திரத்தில் "ஐந்தும் அடக்கு அடக்கு என்பார் அறிவிலார் -- என்றொரு பாடல் உண்டு. திருவருட் பயனில்

**"புலன்அடக்கித் தம்முதற்கண் புக்குறுவர் போதார்**
**தலன்டக்கும் ஆமை தக"**

என்றொரு குறள் உண்டு.

**"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப் புடைத்து."**

என்று திருக்குறளில் ஒரு குறள் உண்டு.

கிராமத்துப் படிக்காத மேதைகளிடமிருந்து பல பாடங்களை நான் படித்திருக்கிறேன்.

## மாமியார் ---மருமகள்

எங்கள் கிராமத்தில்(பம்பைமடு) செண்பகம் என்ற பறவையோடு சம்பந்தப் பட்ட ஒரு சிறு நாட்டார் பாடலை நாங்கள் அந்தக் காலத்தில் சொல்லி விளையாடுவோம். செண்பகம் என்ற பறவை வீட்டு முற்றத்து மரங்களில் வந்து இருந்தால் அந்தப் பறவையைப் பார்த்து "செண்பகம்! செண்பகம்! மாமியார் வாறார் மணிச்சத்தம் கேட்குது மற மற" என்று சொல்வோம்.

அப்போது இதன் அர்த்தம் தெரியாது. இப்போது? இது மருமகள் ஒருத்தி செண்பகத்தைப் பார்த்துச் சொல்லுகின்ற ஒரு பாடல். கூட்டுக் குடும்ப வாழ்க்கையில் மருமகள் மாமியாருக்குக் கட்டுப்பட்டு சுதந்திரத்தை இழந்திருந்த காலத்துப் பாடல் இது.

மருமகள் எப்பொழுதும் வேலை செய்து கொண்டிருக்கவேண்டும். சிரித்துக் கலகலப்பாக இருக்கக் கூடாது. யாரோடும் உரையாடி மகிழக்கூடாது. என்று பல கட்டுப்பாடுகள் இருந்த காலம் அது. "பொம்பிள சிரிச்சாப் போச்சு புகயில விரிச்சாப் போச்சு" என்று இருந்த காலம்.

வீட்டு முற்றத்து மரத்தில் வந்து நிற்கும் செண்பகத்தைப் பார்த்து மாமியார் இல்லாத நேரத்தில் மருமகள் மகிழ்ச்சியடைவாள். அதனோடு தன் பாட்டில் உரையாடுவாள்.

அந்நேரத்தில் மாமியார் வந்து விட்டால் மருமகளின் மகிழ்ச்சிக்குக் காரணம் கேட்பாள். உண்மையைச் சொன்னால் மாமியார் நம்ப மாட்டாள். நம்பினால் செண்பகத்தின் மேல் கோபங் கொண்டு செண்பகத்தைக் கலைத்துத் துரத்திவிடுவாள். பின்பு செண்பகம் அந்த வீட்டுப் பக்கமே வராமல்ப் போய்விடும். தனக்கிருந்த ஒரே ஆதரவுப் பேச்சுத் துணையை யும் அவள் இழக்கவேண்டி வந்துவிடும்.

அதனால் மாமியார் செண்பகத்தைக் காணாதிருப்பதற்காக அதை மறை, மறை, என்று சொல்லுவாள்.

"பூனைக்கு மணிகட்டுவது யார்?" என்பது போல மாமியாருக்கு மணி கட்டுவது யார்.? எப்படியோ மாமியார் வரும் போது மாமியாரின் ஆபரணங்களிலிருந்து ஒலி எழும்புவதைச் சாதகமாக்கி மருமகள் தப்பித்துக் கொள்வாள் என்று எடுத்துக் கொள்ளலாம்.

செண்பகத்தை சிலர் வீட்டில் வளர்ப்பார்கள். அப்போது அதற்கு கழுத்தில் மணி ஒன்றைக் கட்டி விடுவார்கள். அந்தச் செண்பகத்தின் மருமகளோடு அந்த வீட்டின் மருமகள் உரையாடுவதாகவும் இந்தப் பாடலைப் பார்க்கலாம். செண்பகங்களின் மூலம் மாமியார் மருமகள் உறவைச் சொல்வதாகவும் இந்தப் பாடலைப் பார்க்கலாம்.

மாமியார் மருமகள் உறவு அக்காலத்தில் எப்படி இருந்தது என்பதற்கான ஒரு சான்றாக இந்த நாட்டார் பாடலைச் சொல்லலாம்.

## பட்டணம்–பட்டினம்

தமிழ்ச் சொற்களின் பயன்பாட்டில் சில நுட்பமான வரைமுறைகள் உள்ளன. எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் ஒரு திரையிசைப் பாடல் புகழ் பெற்ற பாடலாக ஒருவகையில் நகைச் சுவைப் பாடலாகவும் விளங்கியது.

“பட்டணந்தான் போகலாமடி பொம்பளே—“ என்று செல்லும் அப்பாடல். அப்பாடல் “வேல முடிஞ்சு நான் பீச்சுக்குப் போவேன். மீந்த பணத்திலே மீனும் வாங்குவேன் –“என்று தொடரும்.

இப்பாடலில் ஒரு தவறைக் கண்டு பிடித்துச் சொன்னார் கலைஞர் மு.கருணாநிதி. பட்டணத்தில் பீச் அதாவது கடற்கரை இருக்காது. பட்டணந்தான் போகலாமடி என்று தொடங்கி பீச் சுக்குப் போவதாகக் கூற முடியாது. என்று குறை கூறினார் கலைஞர்.

தமிழில் நகரத்தைக் குறிக்க பட்டினம், பட்டணம் என்று இரண்டு சொற்கள் இருக்கின்றன. கடற்கரை சார்ந்த நகரம் பட்டினம். கடற்கரை சாராத நகரம் பட்டணம். என்பதுதான் இரண்டுக்கும் வேறுபாடு. யாழ்ப்பாணம் பட்டினம். வவுனியா பட்டணம்.

**ஓர்---ஒரு**

எங்கள் கிராமத்தில் இலக்கணம் அறியாப் பிள்ளைகளாக நாங்கள் பாடி விளையாடிய இலக்கண சுத்தமான பாடல் ஒன்று என்னை வியக்கவைக்கிறது. பாலர் கல்வி சார்ந்ததாகவும் இலக்கணம் சார்ந்ததாகவும் இருக்கும் அந்தப் பாடலைப் பார்ப்போம்.

மழை நேரத்தில் வீட்டுக்குள் பிள்ளைகள் வட்டமாக இருந்து ஒரு வாக்கியத்தைச் சொல்வார்கள். வாக்கியம் முடியும் இடத்தில் இருப்பவருக்குச் சிறு தண்டனை வழங்கப் படும். வாக்கியம் இதுதான்.

“ஓர் அம்மா கடைக்குப் போனார். ஒரு பழம் வாங்கி வந்தார். அது என்ன விலை.” இந்த வாக்கியத்தை முதன் முதல் ஆரம்பிப்பவர் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு சொல் என்ற வகையில் ஆரம்பித்து இறுதியில் அ.-- து.—எ—ன்--. ன--. வி.--லை.என்று முடிப்பார்.

லை என்ற எழுத்து யாரில் முடிகிறதோ அவருக்குச் சிறிய தண்டனை வழங்கப்படும். பின் அவர் ஆரம்பிப்பார். இப்படியே தொடரும். சிலர் சொல் சொல்லாக ஆட்களைச் சுட்டுவார். சிலர் தேவைக்கேற்ப சொல்லாகவும் எழுத்தாகவும் கலந்து ஆட்களைச் சுட்டுவார்.

உதாரணமாக ஓர் அம்மா கடைக்குப் போனார் ஒ—ரு—பழம் வாங்கி வ--.ந்-- தார். என்று தாம் விரும்பியது போலச் சொல்லுவார். எவரில் முடிக்க விரும்புகிறாரோ அதற் கேற்ப சொல்லாகவும், எழுத்தாகவும் சொல்லுவார்கள். இதுதான் விளையாட்டு.

தமிழ் மொழியில் ஓர் என்ற சொல் எங்கே வரவேண்டும் ஒரு என்ற சொல் எங்கே வர வேண்டும். ஈர் என்ற சொல் எங்கே வரவேண்டும் இரு என்ற சொல் எங்கே வரவேண்டும் என்று ஒரு வரையறை இருக்கிறது.

உயிர் எழுத்துக்களை முதல் எழுத்துக்களாகக் கொண்ட சொற்களின் முன் ஓர் என்ற சொல் வரும். ஏனைய இடங்களில் ஒரு என்ற சொல் வரும். ஈர், இரு என்பவற்றுக்கும் இதுவே விதி.

இதனைக் கற்பித்த பண்டிதர்கள் வில்லி பாரதத்தில் கர்ணன் சொல்வதாக வரும் ஒரு பாடலை உதாரணமாக்கி விளக்குவார்கள். “ஓர் ஊரும் ஒரு குலமும் இல்லா என்னை—“- என்று தொடங்குகிறது அந்தப் பாடல். இதில் ஊர் என்ற சொல்லின் முன்னால் ஓர் என்ற சொல்லும், குலம் என்ற சொல்லின் முன்னால் ஒரு என்ற சொல்லும் வருவதைக் காணலாம்.

ஊ -- உயிர் எழுத்து. கு-- உயிர்மெய் எழுத்து. அதாவது உயிரெழுத்து அல்லாத எழுத்து.

இந்த நுட்பத்தை கிராமத்துப் பாமரப் பிள்ளைகள் எப்படி அறிந்து கொண்டார்களோ நான் அறியேன். ஓர் அம்மா, ஒரு பழம். அம்மா விற்கு முன்னால் ஓர். பழத்திற்கு முன்னால் ஒரு. இப்போது பாடலைப் பாருங்கள். ஓர் அம்மா கடைக்குப் போனார். ஒரு பழம் வாங்கி வந்தார்.

எங்கள் காலத்தில் அ--- னா— ம்--அன்னா— மா--வன்னா அம்மா என்றுதான் சொல்லித் தந்தார்கள். இன்று இந்த முறை விளங்காது என்று கருதி நுட்பமான ஒருமுறையைக் கையாளுகிறார்கள்.

அ ---ம்--- மா ---அம்மா. இதனை எமது கிராமத்துச் சிறுவர் சிறுமியர் அந்தக் காலத்திலேயே விளையாட்டில் பயன் படுத்தி தமிழ் கற்றார்கள் என்றால் நம்ப முடியவில்லையா.?

“அது என்ன விலை?” என்பதை அ—து—எ—ன்--ன—வி—லை- என்று விளையாட்டில் பயன்படுத்திய மேதாவிகள் எங்கள் கிராமத்துச் சின்னஞ்சிறுசுகள்.

கிராமங்களில் இப்படி எத்தனையோ செய்திகள் உண்டு. அறிவோம். பயன் பெறுவோம்.

OOO




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீன அறிவியல் புனைகதை



# பறத்தல்





சீ ஹுய் (Chi Hui)

தமிழில்: சு. முரளிதரன்

சீனாவில் நன்கறியப்பட்ட அறிவியல் புனைகதை எழுத்தாளர் சி ஹுய்யின் (**Chi Hui**) இந்த சிறுகதையில், மனித இனம் வேற்றுக்கிரக ஆக்கிரமிப்புக்குட்பட்ட பின்னர் சட்டபூர்வமான வேற்றுக்கிரக மேலாளர்களின் விருப்பத்திற்கு எதிராக பறக்க வேண்டும் என்று கனவு வெளிப் படுகின்றது.

*000*

விமானமானது தரையிலிருந்து புறப்படுதல், நங்கூரமிடப்படாத கிளம்புதல் அல்லது வளி உந்துவிசையால் அல்லது ராக்கெட் விசையால் மட்டுமே விமானத்தை செலுத்துதல் ஆகியவை சட்டவிரோதமான நடத்தையாகக் கருதப்படும்.

- எந்தவொரு விமான முறைகேட்டு செயலிலும் குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்ட அனைத்து தரப்பினரும் தண்டிக்கப்படுவார்கள் என்பதோடு, அதில் மூவர் எழுந்தமான முறையில் தெரிந்தெடுக்கப்பட்டு, தன்னிச்சையான கூட்டமைப்பால் (arbitrary association) குற்றவாளிகளாகக் கருதப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்படுவார்கள்.
- சட்டத்திற்குப் புறம்பாக நடந்துகொள்ளும் குற்றவாளிகளுக்குத் தெரிந்த தரப்பினருக்கு தெரிவு முன்னுரிமை அளிக்கப்படும்.
- நோய் எதிர்ப்பு சக்தி அட்டைகளை வைத்திருக்கும் பிரஜைகள் தன்னிச்சையான தெரிவிலிருந்து விடுவிக்கப்படுவார்கள், இது ஒரு சுற்று தெரிவுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

**– பிரகடனம், விமானச் சட்டம்**

1

இதுதான் கடைசி நிறுத்தம்.

பொதியை தூக்கிக்கொண்டு அந்த பெண் ரயிலில் இருந்து இறங்கினாள். உடனடி நூடுல்ஸ (Instant noodles); பெட்டி அவளது சிறிய பைக்குள்ளிருந்தவாறு கிசுகிசுத்தது. அவளில் கொஞ்சம் பதட்டம் காணப்பட்டாலும் ஒரு கிளர்ச்சியுற்ற தன்மை இருந்தது. அவளை இனங்கண்டு விட்டால் அது அவளை மரணத்தில் கொண்டுபோய் நிறுத்தும். அதுமட்டுமல்ல மேலும் மூன்று அப்பாவிகளும் மரணித்தாக வேண்டும். அவள் அங்கேயே நின்று தயங்கி தயங்கி அடியெடுத்து வைத்து நடந்தாள்.

அது ஒரு சிறிய நகரம் என்பதை ஒரே பார்வையில் புரிந்து கொண்டாள். அங்கே அமைதியாக ஒரு நிழல் தருமிடத்தே ஒதுங்கி தன்னை குளிர்ச்சிப்படுத்திக்கொண்டிருந்த அறிமுகமற்ற ஒருவனிடம் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அங்கு வந்துவிட்டிருந்த ஒரு நபரை குறித்து அவள் விபரம் கேட்டாள்.

"இல்லை, இல்லை, அவர் இங்கு மணமுடிக்கவென்று வரவில்லை. அவர் தானே வந்தார்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஆம், ஒருவேளை அவர் தன்னந்தனியாக வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும்”

“இல்லை, அவர் ஒருவேளை இந்த நகரத்தில் இல்லாதிருக்கலாம்., ஆனால் அவர் நகருக்க வெளியே இருக்கலாம்”

“எப்படியிருந்தாலும் நன்றி, நான் வேறொருவரிடம் கேட்பது நல்லது...”

“ஆம், 30 வயதுக்கு மேற்பட்ட ஒருவர் தனியாக வசிக்கிறார்..”.

கடைசியாக அவள் அவரின் முகவரி கிடைக்கும் வரை பலரிடம் உரையாடல்களை நிகழ்த்திக்கொண்டு கால்நடையாகவே அரை நாளை அங்கு கடத்தினாள்.

“அங்கு ஒரு வாகனத்தை அமர்த்தி போக கூடிய இங்க வசதிகள் இல்லை. நீங்கள் ஒரு ரிக்சா வண்டியை எடுத்துக் கொள்ளலாம், ஆது கொஞ்சம் தூரம் வரைக்கும் போகலாம். ஆதன் பின் உள்ள தூரத்துக்கு நடக்க வேண்டும். அவர் ஒரு பள்ளத்தாக்கில் வசிக்கிறார், அங்கு ஒரு காளான் பண்ணையை ஆரம்பித்து நடத்தி வருகின்றார்.”

அவள் தெளிவான பயண வழிகாட்டல்களை பெற்றுக் கொண்டு புறப்பட்டாள். இலையுதிர்கால வறண்ட காற்று வீசும் போது குளிர்ச்சியாக இருந்தது. மண் பாதையிலிருந்து புழுதி மேகங்கள் எழுந்தன. அவளது இடது கால் பாதை மருங்குக்குழிவுக்கு (rut) உள்ளே தள்ளப்பட்டதால் அவரது கருமையான ஜீன்ஸ் மீது மஞ்சள் மண் படிந்திருந்தது.

"போகுமிடம் வெகு தொலைவில் இருக்கும் போல,” அவள் நினைத்தாள்.

எதிரிகளால் தோல்விக்கு முகங்கொண்டு நாடுகடத்தப்பட்ட தலைவர் தொலைதூர இடத்தில் வசிப்பார், இல்லையா? அப்படி நினைத்ததும் அவள் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. அவள் நீண்ட காலமாக அவரை தேடிக்கொண்டிருந்தாள். இளைஞர்கள், அவளது நண்பர்களைப் போலவே, எப்போதும் அவரைப் பற்றிய கதைகளைச் சொன்னார்கள்: விசித்திரமான வேற்றுகிரகவாசிகள் எங்கள் தாயகத்தை வென்ற பிறகு பறந்து சென்று வாழும் ஒரே நபரான அவர் சுதந்திரமாக அமைய வேண்டிய வானத்துக்காகப் போராடினார், ஒரு மாபெரும் எழுச்சிக்கு வழிவகுத்தார், ஆனால் தோல்விக்குப் பிறகு தலைமறைவாகிவிட்டார். அவர் மீண்டும் வந்து இளைஞர்களை பறக்கச் செய்வாரா? அவர்கள் ஆச்சரியத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அவளுடைய நண்பர்கள் கதையை ஒரு புனைவாகவே எடுத்துக்கொண்டார்கள், ஆனால் அவள் அப்படி அல்ல - அவள் அவர் இருக்கும் இடத்தை கண்டுபிடித்து விட்டாள்.

தொடர்ந்து நடந்த அப்பெண்ணின் கால்கள் சோர்ந்து போயின. அவள் தரையில் அமர்ந்து, நீளும் பாதையை பார்த்துக்கொண்டே தான் கொண்டு வந்திருந்த வெந்நீர் குடுவையிலிருந்த சூடான பானத்தை பருகினாள். கண்ணுக்கு நேரே தோன்றிய பசுமையான மலைகளின் திரட்சியாக அமைந்த பகுதியில் மரங்கள் பொன்னிறமாகவும் சிவப்பு நிறமாகவும் இலையுதிர்காலத்துக்காக மாறத் தொடங்கி யிருந்தன. அந்தக் காட்சி மிக அழகாக இருந்தது, தன் தோழிகளுக்கு அதைப் பார்க்க வர வாய்ப்பில்லாமல் போய்விட்டதே என்று வருந்தினாள்.

அது ஒரு பேச்சாகவே இருந்தது. பறந்து செல்வோம் அல்லது எதுவாக இருந்தாலும் பறந்து செல்லலாம். சிறுவர்கள் உண்மையில் ஒரு இயந்திரமின்றி பறக்கும் மிதவை வானூர்தியை (Glide) உருவாக்குவார்கள் என்று யாரும் நினைக்கவில்லை. அப்போது யாரோ ஒருவர் அது குறித்து முறைப்பாடு செய்தார். அவள் தயாரிக்கும அந்த செயற்பாட்டில் ஈடுபட வில்லை, அதன் காரணமாக அவள் அழிவு தவிர்க்கப்பட்டது. ஒரு லேசர் கதிர் வானத்தி லிருந்து கீழே பீச்சியடிக்கப்பட்டு அந்த சிறுவர்களைத் தாக்கியது. அவர்களின் உடலில் இருந்து குடல்கள் வெளியே கொட்டின. பார்க்க அது கொடுமையாக இருந்தது.

எந்த மூவர் தெரிவு செய்யப்படுவார்கள் என்று சிறுவர்களின் அறிமுகமானவர்கள் பயத்துடன் காத்திருந்தனர். அவள் தெரிவு செய்யப்படவில்லை, ஆனால் அவளுடைய சிறிய சகோதரி தெரிவாகியிருந்தாள்.

அந்த பெண் தன் சகோதரியின் மரணத்தை பார்க்கவில்லை. அந்தச் செய்தியைக் கேட்ட வுடனே அவள் தன் பயணத்தைத் தொடங்கினாள். அவளுக்குள் கோபம் கொழுந்துவிட்டு எரிந்தது. அவளுக்கு நிலையான பங்காளரோ அல்லது துணையோ இல்லை. அவள் இப்போது ஒட்டிக்கொள்ள வேண்டியதெல்லாம் ஒரு கட்டுக்கதையோடும் தெளிவற்ற நம்பிக்கை யோடும்.

அவள் வெந்நீர் குடுவையின் மூடியை எடுத்து மூடியவாறு எழும்பி நின்று நெடுநடையை தொடர்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌராணிக எதிர்ப்பாளரே (mythical resister), நான் உங்களை கண்டுபிடிக்கிறேன். இதையெல்லாம் எதிர்த்துப் போராடுவது எப்படி என்று எனக்கு கற்றுக்கொடுங்கள். வானத்திலிருக்கும் இந்த பெயரிடப்படாத சக்தியை எப்படி எதிர்த்துப் போராடுவது என்று சொல்லுங்கள்.

2

சூரியன் மறையும் நேரத்தில் அவள் அடைவிடமான பள்ளத்தாக்குக்கு வந்தாள்.

ஒரு சிறிய, களங்கமற்ற வெள்ளைக் கட்டிடம் அதன் புகைபோக்கியிலிருந்து புகையைக் கக்கிக் கொண்டிருந்தது, கதவின் வாசல் வழியாக பார்த்த போது, ஒரு மனிதர் கோடரியால் விறகினை பிளந்து கொண்டிருந்தார். அவர் டி-சேர்ட் மற்றும் சாம்பல் நிற சௌகரிக நீளக்காற்சட்டையையும் அணிந்திருந்தார். அவரது நெற்றியிலிருந்து பிழிந்தது போல் வியர்வை மணிகள் உருவாகி, மண்நிற தோலின் கீழ் தசைகள் இறுக்கமடைந்து இருந்தன. அவனுடைய குளிர்ந்த பிரகாசிக்கும் கருப்புக் கண்கள் (jet black eyes) அசையும் கோடரியின் மீது கவனம் செலுத்திக்கொண்டிருந்தன, அது மரக்கட்டையை பிளந்த வண்ணம் இயங்கியது.

பெண் தயங்கினாள்.

"திரு. கின்,'' அவள் மிருதுவாக அழைத்தாள்.

அந்த நபர் சற்று நிதானித்து எதிர்பாராத விருந்தாளியாக அவளை நோக்கினார்.

அவள் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு "என்னை மன்னியுங்கள்," என்றாள். "மன்னிக்கவும், நீங்கள் மிஸ்டர் கின் யிஹெங்?"

"அது நான்தான்." அலட்சியத்துடன் தன் புருவத்தைத் துடைத்தார். "உனக்கு என்ன வேண்டும்?"


அவள் சிறிது நேரம் காத்திருந்துவிட்டு மெதுவாக, "எனக்கு பறக்க வேண்டும் சார்'' என்றாள்.

அவர் ஏளனமாக முகம் சுளித்தார், "இல்லை, நீ பறக்க விரும்பவில்லை. நீயும் என்னைப் போல் பறந்து வாழ விரும்புகிறாய். அந்தப் பரத்தையின் புத்திரர்களை எதிர்த்து நின்ற பிறகும்'' என்று வானத்தை சுட்டிக் காட்டினார். "நீ என்னைப் போலவே தொடர்ந்து வாழ விரும்புகிறாய்."

பெண் உறைந்து போனாள். அவருடன் அவள் எதிர்பார்த்த உரையாடல் இதுவல்லவே!

"நான் ஏன் இங்கே இருக்கிறேன் என்று சொல்கிறேன், சின்னப்பெண்ணே." அவர் நடந்து வந்து அவள் முகத்துக்கு முன்னே நின்றார். அவள் ஓட விரும்பினாள், ஆனால் கால்கள் தரையோடொட்டி உறைந்து போயின.

"கேள்," அவர் குரல் ஆழமாக இருந்தது, ஒரு நீர்ச்சுழி போல் அவளை இழுத்தது. "அவர்கள் என்னோடு எங்களில் பலரைக் கைப்பற்றினர். ஆனால் இன்னும் சிலர் அகப் படாமல் இருந்தனர். மற்றவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று சொன்னால் என்னை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக விடுவேன் என்றார்கள். அதனால்தான் நான் இங்கே இருக்கிறேன், இன்னும் உயிருடன் இருக்கிறேன். நான் ஒரு துரோகி. எதிர்ப்பாளர்களை காட்டிக் கொடுத்தேன். ஆண்களையும், பெண்களையும், பிள்ளை களையும் காட்டிக் கொடுத்தேன் என்னை நம்பிய ஒவ்வொருவரையும்." அவர் வாயை விகாரமாக்கி பற்களைக் காட்டி, "இப்போ உன் கேள்விக்கு பதில் இருக்கிறதா குட்டிப் பெண்ணே?" என்று உறுமினார்.

அவளுக்கு எப்படி பதில் சொல்வது என்று தெரியவில்லை, அவருக்கு பதில் தேவையில்லை என்றும் தோன்றியது.

அன்று இரவு, அவள் பண்ணையின் விருந்தினர் அறையில் தங்கினாள். அந்த மனிதருக்கு மனைவி இல்லை, ஆனால் அவருக்கு பண்ணை மற்றும் பிற வணிக முயற்சிகளை கவனித்துக்கொள்ள ஒரு வயதான பெண்மணியை வேலைக்கு அமர்த்தியிருந்தார். சுத்தம் செய்யப்படாத பற்கள் மற்றும் பூண்டு வாசைன வீசும் சுவாசம் கொண்டிருந்த பெண்ணுடன் அவள் படுக்கையைப் பகிர்ந்து கொண்டாள்.. அவள் இரவை முழுவதும் முண்டி முண்டியே கழித்தாள்.

மறுநாள் காலை அந்த இடத்திற்கு வரமாட்டேன் என உறுதியெடுத்து விடை பெறாமல் கிளம்பினாள்.

3

அந்தப் பெண் ஊருக்குத் திரும்பி ஒரு சிறிய நிறுவனத்தில் வேலை செய்யும் ஒருவரை மணந்தாள். சில நேரங்களில் அவர்கள் ரயிலில் அல்லது வாகனத்தை ஓட்டிக்கொண்டு விடுமுறைக்காக நகரத்தை விட்டு வெளியேறுவார்கள். விமானங்கள் எவ்வளவு வசதியானவை என்பதை அவர்கள் நினைவு கூர்ந்ததைத் தவிர, வாழ்க்கை தொடர்ந்தது அவர்களுக்கு பறக்கும் வாய்ப்பு மிக மிக அரிதாகவே வந்தது. பின்னர், அவர்களுக்கு குழந்தை பிறந்தது,

அதன் பிறகு ஒருநாள் ஓர் இயந்திரன் வடிவில் ஒருகூரியர் வந்தது. அது வானதிபதிகளிடமிருந்து வந்தது.

"அமெரிக்காவில் சமீபத்திய கிளர்ச்சியின் காரணமாக, 122 பிரஜைகள் தன்னிச்சையான கூட்டமைப்பால் (arbitrary association) குற்றவாளிகளாக கண்டறியப்பட்டனர். நீரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர் என்பதை வருத்தத் துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இயந்திரத் தனமாக குரலில் அது சொன்னது. தேர்ந் தெடுக்கப்பட்ட பிரஜைகளுக்கு அவர்களின் மரணதண்டனை அறிவிக்க குறிப்பாக இந்த வகை ரோபோ பயன்படுத்தப்பட்டது. "வான பிரபுக்கள் நியாயமற்றவர்கள் அல்ல. உம்மால் தீர்க்கப்பட வேண்டிய விவகாரங்களை நிறைவுறுத்த குறைந்தபட்சம் ஒரு மணிநேரம் கால அவகாசம் உமக்கு கொடுத்துள்ளார்கள்" என தொடர்ந்தது.

அவளது கணவன் மரணப்பீதியுற்று வெளிறிப் போனான் (deathly pale) இன்னும் இதுபோன்ற விடயங்களைப் புரிந்து கொள்ளும் பருவமற்ற குழந்தை தந்தையின் மார்பில் குறுகியவாறு முகம் புதைத்து அழுதது. அந்தப் பெண்ணோ தன் உடலிலிருந்து தான் வெளியே இழுக்கப்பட்டதைப் போல உணர்ந்தாள்.

அவளுக்கு இறுக்கப்பட்ட ஒரு மணி நேரம் இருந்தது.

"பொறுத்திருக்கவும்" அவள் எதையோ யோசித்தாள். இன்னும் அதிக நேரம் இல்லை, ஆனாலும் அது ஒரு வாய்ப்பு. "வானாதிபதிகளுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றத்தைப் புரிந்த ஒருவர் குறித்து புகாரளித்தால், நான் தப்பித்து வாழ முடியுமா?" என்று நீரில் மூழ்காமல் காப்பாற்றக்கூடிய ஒரு பொல்லைப் போல தூதுதாக வந்த ரோபோவின் குளிர்ந்திருந்த இயந்திரக் கையைப் பிடித்தாள்.

தூது அண்ணாந்து பார்த்து நின்றது. அது அதன் எஜமானர்களுடன் தொடர்புகொள்வது போல் தோன்றியது.

"அது சட்டவிரோத நடத்தையாக நிரூபிக்கப் பட்டால் நீங்கள் மன்னிக்கப்படுவீர்கள்" என்று அது பதிலளித்தது.


"நான் புகாரளிக்க விரும்புகிறேன்," அவள் உரத்து குரலெழுப்பினாள், "தனது வீட்டில் விமானம் வைத்திருக்கும் ஒரு மனிதரை எனக்குத் தெரியும்! அவர் பெய்லின் (Bailin) நகருக்கு வெளியே உள்ள பள்ளத்தாக்கில் வசிக்கிறார், அவருக்கு ஒரு காளான் பண்ணை உள்ளது..."

அவரிடம் உண்மையில் விமானம் இருக்கிறதா என்று அவளுக்குத் தெரியாது. அது இருக்கலாம் அல்லாது இல்லாதிருக்கலாம். ஆனால் அதை கண்டறிய அவகாசம் தேவைப்படும். அந்த அவகாச கால பகுதியில் சிறிது வாழலாம்.

ஒரு மணி நேரத்திற்குள் தூது ரோபோ திரும்பியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## கலாநிதி த. கலாமணி அவர்கள்

கலாநிதி கலாமணி அவர்கள் சமீபத்தில் அமரத்துவம் அடைந்தார் என்ற செய்தி ஈழத்துக்கலை, இலக்கிய உலகைப் பெரிதும் கவலைக்குள்ளாக்கியுள்ளது.

இவரின் பணிகள் பரந்துபட்டவை. வருகைதரு விரிவுரையாளர், இணைப்பாளர், ஆய்வரங்கங்கள்/ கருத்தரங்குகள் என்பனவற்றில் கட்டுரைகள் சமர்ப்பிப்பவர், நூல் வெளியீடுகளில் தலைமை, ஆய்வுரை/ மதிப்பீடு எனப் பல துறைகளிலும் தனது பங்களிப்பினை வழங்கியவர். கல்வித் துறையில் உயர் கலாநிதிப் பட்டம் பெற்றிருக்கும் இவர், வேடந் தரித்து மேடைகளில் நாடகம் நடித்தவர். எமது சகோதர சஞ்சிகையான ஜீவநதியின் பதிப்பாசிரியரும், ஜீவநதி சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் க. பரணீதரனின் தந்தையாரும் ஆவார்.

இவர், ஞானத்தில் சிறுகதை, கவிதை, கட்டுரை எழுதியுள்ளார். இவரது இழப்பு ஈழத்து இலக்கிய உலகிற்கு பேரிழப்பாகும். அன்னாரது ஆத்மா சாந்தியடைவதாக. – **ஆசிரியர்**

---

அவள் இதயம் ஸ்தம்பிக்க தொடங்கிய வேளை "நீங்கள் முறையிட்ட சட்டவிரோத செயல் சரிபார்க்கப்பட்டது," ரோபோவின் குரல் தட்டையாக வெளிவந்தது."குற்றவாளி தூக்கிலிடப்பட்டார். நீர் விடுவிக்கப்பட்டுவிட்டீர். உமது நோய் எதிர்ப்பு சக்தி கொடுப்பனவை பயன்படுத்தி விட்டீர். குட்பை மேடம்."

அவள் எதையும் பார்க்காமல் அங்கேயே நின்றாள். அவர் இறந்துவிட்டதையும் தான் உயிருடன் இருந்ததையும் அவள் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை.

அவள் மண்டைக்குள் ஒரு குரல் மீண்டும் மீண்டும் ஒரு கேள்வியை எழுப்பியது: அவரிடம் உண்மையில் விமானம் இருந்ததா?

4

அவள் அந்த பள்ளத்தாக்குக்கு மீண்டும் வந்தாள்.

அவளது கணவன் அவளிடம் வேண்டவே வேண்டாம் என்று கெஞ்சினான், அவள் வெளியேறும் போது அவளது குழந்தை வீறிட்டு அழுதது, ஆனால் அவளது தினவெடுத்த ஆர்வம் மிகவும் வலுவாக இருந்தது, அவள் மீண்டும் ஒரு முறை புழுதி மேகங்கள் தெரியும் வழியாக இப்போது வெறிச்சோடிக் கிடக்கும் பள்ளத்தாக்கில் நடந்தாள்.

அந்த மனிதர் இறந்து ஒரு மாதம் கடந்து விட்டது. அவரது வீடு தூசியால் மூடப்பட்டிருந்தது மற்றும் தரையில் பரவியிருந்த கற்களுக்கு மேல் நீண்ட புல் வளைந்திருந்தது. அதன் செழிப்பான, பசுமையான நிறம் அவள் கண்களை காயப்படுத்துவது போலிருந்தது.

கொல்லைப்புறத்தில் அவள் படிக்கட்டு ஒன்றைக் கண்டாள். மலை உச்சி வரை படிகளில் ஏறிச்சென்று அப்பால் பார்த்த போது பரந்த, தட்டையான புல்வெளியைக் கண்டாள். யாரோ அதை சமன் செய்திருக்க வேண்டும். புல்வெளியின் கடைசியில் ஒரு கொட்டகை மாதிரி அமைக்கப்பட்டவொன்றில் ஒரு மிதவை வானூர்தி நிறுத்தப்பட்டிருந்தது.

அவள் நடந்து அதனருகே சென்றாள், கரடுமுரடான இறக்கைகள் மற்றும் கையால் செய்யப்பட்ட உந்து சுழலியை (propeller) கண்டாள். மிதவை வானூர்தி மிகவும் கவனமாக தயாரிக்கப்பட்டது போல் இருந்தது, மேலும் அது நேர்த்தியாக பேணப்பட்டிருந்தது.

ஒரு நொடி, அவள் அருகில் அந்த மனிதர் நிற்பது போல் உணர்ந்தாள்.அவர் அங்கு நின்றிருந்தால் அவர் என்ன நினைத்திருப்பார்: அவர் காட்டிக் கொடுத்த மக்களைப் பற்றி? அவரால் காரணமாக கொல்வதற்கு தேர்ந் தெடுக்கப்பட்டவர்கள் யார் என்பது பற்றி.?

இப்போது நானும் அவரும் துரோகிகள்.... எதிர்ப்பாளர்கள்

அவர் இங்கேயே நின்று கொண்டிருக்க வேண்டும்.

அவள் அந்த மனிதராக தன்னை உருவகப்படுத்திக்கொண்டு அவர் பார்ப்பதாபக கற்பனை செய்துகொண்டு, அந்த பரந்த மலைத்தொடரில் நீண்டுகொண்டிருந்த ஒரு முகடு வழியாக தொடர்ந்து சென்றாள். அது ஒரு மென்மையான ஓடுபாதையாக இருந்தது, அது ஒரு ஆழமான பள்ளத்தாக்கில் ஆரம்பத்தில் முடிந்தது. அதிலிருந்து வானூர்தி விழுந்தால், காற்று அதை உயர்த்தும், நீங்களும் பறப்பீர்கள்.

○○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் புனைவு

# மரபணு வினாவிடை



ஆசி கந்தராஜா

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் எழுதிய முதலாம் சைவ வினாவிடையை நீங்கள் படித்திருக்கலாம். ஏழு அத்தியாயங்களைக் கொண்ட சைவ வினாவிடையின் முதலாம் அத்தியாயம் "கடவுள் இயல்" பற்றியது. அதிலுள்ள முதலாம், மூன்றாம், ஏழாம் கேள்விகள் இவை.

**உலகத்துக்குக் கருத்தா யாவர்?**

- சிவபெருமான்.

**சிவபெருமான் ஆன்மாக்களுக்காகச் செய்யுந் தொழில்கள் என்ன?**

- படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்றுமாம்.

**சிவபெருமானின் திருக்குமாரர்கள் யாவர்?**

- விநாயகக் கடவுள், வீரபத்திரக் கடவுள், வைரவக் கடவுள், சுப்பிரமணியக் கடவுள் என்னும் நால்வர்.

விநாயகர் முதல் முருகன் வரை, அனைத்து குமாரர்களும் சிவபெருமானின் பிள்ளைகளா? சிவபெருமான் செய்யுந் தொழில்கள் என்ன? என்ற வினாக்களுக்கு நாவலர் சொன்ன விடைகள் முற்றிலும் சரியானதா? என்ற கேள்விகள் ஒரு சிலரால் இன்றும் கேட்கப் படுகிறன. உமாதேவியார் தனது ஊத்தையை உருட்டியதால் தோன்றியதே பிள்ளையார் என வடஇந்திய நூல்களும் சிவபெருமானின் நெற்றிக் கண்களிலிருந்து தோன்றிய ஆறுபொறிகள் ஒன்றுசேர்ந்து ஆறுமுகமாகி முருகக் கடவுளாகியதாக தென்இந்திய புராணங் களும் சொல்கின்றன. இதன்படி பிள்ளையாரும் ஆறுமுகனாகிய முருகனும் கலவிமுறை மூலம் தோன்ற வில்லை, அவர்கள் சிங்கிள் பெற்றேருக்கு குளோனிங் மூலம் பிறந்திருக்க வேண்டுமென வாதிட்டான், என் நாத்திக நண்பனொருவன். இதன்மூலம் குளோனிங் என்னும் நவீன தொழில்நுட்ப முறை நமது சமயத்தில் ஆதிகாலத்திலேயே இருந்ததை ஒத்துக்கொள்ளுகிறாயா? என நண்பனுக்கு கவுண்டர் அட்டாக் கொடுத்தேன் நான்.

எதுஎப்படியிருந்தாலும் இந்து சமயத்தில் சொல்லப்பட்ட ஆழமானதும் சிக்கலானதுமான பல விஷயங்களை, பாமரர்களும் புரியும் வண்ணம் ஆறுமுக நாவலரால் வேறு விதமாக எழுதியிருக்க முடியாது என்பது எனது அபிப்பிராயம். அந்த வகையில் விவசாய அறிவியல் சார்ந்த விஷயங்களை சாமானியர்களும் புரிந்துகொள்ள, நாவலரின் வழியில் வினா விடைகளாகத் தரும் எனது கன்னி முயற்சியே இந்த அறிவியல் புனைவு.

உலகமெங்கும் மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் விவகாரம் சர்ச்சைக்குரியதாகவே உள்ளது. இவைகளால் ஏற்படும் நீண்டகால பாதிப்புக் களை, பாமர விவசாயிகள் அறிந்திருக்க நியாயமில்லை. காலாதி காலமாக எமக்கு பெருமை சேர்த்த மரக்கறி வகைகளும் தானிய வகைகளும் எமது பிரதேசங்களில் இப்பொழுது சாகுபடி செய்யப்படாதது மட்டுமல்ல, அவை அழிந்துபோகும் நிலையில் இருக்கின்றன. இத்தகைய பின்னணியில் ஒரு சாமானியன் மனதில் தோன்றும் கேள்விகளுக்கு இங்கு பதில் தரப்பட்டுள்ளது.

**மரபணு என்றால் என்ன?**

- ஒரு உயிர் அதன் சந்ததிக்குரிய இயல்புகளை, அடுத்த சந்ததிக்கு மாற்ற உதவும் அணுவை, மரபணு என்கிறோம். மரபணு தாய் தந்தையின் உருவ அமைப்புகளையும் குணாதிசயங்களையும் குழந்தைகளுக்கு கடத்துகிறது. இது மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் விலங்குகள், தாவரங்கள் ஆகிய அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மரபணு மாற்றங்கள் எப்படி நடைபெறுகின்றன?**

• மரபணுமாற்றங்கள் இயற்கையாகவோ செயற்கையாகவோ நடைபெறலாம். அயல் மகரந்தச் சேர்க்கை மூலம் ஒரு தாவரத்தின் மகரந்த மணி அதேயின இன்னொரு தாவரத்தின் குறிக்கு கடத்தப்பட்டு, சூலகத்தில் கருக்கட்டும்போது இயற்கையான மரபணு மாற்றம் நிகழும். காலாதிகாலமாக வெப்பம் மின்னல் போன்ற இயற்கைப் புறநிலைக் காரணிகளாலும் மரபணுக்கள் விகாரமடைந்து மரபணு மாற்றம் இயற்கையாக நடைபெறலாம்.

இதேவேளை நவீன தொழில் நுட்பத்தில் ஆய்வுகூடங்களில் மரபணுக்கள் செயற்கையாக மாற்றப்படுகின்றன.

**மரபணு மாற்ற தொழில் நுட்பமென்றால் என்ன?**

• ஒவ்வொரு உயிரினத்திலும் உள்ள இயல்புகளை (பழங்களின் சுவை, பூக்களின் மணம், மனிதனின் முகச்சாயல், போன்றவை) ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலை முறைக்கு கொண்டு செல்வதற்கு அடிப் படையாக இருப்பவை "ஜீன்"கள் என ஆங்கிலத்தில் சொல்லப்படும் மரபணுக்கள். ஓர் உயிரிலிருந்து நமக்கு தேவையான இயல்புகளைக் கொண்ட மரபணுக்களை பிரித்து, வேறு ஒரு உயிருக்குச் செலுத்தி, அந்த உயிருக்கு புதிய குணாதி சங்களை உருவாக்கும் முயற்சிதான் மரபணு மாற்ற தொழில் நுட்பம்.

**மரபணு மாற்றம் செய்யப்பட்ட மலட்டு விதைகள் என்றால் என்ன?**

• சுற்றுபுற சூழலின் சமனை அழிப்பதில், மரபணு மாற்றம் செய்யப்பட்ட மலட்டு விதைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மரபணு மாற்றம் செய்யப்பட்ட மலட்டு விதைகளிலிருந்து வளரும் பயிர்களில் பெறப்படும் விதைகள், மீண்டும் சாகுபடிக்கு பயன் படுத்த முடியாத விதைகளாகவே இருக்கும். இதற்கு ஏற்ற வகையில் செயற்கையாக அதன் மரபணுக்களில் மாற்றம் செய்யப்பட்டிருக்கும். விவசாயிகள் தங்கள் மகசூலில் இருந்து ஒரு பங்கு விதை களை, அடுத்த சாகுபடிக்கு ஒதுக்கி வைப்பது வழக்கம். அதாவது, நெல் அறுவடை செய்யப் பட்டால், அதில் ஒருபங்கு, விதை நெல்லாக ஒதுக்கி வைக்கப்பட்டு, அடுத்த சாகுபடிக்கு பயன்படுத்தப்படும். ஆனால் மரபணு மாற்றப் பட்ட மலட்டு விதைகள் மூலம் வளர்க்கப் பட்ட பயிர்களில் இது சாத்தியமில்லை.

**காரணம் என்ன?**

• மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதை களை, பெரிய தனியார் நிறுவனங்கள் உற்பத்தி செய்கின்றன. குறிப்பிட்ட மரபணு மாற்றங்களுக்கு, அவை அறிவியல் "காப்புரிமை" பெற்றுள்ளன. இதனால், ஒவ்வொரு முறையும், அவர்களிடம் இருந்துதான், அந்த விதைகளை வாங்க வேண்டும். பல நிறுவனங்கள், ஒரு படி மேலேசென்று, மரபணுவில் மேலும் பல மாற்றங்களைச் செய்து, மலட்டு விதைகளை உருவாக்கும் பயிர்களை விருத்தி செய்துள்ளன. இவைகள் வளர்ந்து நல்ல விளைச்சலைக் கொடுக்கும். ஆனால் இந்தப் பயிர்களின், விதைகளைச் சேகரித்து அவற்றை மீண்டும் விதைத்தால் அவை முளைக்காது. இதனால் விவசாயிகள், விதைகளுக்காக எப்போதுமே அந்த நிறுவனத்தையே நம்பி இருக்க வேண்டும்.

**பன்னாட்டு விதை வியாபார நிறுவனங்கள் செய்வ தென்ன?**

• விதை வியாபார கம்பெனிகள் மரபணு மாற்றம் செய்யப்பட்ட மலட்டு விதைகளை உலகம் எங்கும் சந்தைப்படுத்தி வருகின்றன. இந்த மலட்டு விதைகள் ஒரு முறை மட்டுமே விளைச்சலைக் கொடுக்கும். அந்த வருட விளைச்சலில் விவசாயி சேகரித்த விதைகளை அடுத்த போகம் விதைத்தால் அவை முளைக்காது. அதுமட்டுமல்ல, மலட்டுப் பயிர்களின் மகரந்தம் மற்ற பயிர்களுக்கு சென்று அதன் மூலம் மகரந்தச் சேர்க்கை நடந்தால், அந்தப் பயிர்களும், இதே போன்ற மலடான விதைகளைத்தான் உற்பத்தி செய்யும்.

**பாரம்பரிய முறையில் விவசாயம் செய்வதில் இருக்கும் சிக்கல் என்ன?**

• உதாரணத்திற்கு, ஒருவர் பாரம்பரிய முறையில் கத்தரிக்காய் சாகுபடி செய்கிறார் என வைத்துக் கொள்வோம். அடுத்த வயலில், இன்னொருவர் மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காய் சாகுபடி செய்தால் பாரம்பரிய முறையில் விளைந்த கத்தரிக்காய் விதைகளிலும், மரபணு மாற்றம் நிகழ்துவிடும்.

**எப்படி..?**

• மகரந்தச் சேர்க்கை மூலம் தான், கத்தரிப் பூ, கத்தரிக்காயாக மாறமுடியும். மரபணு மாற்றப்பட்ட கத்தரி வயலில் இருந்து மகரந்த மணிகள், காற்று மூலம் அல்லது தேனீக்கள் மூலம் பாரம்பரிய வயலுக்குப் பரம்பி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகரந்தச் சேர்க்கை நடைபெறும். இதனால் பாரம்பரிய வயலிலும் மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காய்கள் தான் உற்பத்தியாகும். ஒரு முறை இப்படி மரபணுக்கள் மாறிவிட்டால், அந்த மாற்றத்தை நீக்க முடியாது.

**ஒட்டுமொத்த விவசாயிகளும் பன்னாட்டு கம்பனி களின் மரபணு மாற்றப்பட்ட விதைகளை வாங்க மறுத்தால்..?**

- இப்படியான ஒரு எதிர்ப்பு நிலை இந்தியாவில் ஏற்பட்டது. விதை நிறுவனங்கள் அசரவில்லை. ஒரு கிராமத்தில் ஒருசில விவசாயிகளுக்கு மூளைச் சலவை செய்து, மரபணு மாற்றப்பட்ட விதைகளை இலவச மாகக் கொடுத்து, விவசாயம் செய்வதற்கான செலவையும் தருவதாக, சில வருடங்களுக்கு ஒப்பந்தம் போட்டர்கள். அவர்களும் ஆங்காங்கே மரபணுமாற்றப்பட்ட விதைகளை விதைத்துப் பயிர் செய்தார்கள். இவை விளைந்து பாரம்பரிய பயிர்களிலும் பார்க்க அதிக விளைச்சலைக் கொடுத்தது. இதேவேளை இவர்களின் மரபணு மாற்றப்பட்ட பயிர்களிலுள்ள மகரந்த மணிகள், அடுத்த வயலுக்கு பரவிப் பாரம்பரிய பயிர்களின் மரபணுவை மாற்றிவிட்டது. மொத்தத்தில் சில வருடங்களுக்குப் பின்னர், கிராமத்திலுள்ள எல்லா பயிர்களும் கரு முளைகளற்ற, மலட்டு விதைகளையே உற்பத்தி செய்தன. இந்த நிலையில், எல்லா விவசாயிகளும் விதை தானியங்களுக்காக விதை நிறுவனங்களையே தங்கி இருக்கவேண்டி வந்தது.

**பன்னாட்டுவிதை வியாபாரிகளின் உள் நோக்கம் என்ன?**

- பசிதான் மானிடத்தின் பொது மொழி. அதுதான் வன்னி விவசாயியை அபுதாபியில் ஒட்டகம் மேய்க்க வைக்கிறது, விவசாயியின் மனைவியை சவூதியில் ஆயா வேலை பார்க்க வைக்கிறது. ஒருவனை பட்டினி போட்டு, உணவுக்காக அவன் இன்னொருவனைச் சார்ந்து வாழும் நிலையை உருவாக்கினால், அவனை இலகுவாக அடிமைப் படுத்திவிடலாம். இதை பன்னாட்டு விதை வியாபாரிகள் நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறார்கள். இதனால்தான் இவர்கள் மலட்டு விதைகளை அறிமுகம் செய்து, விவசாயத்தை சீரழித்து, உணவு உற்பத்திக்குத் தங்களை சார்ந்து நிற்க வைக்கிறார்கள்.

**இதற்கு நாம் என்ன செய்யலாம்?**

- எம்மைச் சூழவுள்ள இயற்கையை முதலில் நாம் நேசிக்கவேண்டும். இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து பாரம்பரிய பயிர்களை, பெருமளவில் சாகுபடி செய்ய வேண்டும்.

சும்மாவா சொன்னார்கள் நம் முன்னோர்கள், ஒரு மரம் நூறு மனிதர்களுக்குச் சமமென!

○○○

# வெளியேற்றம்

ஊரை விட்டு உறவை விட்டு
உள்நாட்டை விட்டு
கூரை விட்டு குடும்பம் விட்டு
கூட்டாளிகளை விட்டு
தாரை தாரையாக தமிழினம்
தரை; கடல்; வான்வழியாக.

போகின்றார் ; போகின்றார்
போய்க் கொண்டிருக்கிறார்
வேகின்றார்; வேகின்றார்;
வெந்து தணிகின்றார்

பதவி விட்டு பணத்தை விட்டு
பந்த பாசம் சொந்தம் விட்டு
உதவி விட்டு உணர்வை விட்டு
உரிய பொருளுடைமை விட்டு
விதந்துரைத்து விசா வெடுத்து
வீட்டை விடடு வெளியேறுகிறார்

கருத்துரைக்கும் வழிகாட்டி ஆசிரியர்
கல்வி கற்கும் வயது மாணவர்
மருத்துவர்; தாதியர்; பொறியியலாளர்
மற்றும் விவசாயி வேலையாள்
பொருத்தமில்லை; இலங்கையென்று
போகின்றார்; அயல்நாடு!

**– கலாநிதி செ. ஞானராசா**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை



# அணிஞ்சில் காடு

செல்லையா சுப்ரமணியம்



குடிசைவீடு. அண்மையில்தான் கட்டிமுடிக்கப் பட்டதாக இருக்கவேண்டும். அந்தக் குடிசைக் குள்ளே ஏற்றி வைத்த குப்பி விளக்கின் சுடர் ஒருவர் முகம் மற்றவருக்குக் காட்ட முடியாமல் தவித்துக்கொண்டிருந்தது. தவித்தது சுடர் மட்டுமல்ல, குடிசைக்குள்ளிருந்த இரண்டு உள்ளங்களும்தான்! அவர்களுடைய எதிர்காலம்....ஏதோ ஒரு வேகத்தில் ஓடி வந்துவிட்டோம்... இந்த சமூகத்தை எதிர்த்து எப்படி வாழப்போகிறோம் என்று மனம் அலைபாய சிலையாய் இருந்தார்கள்.

தங்கமணியும் கனகராசாவும் தங்கள் வீட்டைவிட்டு ஓடிவந்து இந்த குடிசையில் அடைக்கலம் புகுந்து இன்றுடன் ஒரு மாதமாகிறது. இத்தனைக்கும் இவர்கள் சொந்த மச்சான் மச்சாள்தான். கனகராசாவின் தகப்பனும் தங்கமணியின் தாயும் சகோதரங்கள். பக்கத்துப் பக்கத்து வீடுகள். ஒரே காணியை சமமாக இரண்டாகப் பிரித்து மகளுக்கும் மகனுக்கும் எழுதிக் கொடுத்துவிட்டார் இந்த இளம் ஜோடியின் பாட்டனார்.

அண்ணன் கந்தையருக்கு தன் ஒரே தங்கை நாகமுத்து மேல் அலாதிப் பிரியம், அன்பு எல்லாம். இவர்களது சிறுவயதிலேயே தகப்பன் இறந்துவிட தாய் இரண்டாம் மணம் செய்து அவர்களுக்கு மேலும் நான்கு பிள்ளைகள். எனவே கந்தையருக்கு மொத்தம் ஐந்து சகோதரங்களென்றாலும் தன்னுடைய தகப்பனுக்குப் பிறந்தவர் நாகமுத்து என்பதால்தான் அவர்மேல் அண்ணனுக்கு அத்தனை பிடிப்பு. நகமும் சதையுமான பாசம் அவர்களது. இருவரின் திருமணங்களுக்குப் பின்னரும் இந்தப் பாசப்பிணைப்பு தொடர்ந்தது.

கந்தையருக்கு வாய்த்த மனைவி பாக்கியம் சிறப்பாக அமைய நாகமுத்துவுக்குக் கிடைத்த கணவன் சின்ராசுவோ வெட்டியாய் இருந்து ஊர் நியாயம் அளப்பவனாக அமைந்தது அண்ணனுக்கு கவலையை மாத்திரமல்ல மேலதிகமான பொறுப்பையும் சுமையையும் கொடுத்தது. கந்தையர் நல்ல உழைப்பாளி. தகப்பன் கொடுத்த இந்த வீட்டுக்காணியை விட கந்தையர் தேடிய தேட்டம் அதிகம். தோட்டம் துரவு வயல் காணியென்று அவர் கஷ்டப்பட்டு இரவு பகல் பாராமல் உழைத்துச் சம்பாதித்திருந்தார்.

அவரது வருமானத்தில் இடைக்கிடை தனது தங்கச்சி குடும்பத்துக்கும் மனைவிக்குத் தெரியாமல் பல உதவிகள் செய்து வந்தார். இது சிலவேளைகளில் மனைவிக்குத் தெரிய வரும்போது அவர்களுக்கிடையில் வாக்குவாதங்களும் வருவதுண்டு.

“குடும்பமெண்டு வந்தாப்பிறகும் எங்கடை பிழைப்பைப் பார்க்காமல் எல்லாத்தையும் உங்கடை தங்கச்சிக்குக் குடுத்து அவங்கடை குடும்பத்தையே பார்த்துக் கொண்டிருந்தால் நாளைக்கு எங்கடை கெதி?” என்று கந்தையரின் மனைவி அடிக்கடி புறுபுறுக்கத் தொடங்கியது அவருக்கு மேலும் தலையிடியைக் கொடுக்கத் தொடங்கியது. என்றாலும் முடிந்தளவு மனைவிக்குத் தெரியாமல் தங்கை குடும்பத்துக்கு உதவி செய்து கொண்டுதான் வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு குடும்பங்களிலும் வாரிசுகள் உதிக்கத் தொடங்கினர். கந்தையர் குடும்பத்தில் தான் கனகராசா முதல் வாரிசாய் பிறந்தான். ஒரு வருடம் கழித்து நாகமுத்துவுக்கு தங்கமணி கிடைத்தாள். 5 வருடம் சென்று பெண் குழந்தையொன்றும் கந்தையர் தம்பதிக்குக் கிடைத்தது. இதற்கிடையில் இந்த 5 வருடத்துக்குள் மேலும் 4 பெண்பிள்ளைகளை நாகமுத்து வத வதவென்று பெற்றுத்தள்ளிவிட்டாள். சும்மா சொல்லப்படாது, நாகமுத்து புருஷன் மற்றவற்றில் வெட்டியாய் இருந்தாலும் இந்த 'விடயத்தில்' மகா விண்ணன்.

கனகராசாவும் தங்கமணியும் பிறந்ததும் இருவருக்கும்தான் எதிர்காலத்தில் மண முடிப்பதென்று இரண்டு குடும்பங்களும் தீர்மானித்து சந்தோஷத்தில் மிதந்தன. பெற்றவர்களின் உசுப்பேற்றுகின்ற பேச்சு வார்த்தைகளைக் கேட்டோ என்னவோ கனக ராசாவும் தங்கமணியும்கூட சிறு வயதிலிருந்தே மானசீகக் கணவன் மனைவி யாகக் கனவில் வாழத்தலைப்பட்டனர்.

'அத்தான் அத்தான்' என்று தங்கமணியும் 'மணி மணி' என்று கனகராசாவும் மிகுந்த வாரப்பாட்டுடன் முன்னுக்கும் பின்னுக்குமாக ஒருவர் பின் ஒருவர் திரிந்து விளையாடி வந்தனர். மண்ணிலே வீடு கட்டி சோறு கறி சமைத்து விளையாடுவது முதல் ஓடிப்பிடித்து ஒளிந்து மறைந்து விளையாடுவது வரை அத்தனை சிறுபிள்ளை விளையாட்டுக்களும் அவர்கள் வசமாகின.

விளையாடும் போது சிலவேளை அடிபிடி சண்டைகளும் வரும். ஆனால் சிறிது நேரத்தில் ராசியாகி விடுவார்கள். அக்கம் பக்கத்து வாண்டுகள் இவர்களுடன் விளையாடும் போது சிலவேளைகளில் இவர்களை 'மச்சான் மச்சாள்' என்று கலாய்ப்பார்கள். அப்போது இவர்கள் வெட்கத்தில் நெளிந்தாலும் அந்தக் கேலிகள்கூட அவர்களது எதிர்கால கணவன் மனைவி மானசீக உறவைத்தான் இன்னும் இறுக்கமாக்க உதவின.

நாகமுத்துவின் புருஷன் வேலை வெட்டி யென்று அசைவதேயில்லை. இருந்த இடத்திலேயே கந்தையரின் உழைப்பிலே மூக்கு முட்ட சாப்பிட்டுக்கொண்டு ஊர்வம்பு பேசிக்கொண்டு 'மை' பார்க்க, சுளுக்கிழுக்க, நாள் பார்க்க என்று அவரது வீட்டுக்கு வரும் சனத்தை முட்டாள்களாக்கிக் கொண்டு இருக்கின்ற இந்த லட்சணத்திலே நாகமுத்து ஆறாவது முறையாகக் கர்ப்பமுற்றாள். இது கந்தையரின் மனைவிக்கு மேலும் எரிச்சலைக் கொடுத்தது. பொதுவாக தன் குடும்பம் பெருக்கும் போதுதான் ஒருவருக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலாமையும் எரிச்சலும் வரும். ஆனால் இங்கே பக்கத்து வீட்டு குடும்பம் பெரிசாகிறது பாக்கியத்துக்கு கடுப்பேற்றுது என்றால் பக்கத்துவீட்டுக் குடும்பச்சுமையும் இவர்கள் தலையில் விடிவதுதான்!

இந்தக் குடும்பபாரம் கந்தையரின் தலையில் மேலும் ஒரு பேரிடியாய் இறங்கியது, நாகமுத்து தனது கடைசிப் பிள்ளைப்பேற்றின்போது ஒரு ஆண்மகவைத் தந்துவிட்டு பரலோகம் போய்ச் சேர்ந்தது.

மருத்துவ வசதிகள் மிகவும் அரிதாகவிருந்த அந்தச்சிறிய கிராமத்தில் பிரசவங்களெல்லாம் வீட்டிலேதான் நிகழும். ஏன் நாகமுத்துவின் முதல் 5 பிரசவங்கள் கூட வீட்டிலேதான் சுகப்பிரசவங்களாகத்தான் நிகழ்ந்தன. அப்படித் தான் இதுவும் நடக்குமென்று எல்லாரும் எதிர் பார்த்தார்கள். ஆனால்...... இதில் மிகப்பெரிய சோகம் என்னவென்றால் ஒவ்வொரு பிரசவத்தின் போதும் 'ஒரு ஆண்பிள்ளை பிறக்காதா ஆண்பிள்ளை பிறக்காதா' என்று ஏங்கின நாகமுத்துவுக்கு ஆண்பிள்ளை பிறந்தபோது அதைப்பார்த்துக் கொஞ்சக் கொடுத்து வைக்கவில்லை.

பிள்ளைகளைப் பராமரிக்கவென்று ஒரு உறவுக்காரப் பெண்ணை தனது ஊரிலிருந்து கூட்டிவந்தார் நாகமுத்துவின் கணவன் சின்ராசு. நாளடைவில் அவளைத் தனது இரண்டாம் தாரமுமாக்கிக் கொண்டார். அக்கம் பக்கத்துச் சனமும் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

'பாவம் மனுஷன். நண்டும் குஞ்சுமாய் 6 பிள்ளையளை வைச்சுக்கொண்டு தனிய என்ன செய்யேலும்? அந்தாளுக்கில்லையென்றாலும் அந்தக் குஞ்சு குருமனுக்கெண்டாலும் ஒரு தாய் வேணும்தானே' என்று சனம் தங்களுக்குள் குசுகுசுத்துக் கொண்டனர், அந்தாளின் நட்டா முட்டித்தனங்களை பெரிதாகப் புரிந்து கொள்ளாமல்.

இவையெல்லாம் ஒருபக்கம் நடந்து கொண்டி ருக்க கனகராசா தங்கமணி அன்பு, பாசம், வாரப்பாடு எல்லாம் இன்னொரு பக்கத்தால் பீடுநடை போட்டுக்கொண்டிருந்தன.

அந்தக்கிராமத்திலே ஒரு நல்ல பாடசாலை யிருந்தும் கல்வியின் மகத்துவம் அவ்வூர் மக்களுக்கு அதிகம்புரியாததால் 7ம், 8ம் வகுப்புக் களுக்கு மேல் அதிகமானோர் படிப்பதில்லை. மிஞ்சிமிஞ்சிப் போனாலும் சாதாரண தரத்தோடு சரி. ஆண்பிள்ளைகள் தகப்பனோடு தோட்டம் துரவு என்று தொழிலுக்குப் போய்விட பெண் பிள்ளைகள் வயதுக்கு வந்தவுடன் அவர்களது பள்ளிக்கூடவாழ்வு முடிவுக்கு வந்துவிட தாயுடன் சேர்ந்து வீட்டு வேலைகளில் மூழ்கி விடுவார்கள்.

இதுதான் நமது ஹீரோவுக்கும் ஹீரோயினுக்கும்கூட நடந்தது. கனகராசா 9ம் வகுப்போடு பள்ளிக்கு 'டாட்டா' காட்டிவிட அதே வருடம் 8ம் வகுப்பில் படித்துவந்த தங்கமணி 'பெரியமனிசி' என்ற விருதோடு வீட்டுக்குள் முடங்கினாள்.

ஒருவருக்குப் பின் ஒருவர் 'கொழுத்தாடு' பிடித்துக்கொண்டு சிறுபிள்ளை விளையாட்டு விளையாடித் திரிந்தவர்களுக்கு தங்கமணி வயதுக்கு வந்தவுடன் ஒருவரோடொருவர் பழகுவதிலும் கட்டுப்பாடுகள் வந்தன. இதை இருவராலும் திடீரென்று ஜீரணிக்க முடியாமல் இருந்தது. இந்தக் கட்டுப்பாடுகள் வந்த போது அவர்களுக்கு ஏதோ புரிவது போலவும் புரியாதது போலவும் இருந்தது.

'ஏன்தான் வயதுக்கு வந்து தொலைத்தேன்' என்றிருந்தது தங்கமணிக்கு. காலப்போக்கில் இருவரது உடல்களிலும் மாற்றங்கள் சித்து விளையாட்டுக் காட்ட ஆரம்பித்தன. இதுவரை அவர்களுக்குள் இருந்து வந்த அன்பு, பாசம், வாரப்பாடு என்பன இப்போது காதல் என்ற புதுப் பரிணாமம் எடுத்தன.

ஆனால் ஓடிப்பிடித்து விளையாடமுடியாது. தொட்டுத்தொட்டுப் பேசமுடியாது. தனிமை யிலிருந்து கதைக்க முடியாது. என்றாலும் அவனுக்கு அவள்தான், அவளுக்கு அவன்தான் என்ற சித்தாந்தம் இரண்டு குடும்பங்களுக் குமிடையில் இன்னும் ஓடிக்கொண்டுதானிருந்தது. இளசுகளுக்கோ கண்ணைக்கட்டி காட்டில் விட்டதுபோல் இருந்தது.

ஆம்! அந்தக் காடுதான் கடைசியில் அவர்களுக்குக் கைகொடுத்தது. அவர்களுடைய வளவுகளுக்கு முன்னால் ஒரு வெறும் காணி இருந்தது. அங்கே அணிஞ்சில் மரங்கள் பெரிதாகவும் சிறிதாகவும் புதராகவும் மண்டிக்கிடந்தன. இந்த மரங்கள் பெரிதாக வளர்ந்து காய்த்து பழம் சொரியும். பழங்கள் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். கொடிமுந்திரிப் பழம் போல மெல்லிய சிவந்த நிறத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணம் காட்டும். ருசியும் அலாதியாய் இனிக்கும்.

அணிஞ்சில் மரங்களின் இலைகள் ஓரளவு மெல்லிய நீளமுடையவை. நீண்ட தடிப்பான முட்கள் காணப்படும். சிறிய மரங்கள் பார்ப்பதற்கு பச்சைப்பசேலென்று அழகாக இருக்கும். இந்தக் காடுதான் அவர்கள் காதலை மேலும் மேலும் மெருகூட்டி வளர்த்தது.

வீட்டிலே மனம்விட்டுப் பேசமுடியாத ஏக்கங்களையெல்லாம் இந்தக்காடுதான் அவர்களுக்குத் தீர்த்துவைத்தது. 'அணிஞ்சில் பழம் புடுங்கப் போறன்' என்று கனகராசாவும் 'விறகு சுள்ளி முறிக்கப்போறன்' என்று தங்கமணியும் அணிஞ்சில் காட்டுக்குள் புகுந்தால் பிறகு அங்கே அவர்கள் ராஜ்ஜியம்தான். தங்கள் எதிர்காலக் கனவுகள், ஆதங்கங்கள், அபிலாஷைகள் எல்லாவற்றையும் கொட்டிக் கொட்டித் தீர்ப்பார்கள். காதலை, அன்பை, சிறுவயது விளையாட்டுக்களின் நினை வலைகளையெல்லாம் ஒன்றுவிடாமல் பகிர்ந்து கொள்வார்கள். இந்த அணிஞ்சில் காடு அவர்கள் வாழ்வில் ஒரு முக்கிய புள்ளியாக மாறியது. அதனால் இந்தக் காடு அவர்கள் பாசத்துக்குப் பாத்திரமானது.

"சரி...சரி அத்தான், வீட்டை போவம். வந்து கன நேரமாச்சு. ஆரும் கண்டாலும் பிரச்சினை" அவசரம் காட்டுவாள் தங்கமணி.

"கொஞ்சம் நில்லு மணி. ஒருத்தரும் வரமாட்டினம். இன்னும் கொஞ்சநேரம் நிண்டு கதைச்சிட்டுப் போவமே...ம்...ம்..நீர் இப்ப வரவர வடிவாய் வாறீர்..ம்.." தூண்டில் போட்டான் மச்சான்.

"நீங்கள் மட்டும் என்னவாம்....மீசையெல்லாம் அரும்பி அழகனாய் வாறியள்" ஐஸ் வைத்தாள் மச்சாள். உருகிப்போனான் கனகராசா.

"அத்தான் ஆரோ வாற சத்தம் கேட்குது... நீங்கள் உந்தப்பக்கத்தாலை போங்கோ நான் இதாலை போறன்" தங்கமணியின் எச்சரிக்கை மணியோடு ஒரு விதமாக வீட்டுக்குக் கிளம்புவார்கள்.

இப்படி அணிஞ்சில் காட்டிலே வளர்ந்த அவர்களது காதலுக்கு ஒருநாள் இடி விழுந்தது. எந்த இரண்டு குடும்பங்கள் இந்தக்காதலை உசுப்பேற்றி ஊட்டி வளர்த்தனவோ அதே குடும்பங்கள்தான் இப்ப 'நீ இனிமேல் அவளைப் பார்க்கவும் கூடாது. பேசவும் கூடாது', 'நீ இனிமேல் அவனை நினைக்கவும் கூடாது. கதைக்கவும் கூடாது. எல்லாம் முடிஞ்சு போச்சு' என்று ஆளாளுக்கு வெட்டொன்று துண்டிரெண்டாய் கூறத்தொடங்கின!

நடந்தது இதுதான்....

ஊர்ச்சனங்களுக்கு 'தண்ணி ஓதி'க் கொடுத்து அவர்களை முட்டாள்களாக்கின சின்ராசு தனது புது மனைவி ஓதின தலையணை மந்திரத்தால் முட்டாளாகிப்போன கதையிது.

உழைக்காமலிருக்கும் கணவன் மீது வரவேண்டிய கோபம், தங்களை விட வசதி வாய்ப்புகளோடு இருக்கும் கந்தையர் குடும்பத்தின் மேல் பொறாமையாக மாறியது புது மனைவிக்கு.

"என்னப்பா பார்த்துக் கொண்டிருக்கிறியள். உங்கடை மச்சான்ரை தில்லுமுல்லொண்டும் உங்களுக்கு விளங்கேல்லை. 5 ஏக்கர் தென்னம் தோட்டம் 10 ஏக்கர் வயல் காணி 6 ஏக்கர் மரக்கறித் தோட்டம்...இதெல்லாம் ஆற்றை சொத்து? பரம்பரைச் சொத்து. இதெல்லாத்தையும் தான் மட்டும் சுருட்டிக் கொண்டு ஆக இந்த வீட்டுக்காணியிலை மாத்திரம் அரைவாசியைத் தந்திட்டு உங்களை ஏமாத்திக்கொண்டிருக்குது மனுஷன். நீங்களெல்லாம் இளிச்சவாயளாய் இருங்கோ... கனக்க ஏன்...இருந்த கிணத்தைக்கூட பொதுவாய் விடாமல் தன்ரை பக்கத்துக்குள்ளை வரக் கூடிய மாதிரி காணியைப் பிரிச்சிருக்குது. இதெல்லாம் உங்கடை மண்டையிலை உறைக்கிறதேயில்லையா?" என்று நாளும் பொழுதும்உருவேற்றிக்கொண்டேயிருந்தாள் சின்ராசுக்கு அவனது இரண்டாம் தாரம்.

இந்த வீட்டுக்காணியை விட கந்தையரின் ஏனைய அத்தனை சொத்தும் அவர் தேடிய தேட்டம் என்பதும் அந்தக் கிணறுகூட அவரே வெட்டிக்கட்டி தங்கையும் பிள்ளைகளும்கூட அதைப் பாவிப்பதற்கு வசதியாக வழிவிட்டுக் கொடுத்தவர் என்பதும் சின்ராசுக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் மனைவியின் மந்திர உச்சாடனத்தினால் உருவேறி வீம்புக்காக கந்தையருடன் முரண்படத் தொடங்கினான்.

அன்று தனது தென்னந்தோட்டத்தில் காணியைத் துப்புரவாக்கிக்கொண்டு கந்தையர் நிற்க, மரமேறி ஒருத்தன் தென்னைகளிலிருந்து தேங்காய்களைப் பறித்துப் போட்டுக் கொண்டிருந்தான். தற்செயலாய் அந்தப்பக்கமாக வந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மச்சான் சின்ராசுவைக் கண்ட கந்தையர் "என்ன மச்சான் இந்தப்பக்கம்? கொஞ்சம் தேங்காய் எடுத்துக்கொண்டு போங்கோ... வீட்டுத்தேவைக்கு வேணும்தானே.." என்று அக்கறையோடு சொன்னார்.

இன்றைக்கு எப்படியும் சண்டை இழுத்தே தீருவது என்ற எண்ணத்தோடு கொஞ்சம் 'தண்ணி'யும் அருட்டிக்கொண்டு வந்த சின்ராசு உருவந்தவன்போல "எங்களுக்கென்ன பிச்சையா போடுறாய்? உன்ரை தங்கச்சிக்கு சேர வேண்டிய சொத்தெல்லாத்தையும் நீயே சுருட்டிக்கொண்டு நாடகமா ஆடுறாய்? இந்தத் தென்னம் தோட்டம்கூட அரைவாசி எங்களுக்குச் சேரவேண்டியது. மரியாதையாய் எல்லாச் சொத்திலையும் அரைவாசி எழுதித் தந்திடு. இல்லாட்டி நடக்கிறதே வேறை." என்று சன்னதம் ஆடினான்.

கந்தையருக்கு என்ன நடக்கிறதென்றே ஒன்றும் புரியவில்லை. குனிந்த தலை நிமிராமல் பவ்யமாய் 'மச்சான் மச்சான்' என்று பணிந்து நடக்கும் சின்ராசுவா இப்படிக் கதைக்கிறான் என்பதை நம்பமுடியவில்லை. என்றாலும் அவரது தன்மானத்தின் கருநிலையை கீழ்மைப் படுத்தியதை அவரால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை.

"டேய்! என்னடா கதைக்கிறாய் நாயே. உழைக்கப் போகாமல் திண்ணைக்கு மண்ணெடுத்துப்போட்டுவந்து ஞாயமா பேசுறாய்? என்ரை தங்கச்சி, புள்ளையள், புருசன் எண்டு அள்ளி அள்ளித் தந்த எனக்கு இதுவும் வேணும். இன்னமும் வேணும். என்ரை புத்தியை செருப்பாலை அடிக்கோணும்." என்றார் கந்தையர் கொதித்துப்போய்!

"டேய் கந்தையா! சவடால் விடாதை. இந்த சின்ராசுவைப் பற்றி உனக்குத் தெரியாது. என்னை ஏமாத்த நினைச்சால் அவ்வளவுதான். குத்திக் கிழிச்சுப்போட்டு றிமாண்ட்டுக்கும் போகத் தயங்கமாட்டன்" என்று கூறிக்கொண்டு உள்ளுக்குப்போன தண்ணியின் உதவியோடு ஒரு கத்தியையும் கையிலெடுத்துக்கொண்டு கந்தையரை நோக்கி முன்னேறினான் சின்ராசு.

இதைக்கண்ட கந்தையருக்கு கோபம் உச்சம்தலைக்கேற "வாடா.. வாடா..குத்தடா பார்ப்பம்...குத்துடா...குத்துடா" என்ற வண்ணம் அவரும் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு அவனை நோக்கிப் போனார். இதைக்கண்ட தேங்காய் பறிக்க வந்த மனுஷன் 'இதை இப்படியே விட்டால் பெரிய களேபரமாகிவிடும்' என நினைத்து ஓடிப்போய் இருவரையும் விலக்கி சின்ராசுவை ஒருமாதிரி அனுப்பிவைத்தான்.

ஆத்திரம் நேத்திரத்தில் பளிச்சிட ஓட்டி வந்த சைக்கிளை அப்படியே நிலத்தில் போட்டுவிட்டு படலையை அடித்துச் சாத்திக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்து ருத்ர தாண்டவம் ஆடாத குறையாக நிற்கும் கந்தையரைப் பார்த்ததும் வீட்டிலுள்ள அனைவர்க்கும் தூக்கிவாரிப் போட்டது.

"இனிமேல் ஒருத்தரும் சின்ராசு வீட்டுப்பக்கம் தலைவைச்சுக்கூடப் படுக்கக்கூடாது. நன்றி கெட்ட நாய். கத்தியெடுத்து என்னை குத்த வாறான். அவனுக்குச் சேரவேண்டிய சொத்தெல்லாத்தையும் நான் சுருட்டிப்போட்டனாம்" என்ற கந்தையரின் கத்தலைக் கேட்டதும் எல்லோருக்கும் பிரச்சினையின் விஸ்வரூபம் புரிந்தது.

"இண்டையோடை எல்லாம் முடிஞ்சுபோச்சு. என்ரை தங்கச்சி செத்ததோடை உறவும் செத்துப்போச்சு. அவன்ரை வீட்டோடை இனி சாவுமில்லை சம்பந்தமுமில்லை. ஆராவது இன்னும் கனகு - மணி கலியாணத்தைப் பற்றி நினைச்சுக் கொண்டிருந்தால் அந்த எண்ணத்தையும் இப்பவே தூக்கியெறிஞ்சு போடுங்கோ... அப்பிடி ஏதாவது நடக்குமெண்டால் அது என்ரை சவத்துக்கு மேலாலைதான் நடக்கும்."

கனகராசாவின் தலையில் வானமே இடிந்து விழுந்தது போல் உணர்ந்தான். கண்களில் கண்ணீர் கரைகட்டி நின்றது. தாயும் தங்கையும் அவனை அனுதாபத்தோடு பார்த்தார்கள். அவனைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

இதையெல்லாம் சற்றும் கண்டுகொள்ளாத கந்தையர் படபடவென்று ஓடிப்போய் இரண்டு வளவுகளுக்கும் இடையிலிருந்த படலையை பிடுங்கியெறிந்தார். முழு வேலி போட்டு மறைத்தார்.

"உங்களுக்கினி தண்ணி காட்டுறன் பார்" என்று அவர்களுக்கு தண்ணீர் அள்ளவென்று கிணத்தடியில் விட்டிருந்த வழியையும் வேலி போட்டுத் தடுத்தார். இப்போது இரண்டு வீட்டுக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென்று ஆயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கொஞ்சம் ஓவராய் ஆடிட்டனோ?' என்ற எண்ணம் தலைக்கேற 'தண்ணி வெறி' தலையிறங்க 'ஓசிச் சாப்பாட்டுக்கும் வேட்டு வைச்சிட்டனே' என்று தலைகுனிந்து இருந்தான் சின்ராசு நடப்பதையெல்லாம் பார்த்துக்கொண்டு.

கனகு கிணற்றடிக்குப் போகும் போது மணியைக் கண்டான். அவர்கள் வீட்டு முற்றத்திலே அவள் நின்ற கோலம் இவன் நெஞ்சைப் பிராண்டியது. இனி அணிஞ்சில் காட்டில்கூட இவர்களால் அடைக்கலம் தேட முடியுமோ என்னவோ!

காலம் உருண்டது. ரணம் ஆறும் என்று பார்த்திருந்தார்கள். அயலவர்கள் தூது போனார்கள். ம்ஹூம்.... எந்தப் பருப்புமே கந்தையாண்ணரில் வேகவில்லை.

மீண்டும் அணிஞ்சில் காடு கனகு – மணி ஜோடியின் மந்திராலோசனைக்கூடமானது. யாருக்கும் தெரியாமல் வீட்டைவிட்டு ஓடிப் போவது என்ற திட்டம் உருவானது.

தீட்டிய திட்டம் நிறைவேறி இப்ப இந்தக் குடிசையிலே கனகு – மணி புதுமணத் தம்பதியராய் எதிர்காலத்தை வெற்றி கொள்ளும் சவாலோடு இருக்கிறார்கள்.

காலம் தன் கடமையைச் செய்தது.......

இவர்கள் ஓடிப்போனதால் அங்கே இரண்டு குடும்பமும் 'ஆளை ஆள் வெட்டுறன் கொத்துறன்' என்று அமர்க்களப் பட்டு அடங்கிப்போய் கிடக்கின்றன. ஆனால் அறுந்த உறவு மீண்டும் இணையுமா என்ற ஏக்கம் மனதைப் பிசைந்தெடுத்தாலும் வாழ்க்கை அவர்கள் முன் வைத்த சவாலை எதிர்கொண்டு வெற்றி பெற்று விடுகிறார்கள் இந்த இளம் தம்பதி!

'இஞ்ச பாருங்கோவன் அத்தான் தம்பி உடும்பு பிடிக்கிறான்...ஐயோ அவன்ரை பொக்கை வாய்ச் சிரிப்பு...அச்சச்சோ..சிரிக்கேக்கை அப்பிடியே மாமாவைத்தன் உரிச்சு வைச்சிருக்கிறான். அச்சு அசலாய் உங்கடை ஐயாதான்' தங்கமணியின் ஆனந்தத்தில் கனகராசாவும் கலந்து கொள்கிறான். கூடவே அவன் மனதில் ஒரு ஏக்கமும் தொற்றிக்கொண்டது.

'ஐயா அம்மா தங்கை மற்றும் தங்கமணியின் தகப்பன் சகோதரங்கள் இப்ப எப்படி இருக்கிறார்களோ. அவர்களைப் பார்த்துத்தான் இப்ப எவ்வளவு காலமாச்சு. 3 வருடங்களுக்கும் மேலாச்சே' இரத்த உறவுகளின் பிரிவு தரும் ஏக்கம் கொடுமைதான்.

இந்த 3 வருட கால இடைவெளியில் கனகராசாவின் பெயர் அந்த ஊர் சுற்று வட்டாரத்தில் பிரபலமாகிவிட்டது. அந்தளவு தூரம் அவன் பிரயாசைப் பேர்வழி. கந்தையரின் உண்மையான உழைப்பின் வாரிசல்லவா! கந்தையர் சின்னவயதில் எப்படிக் கடுமையாக உழைத்தாரோ அதைவிடப் பன்மடங்கு இவன் பாடுபட்டான். தோட்டம் துரவு வீடு காணியென்றும் உழவு இயந்திரம் கார் என்றும் பல அடிப்படை வசதிகளோடு அருமையான அமைதியான குடும்பமாக அவன் இல்லறம் மிளிர்ந்தது.

என்றாலும் உறவுகளைப் பிரிந்து வாழும் துயரம் இருவரையும் தினம் வாட்டி வதைத்துக் கொண்டுதான் இருந்தது. இவ்வளவு காலம் சென்றும்கூட உறவுகள் ஒருவர்தானும் தங்களை வந்து எட்டிக்கூடப் பார்க்கவில்லையே என்ற ஏக்கம் வேறு அவர்கள் உள்ளத்தில் தேங்கிக் கிடந்தது.

"அத்தான்....நாங்கள் ஒருக்கால் ஊர்ப்பக்கம் போவமா? பேரனைக் கண்டாலாவது மாமாவின் கோபம் தீராதா பார்க்கலாம்..." என்று இழுத்தாள் தங்கமணி.

அதே எண்ணம்தான் கனகுவின் மனதிலும் இதுவரை ஓடிக்கொண்டிருந்தாலும் அதை வெளிக்காட்டி மனைவியின் மனதைச் சங்கடப் படுத்த வேண்டாமே என்றிருந்தவனுக்கு இப்போது அவளே கேட்டதும் ஊருக்குப்போகும் அவா அவனிடமும் மேலோங்கியது.

"போகலாம்தான் மணி...ஆனால் ஐயா ஏற்றுக்கொள்ளுவாரோ என்னவோ...இல்லை.. அடங்கிக் கிடந்த கோபம் இன்னும் முளாசி எரியுமோ தெரியேல்லையே"

"இல்லை அத்தான், எனக்குத் தெரியும் மாமாவின்ரை குணம். பாசத்துக்கு முன்னாலை அவர் ஒரு குழந்தை. மானத்தைக் காயப் படுத்தினால்தான் எரிமலையாவார். நீங்கள் பாருங்கோவன் பேரனைக் கண்டதும் உருகி விடுவார்"

"சரி. அடுத்தமாதம் போவம்" கணவனின் சம்மதம் தங்கமணியின் மனதில் மகிழ்ச்சியை அள்ளிக்கொட்டியது. கனகராசாவின் மனதிலும் அதே மகிழ்ச்சித்தாண்டவம்தான் என்றாலும் அடக்கியே வாசித்தான். காரணம், சிறுவயதிலிருந்தே தகப்பனின் வைராக்கியத்தை உணர்ந்து வளர்ந்தவன். அதனால் பெரிசாய் எதிர்பார்த்து ஏமாற மனதில் திராணியில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கமணியின் சந்தோஷம் மகனோடு கொஞ்சும் செல்லமாய் ஒலித்தது.

ஒரு மாதம் ஒரு யுகமாய் கழிந்தது அவர்களுக்கு. அவர்களது வாகனத்திலேயே அந்த அழகிய இனிய குடும்பத்தின் பயணம் ஆரம்பமானது. இங்கிருந்து அவர்களது ஊருக்கு கிட்டத்தட்ட 6 மணித்தியாலப் பிரயாணம். இருவர் மனதிலும் எத்தனையோ மலரும் நினைவுகள். சின்னப்பிள்ளை விளையாட்டுகள், காதல் மலர்ந்த கதை, கோபதாபங்கள், குடும்பங்களுக்குள் மூண்ட சண்டை சச்சரவுகள் எல்லாவற்றிற்கும் மேலாக அவர்கள் காதலைக் கட்டிக்காத்த அந்த அணிஞ்சில் காடு என்று ஓராயிரம் படங்கள் மனத்திரையில் விரிந்தன!

இந்த 3 வருடத்துக்குள் ஊர் எவ்வளவு தூரம் மாறிவிட்டது. குண்டும் குழியுமாய்க் கிடந்த வீதிகளெல்லாம் கார்ப்பட் பூசிய நெடுஞ்சாலைகளாய் நீண்டு செல்கின்றன. அகலித்த சாலைகளால் அவர்கள் பிறந்து வாழ்ந்து பழகிய அந்த ஊரே அவர் களுக்கு அந்நியமாகப் பட்டது. நெடுஞ்சாலை யோரத்தில்தான் வீடென்றாலும் அதைக் கண்டு பிடிப்பதே கடினமாக இருந்தது. காலம் எப்படியெல்லாம் எல்லாவற்றையும் புரட்டிப்போட்டு வேடிக்கை காட்டுகிறது.

பிரதான நெடுஞ்சாலையிலிருந்து ஒரு சிறிய ஒழுங்கை. அந்த ஒழுங்கைப் பக்கம்தான் வீட்டுக் கேற். கேற்றுக்கு முன்னால் போய் கார் நிற்கிறது. காரிலிருந்து இறங்கிய கனகுவும் மணியும் பிள்ளையை ஏந்தியபடி கேற்றின் மறுபக்கம் பார்க்கிறார்கள்......ஓ!...அந்த அணிஞ்சில் காடு – அவர்களது காதல் சாம்ராஜ்யம் அங்கே இல்லை. புதிய கல்வீடொன்று அந்த இடத்தில் கம்பீரமாய்...! இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்கின்றனர். தேக்கி வைத்த ஏக்கமெல்லாம் கலந்த மௌனப்புன்னகை இருவரையும் தொற்றிக்கொள்ளுகிறது. அது சொல்லும் ஓராயிரம் கதைகள் அவர்களுக்கு மட்டும்தான் தெரியும்!!

படலையை மெதுவாகத் திறந்துகொண்டு இருவரும் பிள்ளையுடன் வளவுக்குள் பிரவேசிக்கிறார்கள். வீட்டு விறாந்தையில் கந்தையர், மனைவி, மகள் மூவரும் இவர்களையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டி ருக்கிறார்கள். பாக்கியத்துக்கும் மகளுக்கும் ஓடோடிப்போய் அவர்களைக் கட்டியணைத்து சொந்தம் கொண்டாடி ஆனந்தக்கண்ணீர் சொரிந்திட மனமும் கால்களும் துடித்தன. ஆனால் நந்திபோல் நிற்கும் கந்தையரைத் தாண்டி ஓரடிதானும் எடுத்து வைக்கும் துணிவு அவர்களுக்கு இல்லை.

கந்தையருக்கு முன்னால் கனகு தம்பதி பிள்ளையோடு தலைகுனிந்து என்ன நடக்குமோ ஏது நடக்குமோ என்ற பயப்பிராந்தியோடு நிற்கிறார்கள். ஒரு மௌனப் பெருவெளி.... கனகராசா தலைநிமிர்ந்து நேருக்கு நேராகத் தந்தையைப் பார்க்கிறான்!.....ஓ!....இதென்ன.... கந்தையரின் கண்களில் கண்ணீர்க்குளம்... ஓடிப்போய் பேரனை வாஞ்சையோடு அள்ளி யெடுத்தணைத்து முத்தமழை பொழிகிறார்! இப்போதுதான் எல்லோர் நெஞ்சிலும் நிம்மதிப் பெருமூச்சுக் கிளம்ப முகங்கள் மலர்கின்றன.

'உறவுகள் தொடர்கதை...உணர்வுகள் சிறுகதை...' வானலையில் தவழ்ந்து வந்த இந்தப் பாடல் அவர்களை மோதிச் செல்கிறது.

கந்தையர் தனது இடுப்பிலே சொருகி யிருந்த சாவிக் கொத்தொன்றையும் பேரனின் கையிலே திணித்து, "இந்தாடா என்ரை குலக் கொழுந்தே...உங்களுக்கென்றே உன்ரை தாத்தா கட்டின புத்தம் புது வீடு" என்று சொல்லி அணிஞ்சில் காடு இருந்த இடத்தில் எழும்பி நிற்கும் அந்தப் புது வீட்டைக் காட்டுகிறார். அனைவரும் கண்கள் விரிய அதிசயித்து நிற்கிறார்கள்!

கனகராசா – தங்கமணியின் ஆரம்பக் காதலை வளர்த்த அணிஞ்சில் காடு இன்று அணிபுனைந்த வீடாய் அவர்களது கல்யாணக் காதலை வளர்க்கப் போகிறது!

OOO

---

## பேசும் நாணயங்கள் போட்டி

போட்டியின் விபரம் இச்சஞ்சிகையின் பின் அட்டையில் அறிவிக்கப்பட்டுள்ளது.
முடிவுத் திகதி 20.03.2024க்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி

"ஞானம்" - 3B, 46ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனையைத்தூண்டும் சிறுவர் பாடல்கள்

சிறுவர்களின் உலகமே தனி உலகம். கவலை இல்லாத உலகம்! அவர்களுக்கான பாடல்கள் மிகவும் சுவையானவை., சிந்தனையைத் தூண்டு பவை. அதிலும் சிறுவர்களே தமக்குத் தாமே பாடுவதாக அமைந்த பாடல்கள் மிகவும் கவர்ச்சியானவை. கருத்து மிக்கவை. அவற்றுள் சிலவற்றைப் பார்ப்பதே இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

**"அம்மா நான் விளையாடப்போறேன்**
**அன்புடன் பட்சணம் தந்தனுப்பென்னை**
**சும்மாநான் உட்கார மாட்டேன்**
**தோழர் அழைக்கின்ற நாழிகையாச்சு!**

தாயார் கேட்கிறாள்

**"அங்கே போய் என்ன செய்வீர்கள்?"**
**"பூப்பறித்தாடுவோம் கொஞ்சம்**
**தோரணம் கட்டி பூஜைகள் செய்வோம்!**
**வேப்ப மரத்தடி மண்ணில் –சிறு**
**வீடு கட்டி வேடிக்கை செய்வோம்!"**

தொடர்ந்து செல்கிறது அந்தச் சிறுவர்பாடல்...


2) இரசிகமணி கனக செந்திநாதன் சில சிறுவர்பாடல்களைப் படைத்துள்ளார். அவற்றுள் குறிப்பிடத்தக்க ஒன்று வருமாறு:

**'வன்னிக்காட்டில் முன்னோர் நாள்**
**வழியும் தவறிச் சென்று விட்டேன்.!**
**வெள்ளை முயலின் குட்டிகளும்**
**விளையாடலாம் என்றனவே!**
**புள்ளி மானின் கன்றுகளும்**
**துள்ளித் துள்ளி ஓடினவே!**
**யானைக்குட்டி முதுகின்மேல்**
**ஏறிக்குரங்கு ஆடியதே**
**கன்னங்கரிய கரடியனார்**
**கண்ணைத் தோண்ட வந்தாரே**
**அம்மா என்று அலறிவிட்டேன்**
**சும்மா படு கனவு என்றார்!"**

3) சிறுவர்கள் பாடசாலையை மறந்து விளையாடித் திரிந்தாலும் அவர்களைத் திருத்திய ஆசிரியர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் பாடசாலையையும் சிறுவர்களையும மறவாத பண்பாளர்கள். கள்ளமிடும் சிறுவர்களை பள்ளிக் கூடம் இழுத்து வந்து பிரம்பால் அடித்துச் சீர்திருத்துவது அந்தக்கால வழக்கம். அவ்வாறு வாழ்ந்த நெட்டை உபாத்தியாயர் ஒருவரைப் பின்வரும் பாடலில் படம்பிடித்துக் காட்டுகிறார 'யாழ்ப்பாணன்" என்ற புனைபெயர் கொண்ட கவிஞர் வே. சிவக்கொழுந்து

**"குடுமி குலைந்து விழக்**
**குறுவேட்டி அவிழ்ந்துவிட**
**நெடுமி உபாத்தியவன்**
**நெடுந்தூரம் தொடர்ந்து வர**
**நடுவழியில் பிணக்குற்று**
**நற்பிரப்பம் பழம் வாங்கி**
**வடு திருந்தி வாழ்ந்த**
**வாழ்வு மினி வாராதோ?"**

அவிழ்ந்த குடுமி உடுத்திருந்த சிறிய வேட்டி போன திசை தெரியாது அவிழ்ந்த நிலை, பள்ளிக்குக் கள்ள மிடும் சிறுவன் திரும்பத் திரும்ப ஓடும் காட்சி. அவனை மடக்க நெட்டை உவாத்தியாயர் பிரம்புடன் பின்னால் நெடுந்தூ ரம் தொடரும் காட்சி, நடுவழியில் சிறுவர் சண்டை தொடர்ந்து வந்த நெடுமி உபாத்தியாயர் பிரம்பால் அடிக்கும் காட்சி. ஆசிரியர் தண்டனையால் திருந்திய சிறுவன் வாழ்வில் கல்விகற்று முன்னேறும்



**இணுவையூர் கலாபூஷணம் ஆ. இரகுபதிபாலஸ்ரீதரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி என்பவற்றையெல்லாம் 'யாழ்ப்பாணன்' என்ற வே. சிவக்கொழுந்து எவ்வளவு அழகாகச் சித்தரிக்கிறார்.!

கூ) காலைத்துாக்கி கண்ணில் ஒற்றிக் கட்டிக் கொஞ்சும் அம்மா..." என்ற பிரபலமான குழந்தைப் பாடலைப் படைத்தவர் கவிஞர் வேந்தனார் (5-11-1918-18-9-1966) மனிதாபிமானத்தைப் பிரதிபலிக்கும் பின்வரும் சிறுவர் பாடலும் மகத்தான தொன்றாகும்.

**"காலில்லாத நொண்டி மிகவும்**
**களைத்துப் போனான் அம்மா**
**கோலை ஊன்றி நடந்து முதுகு**
**கூனிப்போனான் அம்மா**
**பாவம் அந்த நொண்டி எங்கள்**
**பள்ளிக் கூடத் தெருவால்**
**போகும்பொது கண்டேன்**
**புண்கள் காலில் அம்மா**
**இனிப்பு கடலை வாங்க காசு**
**இனிமேல் கேட்க மாட்டேன்**
**தனித்த நொண்டி தவிப்பைப்**
**போக்க**
**தாரும் காசு அம்மா!**

இந்தப்பாடல் குழந்தைப் பாடல் ஆதலால் கருத்தும் கடுமையின்றி அமைந்துள்ளது.. சொற்கள் எளிய நடையில் ஓசைபயந்து நிற்கின்றன. இப்பாடல் விளையும் பயிரான குழந்தைகளின் பிஞ்சு உள்ளத்தில் மனிதாபிமானத்தை உண்டாக்கும் என்பதில் எள்ளளவிலேனும் சந்தேகமில்லை!

○○○

# திருவிழா

நள்ளிரவு
எங்கும் மழையின் திருவிழா
மழையின் நடனத்தை
அயலில் வாழும் இளம்பெண்
ஆவலோடு கண்ணிமைக்காது பார்க்கிறாள்
அவள் நிழல் யன்னல்
கண்ணாடியில் நடுங்குகிறது
மூச்சு வாங்குகையில்
மழையின் இசையோடு கலந்து
அவள் மார்பு ஏறி இறங்குகிறது

மின் கம்பிகளில் இருக்கும் காகங்களின்
இறகுகள் நனைகின்றன
ஓ, இவ்வரவைத் துடைத்தவர் யார்?

இவ்வடை மழையாருடைய இளமையைக்
கிளர்ந்தெழச் செய்கிறது?
இரவு முழுவதும் மழை, நடனமிடுகயைில்
ஏன் கனவுகளின் மழையின் கீதங்களைக் கேட்கிறேன்
நிலாமுற்றத்தின் மூலையில் கனவுச் சிலையின் நடனம்
மழை பொழியும் நீண்ட இரவு இது
மழை பொழியும் இவ்விரவில்
இளமை எழுச்சி கொள்ளும் வேளை இது!
மழை கொட்டும் இரவில் இடைவிடாது
நடனமாடியபின்
ஷங்கர் பஜாரின் பழைய கட்டடங்கள்
குளிரில் நடுங்குகின்றன
சிலவேளைகளில் கறுப்புக் குடையொன்று
பின்னால் இருந்து எட்டிப் பார்க்கிறது
விடிகாலை மணப்பெண் வீடு திரும்பும் வேளை
மழைத்துளிகள் கூழாங்கற்களை துயிலெழுப்புகின்றன
ஒரு நூற்றாண்டுப் பழைய கட்டடம்
தன் இளமையைப் பெற்றுப் புத்துயிர்க்கிறது
வீரர்களை ஆராதிக்கும் வங்கதேசத்தில்
மழை குழந்தைப் பாடல்கள் போல வருகிறது
வறண்ட நிலத்தில் இரவு முழுவதும்
மழை பெருமித ஓவியம் தீட்டுகிறது
நள்ளிரவில் மின்னல் நித்திரை விட்டுக் கண்விழிக்கிறது
கார்காலத்துக் கதம் பூக்கள்
கொம்பர்களை அணி செய்கின்றன
இது உறக்கத்துக்கான இரவு
இளமை சுருண்டு படுக்கிறது
இது மழைக்காலம்
அடைமழையில் நனைந்த கனவுகள்
மழை விழாவுக்குக் கட்டியம் கூறுகின்றன.


**வங்க மூலம் : பிமல் குஹா**
**ஆங்கில மொழிபெயர்ப்பு : சித்தீக் மஹ்முதூர் ரஹ்மான்**

**தமிழாக்கம் : சோ.ப**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்



பேராசிரியர் துரை மனோகரன்

## முறையற்ற கலைவிழா முயற்சி

இலங்கையில் பல காலமாக தென்னிந்தியச் சினிமாக்கலைஞர்களின் பல்வேறு நிகழ்ச்சிகள் அவ்வப்போது நடந்துவந்துள்ளன. யாழ்ப் பாணத்தில் கூட 2016 இல் பிரபல பின்னணிப் பாடகர் அமரர் எஸ். பி. பாலசுப்பிரமணியம் குழுவினரின் இசை நிகழ்ச்சி சிறப்பாக நடை பெற்றது. அண்மையில் பிரபல பாடகர் சந்தோஷ் நாராயணின் இசை நிகழ்ச்சியும் சிறப்பாக நடந்தது. ஆனால், கடந்த பெப்ரவரி மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பிரபல பாடகர் ஹரிகரன் குழுவினரின் கலை நிகழ்ச்சியில் என்றும் இல்லாதவாறு பல்வேறு குழறுபடிகள் ஏற்பட்டன.

எஸ்.பி. பாலசுப்பிரமணியம் குழுவினரின் இசை நிகழ்ச்சி, பார்வையாளர்களை மகிழ் விக்கும் முறையில் இடம்பெற்றது. மக்களைக் கௌரவிக்கும் முறையில் பண்பாக இடம் பெற்றது. அதேபோலச் சந்தோஷ் நாராயண் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் பார்வை யாளர்களைச் சந்தோஷப்படுத்தும் முறையில் நிறைவாக நடைபெற்றது. அவர் தமது நிகழ்ச்சியில் இலங்கைக் கலைஞர்களையும் இணைத்துக்கொண்டு செயல்பட்டார்.

கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியைப் பொறுத்தவரையில், தொடக்கத்தில் இருந்தே குழறுபடிகள் இடம்பெறத் தொடங்கிவிட்டன. இதற்கு முழு முதல் காரணகர்த்தராய் விளங்கியவர், அந்நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளரான யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட இந்திரன் என்னும் இந்திரகுமாரே (நடிகை ரம்பாவின் கணவர்) ஆவார். அவர் விமானநிலையத்தில் வந்திறங்கியபோது தெரிவித்த கருத்து, எல்லோர் மனங்களையும் புண்படச் செய்தது. தென்னிந்தியச் சினிமாக் கலைஞர்கள் யாழ்ப்பாணம் வர விரும்பவில்லை எனவும், தாமே அவர்களைச் சம்மதிக்கவைத்து அழைத்துவந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டி ருந்தும், அவரது அத்தகைய பேச்சு திமிர் நிறைந்ததாகவும், தாம் சினிமாக் கலைஞர்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கு மிக்கவர் போலக் காட்டிக்கொள்வதாகவும் அமைந்தது. நிச்சயமாக அவரது அத்தகைய பொருத்தமற்ற பேச்சு, மிகக் கடுமையாகக் கண்டிக்கத்தக்கதாகும்.

நிகழ்ச்சிக்காகப் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கிய நடிகை தமன்னா நடந்து கொண்ட விதமும், அவரை அவ்வாறு செயல்பட வைத்த ஏற்பாட்டாளரின் போக்கும் ஊடகவிய லாளர்களையும், ரசிகர்களையும் முகம் சுழிக்க வைத்தது. ஏதோ காணக்கிடைக்காத திரவியம் ஒன்றை மறைத்துக்கொண்டு போவது போல, அவருக்குப் போர்வை ஒன்றைப் போர்த்தி, அப்படியே கார் ஒன்றுக்குள் ஏற்றி அவசர அவசரமாக அனுப்பிவிட்டார்கள். உண்மையில் தமன்னா ஊடகவியலாளர்களுக்கும், ரசிகர்க ளுக்கும் கை அசைத்துச் சென்றிருந்தால், அவரது மதிப்பு உயர்ந்திருக்கும்.

நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் இந்திரகுமார் முதலில் அது இலவசமாகவே நடத்தப்படும் என்று அறிவித்திருந்தார். பின்னர், பணம் பண்ணும் நோக்கில் 25000/=, 7000/=, 3000/= என அனுமதிச்சீட்டுகள் பற்றி அறிவித்தி ருந்தார். கலைஞர்களுடன் சேர்ந்து படம் எடுப்பதாயின், 30000/= என்றும் அறிவித் திருந்தார். அவற்றுக்குப் பின்னால், இலவசப் பார்வையாளர்களுக்கும் அனுமதி வழங்கப் பட்டிருந்தது. ஆனால், இலவசமாகத் தூரத்தில் இருந்து பார்ப்பவர்களுக்கு எத்தகைய வசதிகளும் செய்துகொடுக்கப்படவில்லை. அகலத்திரைகள் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்தால், நிகழ்ச்சி களை எங்கிருந்தும் பார்க்கக்கூடியதாக இருந்திருக்கும். நிகழ்ச்சிகளை எங்கிருந்தும் தெளிவாகக் கேட்கக்கூடிய ஒலியமைப்பு வசதி செய்துகொடுக்கப்படவில்லை. அதனால், விரக்தியடைந்த பின்வரிசைப் பார்வையாளர்கள், ஆர்வக்கோளாறு காரணமாகத் தடுப்புகளையும் உடைத்துக்கொண்டு முன்னேறிச் சென்று குழப்பங்களை விளைவித்தனர். அவர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய அளவு பாதுகாப்பு ஏற்பாடு களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல முறையில் நடந்திருக்கக்கூடிய இக்கலை நிகழ்ச்சியானது, இந்திரகுமாரினதும், அவரது சகாக்களதும் முட்டாள்தனமான முயற்சிகளால், பரிதாபகரமான முறையில் முடிவடைந்தது. இந்நிகழ்ச்சியின் பின்னர், கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்த சினிமா நடன இயக்குநர் கலா மாஸ்டருக்குக் கண்ணீர் அஞ்சலி செலுத்திச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தமை கவலைக்குரியதும், கண்டிக்கத்தக்கதுமாகும். குறைகள் இருந்தால் கண்டிக்கலாம். அதில் தவறு இல்லை. ஆனால், வாழும் ஒருவருக்குக் கண்ணீர் அஞ்சலிச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டமை, பண்பாட்டை மீறிய செயலாகும்.

### பேராதனையின் நாடக நாள்

ஆண்டுதோறும் பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையினால் நடத்தப்படும் நாடக நாள் நிகழ்ச்சி 2023ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்றது. தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தமிழ்த்துறை விரிவுரையாளர்களும், பிறதுறை விரிவுரையாளர்களும், மாணவர்களும் கலந்துகொண்டனர். வரவேற்புரையை மாணவி கஜனி நிகழ்த்தினார். நாடக விமர்சன உரையை நான் நிகழ்த்தினேன். இந்நாடக நாள் நிகழ்வில் கானல் நீர், உயிரிகள் தேசம் ஆகிய இரு நாடகங்கள் தமிழ்த்துறை இரண்டாம் வருட மாணவர்களால் மேடையேற்றப் பட்டன.

கானல் நீர் நாடகத்தை அலைக்சனா எழுதியிருந்தார். அவரும், ஜெயானியும் இணைந்து இந்நாடகத்தை நெறியாள்கை செய்திருந்தனர். ஒரு பெண்ணின் வாழ்க்கையில் ஏற்படும் மகிழ்ச்சி, சோதனைகள், விரக்தி முதலானவைகளையும், பின்னர் அவள் அவற்றையெல்லாம் கடந்து, சாதனையாளியாக மாறுவதையும் நாடகம் திறம்பட எடுத்துக் காட்டியது. இந்நாடகத்தை எழுதிய அலைக்சனா பாராட்டுக்குரியவர். அவரதும், ஜெயானியதும் நெறியாள்கையும் சிறப்பாக அமைந்திருந்தன.

இந்நாடகத்தில் கதாநாயகி பாத்திரத்தை ஏற்றிருந்த மதுரா, தாம் ஓர் அற்புதமான, சிறந்த நடிகை என்பதைக் காட்சிகள் தோறும் நிரூபித்துக்கொண்டிருந்தார். காதலில் ஏற்படும் மகிழ்ச்சி, காதல் தோல்வியால் ஏற்படும் விரக்தி, வாழ்க்கைச் சோதனைகளைத் துரத்திப் புதுமைப்பெண்ணாக, சாதிக்கத் துடிக்கும் இளம்பெண்ணாக மீண்டெழும் சிறப்பு ஆகிய அனைத்தையும் தமது நடிப்புத்திறனால் மேடையில் காட்சிப்படுத்தினார். மதுரா பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சிறந்த நடிகைகளுள் ஒருவர் மாத்திரமன்றி, இலங்கையின் சிறந்த நடிகைகளுள் ஒருவர் என்று நான் சொல்வேன். அவரது நடிப்புத் திறமையைப் பாராட்ட, தமிழில் என்னென்ன நல்ல சொற்கள் உள்ளனவோ, அவற்றை எல்லாம் பயன்படுத்தலாம். இந்நாடகத்தில் அப்பா பாத்திரம் ஏற்ற அலைக்சனா, காதலனாக நடித்த ஜெயானி, காதலனின் நண்பர்களாக நடித்த துதேசிகா, விவேதிகா, சஜீதா ஆகியோரும் தத்தம் பாத்திரங்களைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

உயிரிகள் தேசம் என்ற நாடகம் வித்தியா சமான ஒரு குறியீட்டு நாடகம். இந்நாடகத்தைச் சிறப்பாக எழுதி இயக்கியவர், கஜனி. நீண்ட கால வரலாற்றைக் கொண்ட பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்தின் முதலாவது பெண் தலைவராகத் தற்போது பதவி ஏற்றிருக் கிறார், கஜனி. ஞானத்திலும் அவர் கட்டுரை எழுதியிருக்கிறார். இலங்கையின் அரசியல், சமூக விமர்சனமாக இந்நாடகம் அமைந் திருந்தது. இலங்கையின் இரு முக்கிய அரசியல் வாதிகளும் பெயர் மாற்றத்துடன் பாத்திரங் களாக இடம்பெற்றிருந்தனர். ஓர் அரசியல் வாதியாகவும், முற்போக்கு எண்ணம் கொண்ட பெண்ணாகவும் கஜனி பாத்திரங்கள் ஏற்றிருந்தார். அம்மாவாக ரம்மியாவும், இன்னோர் அரசியல்வாதியாகவும், கடைக்கார அக்காவாகவும் லிதுர்ஷனாவும் பாத்திரங்கள் ஏற்றிருந்தனர். குடிகாரன், மகன் ஆகிய பாத்திரங்களில் சஜீவனியும், மலையகக் குடும்பத் தலைவன், வைத்தியர் பாத்திரங்கலில் மோனிஷாவும் நடித்திருந்தனர். நண்பியாக பாத்திமா ஆதிலாவும், மலையகக் குடும்பத் தலைவியாகப் பிரியாவும் நடித்தனர். நாடகத்தில் பங்குபற்றிய அனைவரும் தத்தம் பங்களிப்பைச் சிறப்பாக வெளிப்படுத்தினர்.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மாணவர்களின் இத்தகைய நாடக முயற்சிகள் விதந்து பாராட்டத்தக்கவை. அவர்களுக்கு இத்தகைய வாய்ப்புகளை வழங்கி, அவர்களை உற்சாகமூட்டும் தமிழ்த்துறையினரும் நமது வாழ்த்துக்கு உரியவர்கள். ஆண்டுதோறும் இவ்வாறு மேடையேற்றப்படும் நாடகங்களின் பிரதிகள் எதிர்காலத்தில் நூல்வடிவம் பெறுவது நல்லது.

○○○




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# நானும் அவளும்

## கேணிப்பித்தன்



அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. பல நாட்களாகவே போட்ட திட்டமிது. சுகாதாரத் திணைக்களத்தின் மலேரியாத் தடுப்பு இயக்கத்தில் கொழும்பில் வேலைசெய்து கொண்டிருந்தேன். நாங்கள் ஐவர். நால்வர் யாழ்ப்பாணத்தைச் சார்ந்தவர்கள். நாங்கள் நண்பர்களானோம். ஒன்றாக இருக்கத்தான் வீடு தேடினோம். எங்கள் அதிர்ஸ்டம் ஆளுக்கொரு திசையில் ஒவ்வொரு அறை கிடைத்தது. காலையும் பகல் உணவும் அலுவலகக் கன்ரீனில் எடுத்தோம். இரவு உணவு ஏதாவது ஒரு கடையில் பார்த்துக் கொண்டோம். வசதியான வேறு அறை தேடிக் கொண்டிருந்தேன். ஒரு வீட்டில் அறை இருப்பதாக நண்பர் மூலம் அறிந்தேன். அவரோடு சென்று நேர்த்தியாக கதைத்தோம். நல்ல பதில் கிடைத்தது. முற்பணம் கேளாது சம்மதித்தனர். அறையில் குடியேறிவிட்டேன். மாதமுடிவில் சம்பளம் எடுத்ததும் வாடகைப் பணத்தையும், மேலதிகமாக ஒரு மாத வாடகைப் பணத்தையும் கொடுத்தேன்.

நண்பர்களுடன் திட்டமிட்டவாறே கொழும்பு பாலத்துறைக்குச் சென்றோம். அங்குதான் கள்ளுக் கொட்டில்கள் இருந்தன. ஆளுக்கொரு போத்தல் கள்ளுக்கு சொல்லிவிட்டு மேசையில் அமர்ந்தோம். எங்களை யாருக்கும் தெரியாது. அதேபோல் அவர்களுக்கும் எங்களைத் தெரியாது. பெரிய கிளாஸ் ஐந்தும், மீன் பொரியல்களும் எங்கள் முன் வைக்கப்பட்டன. கள்ளை கிளாசினுள் ஊற்றிச் சுவைத்தோம். ஒருபுளிப்பும் இல்லை. இனிமையாகவும் நல்ல சுவையாக இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அரைக்கிளாஸ்வரை உள்வாங்கி விட்டோம். நாலைந்து மீன் பொரியல்களும் கூடவே போய் விட்டன. பழைய நினைவுகள், அனுபவங்கள் வெளிவந்தன. பாளைவெள்ளையன் வயிற்றினுள் போனால் மனதினுள் புதைந்து கிடக்கும் அனைத்துதம் வெளிவந்து கொப்பளிக்கும். எனது கையில் மட்டும் மணிக்கூடு இல்லை. ஒரு முக்கால் மணிநேரம் பறந்தோடியது.

எனக்கு இதுதான் புதுப்பழக்கம். கொஞ்சம் கொஞ்சமாக போத்தல்கள் வெறுமையாகின. உரிய பணத்தினை முத்துக்குமார் கணக்கிட்டு முன்கூட்டியே எல்லோரிடமும் பெற்றிருந்தார். அவரின் தலைமையிலே சென்றோம். அவர் எழுந்து பணத்தினைக் கொடுத்துவிட்டு மலேவீதிக்குச் சென்றோம். அருமையான உணவினை உண்டோம். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திறமை மிக்கவர்கள் உணவகங்களைக் கொழும்பில் நடத்தினர். பாயில் இருந்து உண்ணவேண்டும். வாழையிலையில் உணவு பரிமாறுவார்கள். கோழிக்கறி சமைப்பதற்கு அவர்களை விட்டால் வேறுயாருமில்லை. ருசித்து உண்டோம். உணவகங்கள் சிறியவை. உணவினை உண்டவர்கள் கைகளைக் கழுவிவருமுன் அடுத்த பந்திக்கானவர்கள் அமர்ந்து விடுவார்கள். அன்று மட்டுமில்லை. இன்றும் வெளியூர்களில் கடமையமற்றும் அரச அலுவலர்களின் நிலை இதுதான்.

மூன்று மணியளவில் எங்கள் இருப்பிடங்களுக்குப் பேருந்தில் பிரிந்து சென்றோம். நான் சொர்க்கத்தில் உலாப்போவதுபோல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்தேன். ஒருவாறு நானிருக்கும் வீட்டை அடைந்துவிட்னே. எனது அறைக்கு வீட்டின் பின்புறமாகச் செல்லலாம்.. வீட்டில் உள்ளவர்கள் என்மேல் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தனர். அதனைக் காப்பாற்றவும் வேண்டும். விழப்போன என்னை என்னிரு கைகளும் சுவரில் முட்டுக்கொடுத்துக் காப்பாற்றின. உலகம் சுற்றுவதை படித்திருக்கிறேன். ஆனால் இன்று என் கண்முன்னால் சுற்றுச் சூழல் எல்லாம் சுற்றி வந்தது. அதனால் குடலைப் பிய்த்துக் கொண்டு ஓங்காளித்துச் சத்தி கொட்டியது. எங்கும் கள்ளின் நெடி. தொடர்ந்து நிற்க முடியாது தடுமாறினேன்.

தலைவெடிக்குமாப் போல் வலித்தது. வீட்டினுள் இருந்து இரண்டு தலைகள் எட்டிப் பார்த்தன. "பாவம் ஒரு கதிரையைக் குடு. அவர் விழப்போறார். கெதியாக்குடு." குரல் கேட்டது. அவர்கள் அப்படியே என்னைப் பிடித்துக் கதிரையில் இருத்திவிட்டனர். வாளி நிறையத் தண்ணீரும் வந்தது. "ஆபத்துக்குப் பாவமில்லை. எங்கட வீட்டில் இருக்கிறார். உதவி செய்வம்". கூறிக்கொண்டு தண்ணீரை முகத்தில் அடித்துப் பலமுறை கழுவினார். உதவியவர்களின் முகங்களையும் பார்க்க வில்லை. சுவரில் முட்டுக் கொடுத்திருந்த தலையை நிமிர்த்த முடியாதிருந்தது. எனது தலையை நிமிர்த்தி எலுமிச்சம் புளியைத் தலையில் தேய்த்தனர். என் தலையில் தண்ணீரை ஊற்றிக் குளிப்பாட்டினர். எனது அறையில் இருந்து உடைகளை எடுத்து வந்தனர். தலையைத் துவட்டி உடைகளை மாற்றச் செய்தனர். சத்தி நிற்கவில்லை. அடிக்கடி சத்தி வந்தது. அது நிற்கவில்லை. அது நிற்கும்வரை அப்படியே வெளியில் கதிரையில் இருந்தேன். ஒருவாறு குறைந்தது போல் தெரிந்தது. வாயை நன்றாகக் கொப்பளிக்க வைத்து எலுமிச்சம்பழச் சாற்றைப் பிழிந்து பருக்கினார்கள்.

குடித்துவிட்டு அப்படியே இருந்தேன். சற்று நேரத்தில் முகத்தையும் கழுவிக்கொண்டு அறையினுள் தட்டுத்தடுமாறி சென்று கட்டிலில் கிடந்தேன். உடைகளை அப்படியே விட்டு வந்தேன். அடுத்த நாள் மாலை ஐந்து மணிக்கே எழுந்து உடைகளைக் கழுவத்தேடினேன். ஆனால் அவற்றைக் கழுவிக் காயவைத்து அயன் பண்ணி மடித்துக் கட்டிலில் வைத்திருந்தனர். மாலை குளித்து உடைகளை மாற்றிக் கொண்டு ஒன்றும் நடக்காததுபோல் வெளியில் சென்றுவந்தேன். கடையில் எனக்காக வைத்திருந்த ஆனந்தவிகடன் கல்கி ஆகியவற்றை எடுத்துக் கொண்டு வந்தேன். எந்த உணவைக் கண்டாலும் குமட்டிக் கொண்டே வந்தது. அறைக்குச்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றேன். சற்று இருந்துவிட்டு உறங்கி விட்டேன். நேரத்துக்கே எழுந்து அலுவலகம் சென்றேன்.

அலுவலகம் முடிந்து மாலை நேரம் பிந்தியே அறைக்கு வந்து குளித்துவிட்டு அறையினுள்ளேயே இருந்தேன். கதவில் தட்டுவதைக் கேட்டேன். கதவைத்திறந்தேன். "உங்களை எங்கள் அப்பா வரச்சொன்னார்". சொல்லிவிட்டுச் சுணங்காமல். அந்தப்பிள்ளை. சென்றுவிட்டார். எனக்கு உடலெல்லாம் வெயர்த்துக் கொட்டியது. வீட்டை விடச் சொன்னாலும் ஒருமாதம் அவகாசம் கேட்கலாம். இந்த வீட்டிலும் மூன்று பெண்பிள்ளைகள் இருக்கிறார்கள். என்னைக் கண்டதும் அந்தப் பெரியவர்.

"வாங்க அருள். என்ன மனதில் குழப்பமா? காலையில் வேளைக்கே எழுந்து சொல்லாமல் போய்விட்டீர்கள். வந்ததும் கலகலப்பாக 'கரம்போட்' விளையாடுவீங்க. இன்றைக்கு அறையில் அடைந்து கிடக்கிறீங்க. ஏன் இந்த மாற்றம்."? வீட்டுக்காரர் திரு. டேவிட் கேட்டார். எனக்குப்போன மூச்சுத்திரும்பியது.

"உடல்நிலை நல்லாக இல்லை. அதுதான்" என்றேன்.

இருவரும் கதைத்துக் கொண்டிருக்கும் போது தேநீர் வந்தது. தேநீரை நீட்டியவாறே "உங்களுக்குத்தான் குடியுங்க" குயிலின் குரல் ஒலித்தது. அப்பொழுதுதான் ஒலி வந்த பக்கம் என் பார்வை சென்றது. அதேமுகம் நேற்று உதவியது பொறியாகத் தட்டியது. வெட்கம் முகமெல்லாம் பரவியது. மாலை வேளைகளில் எல்லோரும் சேர்ந்து கரம்போட் விளையாடுவோம். சிலவேளைகளில் திரு. டேவிட் அவர்களும் சேர்ந்து விளையாடுவார். தான் தோற்கப் போகிறார் என்று தெரிந்தால் மெல்ல நழுவிச் சென்றுவிடுவார்.

முன்ஹோலில் கரம்போட் இருந்தது.

"வாங்க ஒருகை விளையாடுவோம்." திரு. டேவிட் அழைத்தார்.

நானும் அவரும் எதிரெதிரே அமர்ந்தோம். ஆனால் அவரின் மூத்த மகள் றோஸ்னி வந்ததும் இடத்தை மாற்றினார். எனது சோடியாக றோஸ்னி இருந்தார். பல நாட்கள் சோடியாக சேர்ந்து விளையாடுவோம். நாங்களே வெற்றி பெறுவோம். இன்று எனது சோர்வையும், மன உறுத்தலையும் முகம் காட்டியது. ஆட்டம் தோல்வியை நோக்கிச் சென்றது, நான் சாப்பட்டு விட்டு வருகிறேன்." கூறிக்கொண்டு எழுந்தேன்.

"உங்களுக்கும் இங்கேயே எங்களோடு அப்பா சாப்பாடு ஒழுங்கு செய்து விட்டார். வாங்க சாப்பிடுவோம்." றோஸ்னிதான் அழைத்து விட்டு எழுந்து சென்றார். எனக்கு சங்கடமாக இருந்தது.

உங்களின் கௌரவமெல்லாம் ஞாயிறோடு போய்விட்டது. அதையெல்லாம் தூக்கி அங்கால போடுங்க. இப்ப வாங்க சாப்பிடுவோம்" றோஸ்னி விடாப்பிடியாக நின்றார்.

சமாளித்தும் முடியாமல் சாப்பாட்டு மேசைக்குச் சென்றேன். தட்டில் போட்ட உணவில் பாதியாகக் குறைக்கும்படி கூறினேன்.

"முடியுமட்டும் சாப்பிடுங்க. பிறகு பார்ப் போம்.. நானும் உங்களோடு இருந்து சாப்பிடப் போறன். வாங்க"

விடாப்பிடியாக றோஸ்னி நின்றார். உணவைக் கண்டதும் கள்ளு நினைவே முன்வந்தது.

"எல்லாத்தையும் மறந்து என்னைப் பார்த்துக் கொண்டே சாப்பிடுங்க. நானே சமைத்தேன். ருசியாக இருக்கும்.. ஒரு வாய் சாப்பிட்டால் சாப்பிடத் தூண்டும். நீங்க முதல் சாப்பிடுங்க. சாப்பிட்டால்தான் நான் சாப்பிடுவேன்."

றோஸ்னி பார்த்துக் கொண்டே இருந்தாள். வேறு வழியில்லாமல் சாப்பிடத் தொடங் கினேன். நான் இரண்டு வாய் சாப்பிட்ட பின்தான் அவள் சாப்பிடத் தொடங்கினாள். நான் பதுங்கிப் பதுங்கிச் சாப்பிடுவதைப் பார்த்து என்னை இடைக்கிடை 'சாப்பிடுங்க" என்று துரிதப்படுத்திக் கொண்டே இருந்தாள். என்னைத் தொட்டுக் கழுவிய ஒரு கன்னிப் பெண் தாயைப்போல் என்னைக் கவனிப் பதையிட்டுச் சிந்தித்தேன். இதுதான் பெண்மை என்பதா? நாட்கள் மெல்ல நகர்ந்தன. என்னை அறியாத ஒரு பாசம் றோஸ்னியின்மேல் பூத்தது. அவள் அழகு ரோஜாவாகத் தெரிந்தாள். உடலாலும் உள்ளத்தாலும் மேலோங்கி நின்றாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஞாயிறு நடந்த விசயங்கள் அம்மா, அப்பாவுக்குத் தெரியுமா”? என்றேன்

“இல்லை. நான் யாரிடமும் சொல்லவில்லை. சொல்லி உங்கட மரியாதையை குறைக்க விரும்பவில்லை. எனது தங்கையும் என்னோடு உங்களுக்கு உதவிசெய்தாள். அவள் யாருக்கும் சொல்லமாட்டாள். நீங்க சாப்பிடுங்க. நாங்க சாப்பிட்ட பிறகுதான் மற்றவர்கள் சாப்பிடுவார்கள்”. இப்படிக் கூறியே என்னைச் சாப்பிட வைத்துவிட்டார். நாளை மாலை பொறலை கோயிலுக்குப் போகலாம் வருவீங்களா”? றோஸ்னி கேட்டார். தலையை ஆட்டினேன். இரவு முழுவதும் றோஸ்னியைப் பற்றிய சிந்தனையிலேயே கிடந்தேன். உறங்கியதே தெரியவில்லை.

அதிகாலை வேளைக்கே எழுந்தேன். எனக்கே என் நடத்தைகள் விசித்திரமாகத் தெரிந்தன. காலை உணவு மேசையில் இருந்தது. றோஸ்னியும் வந்தார். அந்தக் காலத்தில் இப்போது சொல்வதுபோல் வேலை முடிந்து அறைக்குச் சென்றேன். குளித்துக் கோயிலுக்குச் சென்றேன். றோஸ்னியோடு அவர் தங்கையும் வந்தார். அவர்களைப் போல் நானும் வணங்கினேன். அப்படியே கொழும்பு செட்டித்தெருவில் உள்ள முருகன் கோயிலுக்குச் சென்றோம்.

இரண்டு பூமாலைகள் வாங்கினோம். முருகன் முன்னிலையில் அவரையே சாட்சியாக வைத்து ஒரு அர்ச்சனையை செய்து மாலை மாற்றினோம்.. தங்கை எலிசபெத்துக்குப் பெருமகிழ்ச்சி. அப்படியே ஐஸ்கிறீம் சுவைத்து விட்டு வீடு சென்றோம். கதைக்க வேண்டியவற்றை மனம் விட்டுக் கதைத்தோம். நான் எனது வீடு சென்று எனது பெற்றோரிடம் அனுமதி பெற்று கொழும்பு வந்தேன். அது அறுவடை காலம் அதனால் எனது வீட்டில் இருந்து யாரும் வரமுடியாது. இதனை றோஸ்னியிடம் கூறினேன் அவள் மறுப்புமின்றி ஏற்றுக் கொண்டாள். தனது பெற்றோரிடம் கூறினாள்.

எனது மனைவி றோஸ்னி ஒரு அதிசயப் பிறவி. உற்றார் உறவினரை அனுசரித்து உபசரிக்கும் பேறு பெற்றவள். அவள் திடீரென சுகவீனம் அடைந்தாள் எனக்கு வாய்த்த மனைவி றோஸ்னி ஒரு அற்புதப் பிறவி. அவள் றோமன் கத்தோலிக்க சமயம். தன் சமயத்தில் நல்ல ஈடுபாடு கொண்டவள் ஒழுக்கத்திலும், வீட்டுக்கு வருபவர்களை உபசரிப்பதிலும் சிறந்தவர். என்னைப் பற்றிக் கூறியதும் நமது மனம்தான் எல்லாம். எனக்கு எம்மதமும் சம்மதம்தான். கவலையை விடுங்கள். ஒன்றிய மனத்தோடு இன்ப துன்பங்களை எதிர்கொள்வோம் என்று என்னைக் கைப்பிடித்தார். எனக்குக் கணவன் என்ற பட்டத்தை தந்த முதல் பல்கலைக்கழகம். தலைமகனாய் அருள்பாஸ்கரனை ‘ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்ட தாயாக’ பெருமையைத் தேடிக்கொண்டார். பல உயிர்களைக் காக்கும் டாக்டராக இளைய மகன் அருள்முரளியை ஈன்று சேவைக்காக தந்து என்னோடு நாற்பது ஆண்டுகள் வாழ்ந்து பூவோடும் பொட்டோடும் பூவுலகம் விட்டுப் போய்விட்டார்.

உயிருக்கு உயிராக என்னை நேசித்து, தாயாகத், தாரமாக இணைந்திருந்தவர். அவரை எவரும் வெறுத்ததில்லை. எல்லோருக்கும் உதவுபவர். அன்பு காட்டுபவர். ஊன்றுகோலாய் இருந்தார். உதிர்ந்துவிட்டார். கொழும்பில் பிறந்து வளர்ந்து, படித்து வாழ்ந்தவர் நான் போகும் இடமெல்லாம் என்னோடு வந்து சந்தோசமாக வாழ்ந்தார். தன் பிள்ளைகளுக்காக கௌரி விரதமும் பிடித்துக் காப்பும் கட்டுவார். கற்பூரம்போல் குடும்பத்துக்காக உருகிக் கரைந்தவர். நான் 100 ரூபா சம்பளத்தை எடுத்துக் கொடுக்கும்போது எனது முகத்தின் வாட்டத்தைக் கண்டு ஆறுதல் அளித்த தேவதை. பல்கலைக்கழகப் பட்டம் பெற்றதும் அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. நாடு வன்செயலில் சிக்கியபோது ஆலங்கேணி மக்களோடு காடுகளில் கல்லிலும், முள்ளிலும் திரிந்தவர். இன்னும் எத்தனையோ உண்டு. எனது குடும்பத்துக்காக உழைத்த பெருமாட்டி. அவர் புகழை இந்த சிறுகதையினுள் சிறைப்படுத்த முடியவில்லை. நானே எனக்குள்ளேதான் கேட்டுக்கொள்ளும் கேள்வி அவளுக்காக நான் என்ன செய்தேன்? என்பதுதான்.

○○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3 சிங்கச் சல்லி 1 துட்டு



3 அரைசதங்கள் (3 சல்லி) ஒரு துட்டு

சிங்கச்சல்லி அல்லது சல்லி என்பது அரை சதத்தைக் குறிப்பதாகும். அதாவது 3 சல்லிகளின் பெறுமதியான ஒன்றரை சதம் ஒரு துட்டு ஆகும். அரைச் சதத்துக்கு 'சிங்கச்' சல்லி என்று இலங்கைக்குரிய அடையாளத்தைக் குறித்து 'சிங்க' என்னும் அடைமொழி வழக்கிலே இருந்துள்ளமை கவனிக்கத்தக்கது. அடுத்துக் கூறப்பெற்றுள்ள 'சின்னச் சல்லி' பற்றிய சரியான தெளிவை பெறமுடியவில்லை. 'சின்ன சல்லி' நாணயம் எது? அதன் பெறுமதி யாது? என்தை அறிந்தவர்கள் எமக்கு ஆதாரங்களுடன் அறியத்தரவும்.

### 4 துட்டு 1 பணம்

ஒரு பணம் என்பது, 6 சதம் அல்லது 12 சிங்கச்சல்லி அல்லது 4 துட்டு ஆகும். இலங்கையிலே, குறிப்பாக யாழ்ப்பாணத்திலே இந்தப் 'பணம்' என்னும் அளவை ஆங்கிலேயருக்கு முன்னர் ஒல்லாந்தர் காலத்திலும் பயன்பாட்டிலே இருந்துள்ளது.



ஒல்லாந்தர் வெளியிட்ட யாழ்ப்பாண பிரதேசத்துக்கான 2 - STUVER நாணயம். இதிலே VOC சின்னத்துக்கு மேலே யாழ்ப்பாணத்தைக் குறிக்கும் I (Iaffna) என்ற எழுத்தைக் காணலாம். 1783ஆம் ஆண்டுக்குரிய இந்த நாணயத்தின் இலங்கைப் பெறுமதி அரை பணமாகும்.



அரை பணம்

2 - STUVER

### 12 பணம் 1 இறையால்

ஒரு இறையால் என்பது, 72 சதம் ஆகும். ஏறத்தாழ முக்கால் ரூபாய் ஆகும். 'இறைசால்' என்பது 'இறையால்' என்று மருவியுள்ளது. இறைசால் என்பது குறிப்பாக இலங்கை – யாழ்ப்பாணத்துக்கு உரிய பண அளவீடாகும். தற்காலத்திலே எவ்வாறு ரூபாய் என்பது பணத்தின் அடிப்படை அலகாக இருக்கின்றதோ, அதேபோன்று 400–500 ஆண்டுகளுக்கு முன்னர் இறைசால் பணத்தின் அடிப்படை அலகாக இலங்கையில் தமிழர் வாழும் பகுதியிலே இருந்துள்ளது. போர்த்திக்கேயர் நல்லூருக்கு படையெடுத்துவர முதலாம் சங்கிலி மன்னன் வன்னிக்காட்டுக்குள் ஒளிந்தான். அவனைப் பிடித்துத் தருபவர்களுக்கு 25,000 இறைசால் கொடுப்பதாக போர்த்திக்கேயர் பறைசாற்றிய செய்தியை யாழ்ப்பாண வைபவமாலை நூலிலே கண்டுகொள்ளலாம்.


இந்தச் செய்தியை அறிந்தபோதே **பரராசசேகர மகாராசன் கையில்** வாளுடன் வன்னியிற்காட்டுக்கோடிப் போனான். ''அவ்வரசனைப் பிடித்துத் தருபவனுக்கு 25,000 இறைசால் உபகாரம் தருவோம்'', என்று பறங்கிகள் கூறினார்

இறையால்— முக்கால்ரூபாவுக்குச்சரியாக முன் இலங்கையிலே வழங்கிவந்த ஒருநாணயம். [இறைசால் என்றும் வழங்கப்பட்டது.]

யாழ்ப்பாண வைபவமாலையில் 'இறைசால்' பற்றிய செய்தியும், தமிழ்ச்சொல் அகராதியில் 'இறையால்' என்பதற்கான பொருளும் இங்கு தரப்பெற்றுள்ளன.

ஒல்லாந்தர்களும் இலங்கையிலே வழக்கிலிருந்த 'இறையால்' என்னும் பணப்பெறுமதிக்கு தங்களின் நாணயங்களைச் சரிசெய்து பயன்பாட்டிலே விட்டிருந்தார்கள் என்பதை அவர்கள் 1796ஆம் ஆண்டு வெளியிட்ட காசுக் குறிப்பிலே காணலாம்.



Ceylon Currency - British Period (1796-1936) by B.W. Fernando - 1939 Page - 24-25 நூலிலிருந்து பெறப்பட்ட படம். 1796இல் ஒல்லாந்தர்கள் தமது VOC நாணயங்களின் பெறுமதிக்கு இணையாக இறையால் பெறுமதியை குறித்துள்ளதைக் காணலாம்.

### 16 பணம் ஒரு ரூபாய்


16 பணம் என்பது 96 சதம் ஆகும். காலப்போக்கிலே 16 பணம் என்பது 100 சதம் கொண்ட ஒரு ரூபாயாக சமன் செய்யப்பட்டுள்ளது என்பதை உய்த்தறிய முடிகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/News/29/2024

## பாலகணித நூல் பயிற்சி

1849ஆம் ஆண்டு சிறுவர்களுக்காக வெளியிடப்பட்ட பாலகணித நூலிலே காணப்பெறும் பின்வரும் அப்பியாசத்தை நோக்குவோம்.


பாலகணித நூலிலுள்ள அப்பியாயம்

| இறையால் | பணம் | துட்டு | சல்லி |
|---|---|---|---|
| 13 | 4 | 0 | 0 |
| 8 | 5 | 3 | 2 |
| 7 | 3 | 3 | 0 |
| 30 | 7 | 0 | 2 |
| 11 | 6 | 0 | 1 |
| 71 | 2 | 3 | 2 |

இங்கு காட்டப்பட்ட பெறுமதியை கூட்டுமாறு கூறப்பட்டுள்ளது. இடதுபுறத்திலுள்ள சல்லிகளைக் கூட்டும்போது 5 பெறப்படும். 3 சல்லி என்பது ஒரு துட்டு ஆகையால் 5 சல்லி என்பது ஒரு துட்டும் 2 சல்லியும் ஆகின்றன. ஆகவே 2 சல்லியை எழுதி துட்டு ஒன்றை துட்டுக்களுடன் சேர்க்க 7 துட்டுக்கள் வரும். 4 துட்டு என்பது ஒரு பணம் ஆகையால், 7 துட்டு என்பது ஒரு பணமும் 3 துட்டும் ஆகும். 3 துட்டை எழுதி பணம் ஒன்றை சேர்த்துக்கூட்ட 26 பணம் வருகின்றது. 12 பணம் என்பது ஒரு இறையால் ஆகையால், 26 பணம் என்பது 2 இறையாலும் 2 பணமும் ஆகும். இறுதியிலே இரண்டு இறையாலைச் சேர்த்துக்கூட்ட 71 இறையால் பெறப்படும். ஆக இதன் மொத்தப் பெறுமானம் 71 இறையால், 2 பணம், 3 துட்டு, 2 சல்லி என்றாகிறது. தற்காலத்திலே அனைத்தும் 10ஐ அடியாகக் கொண்ட தசமதானத்திலே உள்ளன. இவற்றுக்கு மேலாக பண்டையகால மக்கள் பயன்பாட்டிலிருந்த ஐரோப்பிய நாணயப் பெறுமதிகளான பவுன், பார்திங், பென்னி, சிலிங்கு, கின்னி, ஸ்டுவியர் போன்றவற்றையும், இந்தியப் பணப்பெறுமதிகளான, பைசா, அணா, வராகன் போன்றவற்றையும் நாணயமாற்றுகருதி அதற்கு நிகரான இலங்கை நாணய பெறுமதியையும் அறிந்திருந்தார்கள்.


இலங்கையிலே 350 வருடங்களுக்கு முன்னர் குதிரை ஒன்றின் விலை 25 இறைசால் (18 ரூபாய்) மற்றும் யானை ஒன்றின் விலை 300 இறைசால் (216 ரூபாய்) பெறுமதிகளைக் கொண்டிருந்தன என்பதை க. வேலுப்பிள்ளை எழுதிய யாழ்ப்பாண வைபவ கௌமுதி என்னும் நூலின்மூலம் அறிய முடிகிறது.

1697-ம் ஆண்டில் நெடுந்தீவில்மட்டும் 500 குட்டிகள்வரையில்நின்று வளர்ந்தன. பருவமான குதிரைகளைக் கயிறெறிந்து பிடிப்பித்து வடதேசத்துக்குஅனுப்பி விற்றுவந்தனர். ஒல்லாந்த போர்வீரராலும் இக்குதிரைகள் உபயோகிக்கப்பட்டன. தஞ்சாவூர் அரசனுக்குக் கம்பனியார் உபசாரமாய் அனுப்பிவந்த இரு அராபிய குதிரைக்குப்பதிலாய் நெடுந்தீவுக்குதிரைகளும் சிலவேளை அனுப்பப்பட்டனவென்றால் இக்குதிரைகள் அக்காலம் விசேடித்தனவாயேயிருந்தனவென்பது தோன்றும். விலையைநோக்கின் குதிரை ஒன்று 25 இறைசால்வரையிலே விற்கப்பட்டது. யானைகளின்விலை 300 இறைசால்வரையில். இவ்விலை நம் காலத்தாருக்கு மிகக் குறைவுபோற் றோற்றினும் நெல்விலை அக்காலம் பறையொன்று ஆறுபணம் [அரை இறைசால்]வரையில் மாத்திரமே என்பதனால் அக்காலப் பணத்தின்பெறுமதி எவ்வளவென்பது விளங்கும்.

யாழ்ப்பாண வைபவ கௌமுதி - க. வேலுப்பிள்ளை பக்கம் 131

## போட்டி

1849ஆம் ஆண்டு வெளிவந்த பாலகணித நூலிலுள்ள இங்கு தரப்பட்டுள்ள இலங்கை நாணயம் சார்ந்த கூட்டல் பயிற்சிக்கான சரியான விடையை அனுப்பி வைப்பவர்களில் ஒருவருக்கு ஆயிரம் வருடங்கள் பழைமையான ராஜராஜசோழனின் நாணயமொன்று பரிசாக அனுப்பி (இலங்கை விலாசத்துக்கு) வைக்கப்படும். 25-03-2024க்கு முன்னர் விடைகள் ஞானம் சஞ்சிகை காரியாலயத்துக்கு கடிதம் மூலம் வரல்வேண்டும். குலுக்கல் முறையிலே வெற்றியாளர் தெரிவுசெய்யப்படுவார். இங்கு காட்டப்பட்டுள்ள நாணயம் வெற்றிப்பரிசாக அனுப்பிவைக்கப்படும்.





தொடரும்

ISSN 2478-0340
9 772478 034009
PRINTED BY UNIE ARTS (PRIVATE) LTD., COLOMBO 13. TEL: 0112330195

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org